உ

சிவமயம்.

# நற்குணசீலன்

அல்லது

கரு. சா. வெ. சுப.

# இராமநாதன் செட்டியார் சரித்திரம்.

இஃது

இரங்கோன் "சுதேசபரிபாலினி"

பத்திராதிபர்

புரசை - ஏகாம்பர முதலியாரால்

இயற்றியது.

Madras:

THOMPSON AND CO.

1908.

398

உ

சிவமயம்.

# நற்குணசீலன்

அல்லது

கரு. சா. வெ. சுப.

# இராமநாதன் செட்டியார் சரித்திரம்.

398

இஃது
இரங்கோன் "சுதேசபரிபாலினி"
பத்திராதிபர்
புரசை — ஏகாம்பர முதலியாரால்
இயற்றியது.

Madras:
THOMPSON AND CO.
1908.

[Copy right reserved.] [இதன் விலை அணா 1.

398



# முகவுரை.

நல்லவிவேகம், உயர்ந்த அறிவு, சாந்தமான குணம், பொறுமையான சுபாவம் களங்கமற்ற நடவடிக்கை, நாணயத்தை உயிர்போல் காப்பாற்றுவது, வர்த்தகத்தில் சிறந்த சாமர்த்தியம், கஷ்டங்களை எதிர்த்துச் சகித்தல், பெரியோர்களுக்குக் கீழ்ப்படிந்து நடத்தல் முதலிய, மேலான குணங்களுடனே வாழ்ந்த நமது முன்னோர்களின் சரித்திரங்களை நாமும் நமக்கு பின்வருகிறவர்களும் அடிக்கடி வாசித்துவருவதினால் அப்படி வாசிக்கப்பட்டவர்களுக்கும் அந்த நற்குணங்கள் உண்டாவதற்கு ஹேதுவாகும்.

நமது நாட்டுக்கோட்டை நகரத்தார்களில் அநேக பெரிய மனிதர்கள் மேலேகண்ட நற்குணங்களுடன் வாழ்ந்து சத்புருஷர்களாக இருந்திருக்கிறார்கள். இப்போதும் அநேகர்கள் இருக்கிறார்கள்.

இராமர் சரித்திரமாகிய இராமாயணத்தை வாசிப்பவர்களுக்கு சகோதர பாவமுதலிய நற்குணங்களும், அரிச்சந்திரன் சரித்திரத்தை வாசிப்பவர்களுக்கு சத்தியவாக்குப் பரிபாலனம் என்ற நற்குணமும், சங்கரர், ராமானுஜர், ஞானசம்பந்தர், அறுபத்துமூன்று நாயன்மார் இவர்கள் சரித்திரங்களை வாசிப்பதினால், மத சம்பந்தமான பக்தியும் கடவுள் விசுவாசமும் தற்காலத்திய கனம் தாதாபாய் நௌரோஜி, சுரேந்திர நாத் பானர்ஜி, பாலகங்காதர திலகர், பாபுபிபின்சந்திரபாலர், லாலா லஜபதிராய், ஜி. சுப்பிரமணியம், முதலிய தேச-

9798

பிமானிகளின் சரித்திரங்களை வாசிப்பதினால், அவர்களைப்போன்ற தேசாபிமானமும், பரோபகார சிந்தையும் உண்டாவது நிச்சயமல்லவா ?

அதுபோலவே நமது நாட்டுக்கோட்டை நகரத்தார்களில் சிறந்த குணங்களுடன் வாழ்ந்த நமது இராமநாதன் செட்டியார் போன்றவர்களின் உத்தம சரித்திரங்களை அந்த நகரத்தார்களும் மற்றவர்களும் வாசித்துவந்தால் அவர்களைப்போன்ற வர்த்தகபுத்தியும் நற்குணங்களும் உண்டாவதில் தடை என்ன ?

ஆகையால் மகா புத்திசாலியும் நற்குணசீலனுமாகிய இந்த இராமநாதன் செட்டியார் சரித்திரத்தை நடந்தது நடந்தபடியே அதிக சிரமப்பட்டு எழுதி முடித்திருக்கிறோம்.

எனக்கு சிநேகிதர்களான அநேக நாட்டுக்கோட்டை நகரத்து சிநேகிதர்கள் கேட்டுக்கொண்டபடி இந்த அருமையான புஸ்தகத்தை அச்சிட்டு வெளிப்படுத்தலானோம். அபிமானிகள் இந்தப்புஸ்தகத்தை வாங்கி எனக்கு தைரியம் உண்டாக்கும்பட்சத்தில் இதின் இரண்டாம் பாகத்தையும் இன்னும் இது போன்ற சிறந்த வேறு புஸ்தகங்களையும் சீக்கிரம் வெளியிடத் தயாராயிருக்கிறோம்.

இப்படிக்கு,

புரசை-ஏகாம்பர முதலியார்,

பத்திராதிபர்,

" சுதேசபரிபாலினி,"

இரங்கோன்.

உ

சிவமயம்.

வந்தே மாதரம்.

# நற்குணசீலன்

அல்லது

கரு. சா. வெ. சுப.

# இராமநாதன் செட்டியார் சரித்திரம்.

---

## முதற் பாகம்.

---

### முதல் அத்தியாயம்.

தேவகோட்டைப் பட்டணமானது சில வருஷங்களுக்குமுன் இப்போதிருக்கிற மாதிரியாக இத்தனை பெரிய மாடமாளிகைகளும், அலங்காரமான கட்டிடங்களும், சந்தை, கோவில், தெப்பக்குளம், கலெக்டராபீஸ், ரிஜிஸ்டிரேஷன் ஆபீஸ் முதலிய சவுகரியங்களும் உள்ளதாக இருக்கவில்லை. ஆனால் நமது சரித்திரம் நடக்குங் காலத்திலுங்கூட தபால் தந்தி வசதிகளும், மற்றும் குடும்ப வாழ்க்கைக்கு வேண்டிய சவுகரியங்களும் உள்ளதாக இருந்ததோடு இப்போதிய சவுகரியங்களைவிட அதிக அனுகூலத்தைக் கொடுக்க

கூடிய ஒற்றுமை, பரஸ்பர நம்பிக்கை, வீண்விவகாரங்களில்லாமை, தாழ்ந்தவனைக் கைதூக்கிவிடும் வழக்கம் முதலிய அநேக சிறந்த நற்குணங்களுக்கு மூலஸ்தானமாகவுமிருந்தது.

நமது தேவகோட்டையில் கருதாவூரணியிலிருந்து கண்டதேவிக்குப் போகிற பாதையிலிருந்து மேல்புறமாகப் பார்த்தால் சுமார் ரோட்டுக்குக் கால்மயில் தூரத்தில் ஒருபெரிய அலங்கார மாளிகை தோன்றும். அந்த மாளிகையின் முன்புறத்தில் கேட்டுவாசலின் முன்பாக வரிசைவரிசையாய் வாழைமரங்களும், மல்லிகை, ரோஜாச்செடிகளு மிருக்கும். அவ்வீட்டின் வாசலில் சற்றேறக்குறைய 50, 55 வயதுக்குட்பட்ட செட்டியாரும், அவருடைய வண்டிக்காரனுமாகப்பேசிக்கொண்டிருந்தார்கள். ஆனால் வீட்டுக்குள் அதிகக்கூட்டமான பந்துக்களும் ஜனங்களுமிருந்ததாகத் தெரியவில்லை. இரண்டொரு பெண்பிள்ளைகளும், இரண்டு சிறு பையன்களும், ஒரு பெண்குழந்தையும் இருந்தார்கள். ஆக இவர்களே அந்தக்குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். வண்டிக்காரனும், பெரிய செட்டியாரும் பேசிக்கொண்டிருந்த அன்றையத்தினம் காலை 8 அல்லது 8-30 மணிக்குப் பக்கத்து முற்றத்தில் விளையாடிக்கொண்டிருந்த பையன்களில் 10, 12 - வயதுள்ள இராமநாதனென்ற பையன் கையிலே ஒரு சிறு பந்தை வைத்து அங்கு மிங்குமாக வெறிந்து விளையாடிக்கொண்டிருந்தவன் வேறொன்றையோ பார்த்து வெறிந்ததில் பெரிய செட்டியாரோடு பேசிக்கொண்டு நின்ற



வண்டிக்காரன் பேரில்வந்து தொப்பென்று விழுந்தது. வண்டிக்காரன் உஸ்! அப்பா!! வென்று திரும்பிப்பார்க்கவும் பெரிய செட்டியார் "பயலேப் பள்ளிக்கூடத்துக்குப் போகச் சொன்னேனே யேம் பள்ளிக்கூடத்துக்குப் போகலே? வாத்திகண்டிப்பு இப்படி இருக்கு. புடிச்சா அவனையிங்கே ரெண்டு அடி அடிச்சுப் பள்ளிக்கொடத்துக்குப் போகச்சொல்லு" என்றார்.

உடனே வண்டிக்காரன் அவ்விடத்துக்குப்போய் "என்னடா ஏன் நீ பள்ளிக்கூடத்துக்குப் போகாமே வெளையாண்டுண்ணுதிரே? ஒங்க அப்பச்சி கூப்பிடுறாகவா" வென்று கையைப்பிடித்துக் கூட்டிக்கொண்டு வந்தான். சமீபத்தில் பையன் வந்தவுடனே செட்டியார் கையைப் பிடித்துக்கொண்டார். பையன் பந்து நாம் விளையாடினதற்குத்தான் கோபிக்கிறதென்று பயந்து நின்றான்.

செட்டியார்:—பள்ளிக்கொடத்துக்கு என்டா போகலே?

இராமநாதன்:—நம்ம அண்ணாமலே அண்ணன் வீட்டுக் கலியாணத்துக்கு இன்னைக்கு மத்தியானம் மாப்பிள்ளைவீட்டுச் சாப்பாடாகச்சே வெள்ளனமே போகவேணும் சாப்பிட்டிட்டு பள்ளிக்கொடத்துக்குப் போகலாமின்னு மெய்யாத்தா சொன்னா அதுனாலே தான் போகலே.

செட்டியார்:—சாப்பிட்டிட்டுப் பள்ளிக்கொடத்துக்குப் போகலாமின்னு தாஞ் சொன்னாரா? பந்தடிச்சும் வெளையாடச்சொன்னாரா?

இராமநாதன் :—இல்லே. நம்ம அடுத்தவீட்டுச் சுப்பய்யாவும், அவந்தம்பி கண்ணப்பனும் வந்தாங்க; சுப்பய்யா பந்துவச்சிருந்தான். அது சிமைப்பந்து; நல்லா இருந்திச்சு. நம்ம பந்தாட்டமா பொத்துப் பொத்தினு இருக்கா? வெசையா இருக்கா? இன்னு சும்மா அடிச்சுப் பார்த்தேன். அதுரெப்ப ஒசக்க கௌம்பி இங்கேவந்து விழுந்திருக்க, நான் பந்து வெளேயாடலே.

செட்டியார் :—சரி இப்பப்பந்து வண்டிக்காரன் மூதுனிலேவந்து விழுந்திச்சே பாதையிலேபோர சின்னஞ்சிறுசுகள், கண்ணுலே, காதுலேவிழுந்தா யென்னமா இருக்கும்? இனிமே வெளேயாடாதே? இப்ப வெளேயாண்டது ஒம்மேலே குத்தந்தானே?

இராமநாதன் :—ஆமா குத்தந்தான். இனிமே வெளேயாடலே.

செட்டியார் :—சரி இப்ப ஒனக்குப்பாடமென்ன?

இராமநாதன் :—மதுரைப்பதிற்றுப் பத்தந்தாதியிலே 32-வது பாட்டு.

செட்டியார் :—ஒரு பாடந்தானு?

இராமநாதன் :—இல்லே. அதிலே ஒருபாடம். பனிரெண்டாவது நெகிண்டிலே ஒருபாடம். ஆக நாளொன்னுக்கு மும்மூணு பாடம்.

செட்டியார் :—பழைய பாடங்களை மறக்காமச் சொல்லுவியா?

இராமநாதன் :—ஆமா—சொல்லுவேன்.



செட்டியார்:—எங்கே எதுலேயாவது ஒரு பாட்டுச் சொல்லு!

இராமநாதன் :—ஆகட்டுந் சொல்லுறேன்.

*இந்திரன் செம்மல் பண்டோர் இராவணன் என்பான் றன்னைச்
சுந்தரத் தோள்க ளோடும் வாலிடை யடக்கச் சுற்றி
சிந்துரக் கிரிக டாவித் திரிந்தனன் தேவ ருண்ண
மந்தர கிரியால் வேலை கலக்கினோ னைமந்த னென்றான்.

செட்டியார் :—சிந்துரக் கிரிகடாவி!—சிந்துரக் கிரிதன் தாவியா......இம்! நல்லாச் சொல்லி இருக்கார். என்று சந்தோஷப்பட்டுக்கொண்டு "சரி இனிமே சின்னப் பயகளோடே கூடிக்கினு வெளியபோயி வெயிலிலே திரிஞ்சு அலையாமே வீட்டுக்குள்ளே போயி இருபோ, காலாகாலத்திலே சாப்பிட்டுட்டுப், பள்ளிக்கொடத்துக்குப் போகலாம்" என்று சொன்னார்.

நாம் மேலேகூறிய இராமநாதனென்ற பையன் தான் நம்முடைய கதாநாயகன். இராமநாதன் சிறு வயதாக இருக்கும்போது அவனுடைய குடும்பமானது என்ன நிலைமையாயிருந்ததென அறிய எல்லோரும் ஆவல்கொண்டிருக்கலாம். அந்தக்குடும்பம் இராமநாதனுடைய தகப்பனார் சிறுவயதாக இருக்கும்போது நல்ல ஸ்திதியிலேதானிருந்தது. ஆனால் இராமநாதனுடைய தகப்பனுக்கு தகுந்தவயது வருவதற்கு முன்னாலேயே அவனுடைய பாட்டனார் காலஞ்சென்றுவிட்டபடியால், தூரதேசங்களிலுள்ள வியாபாரசாமான்களை கவனிக்கத் தகுதியான நம்பிக்கையுள்ள ஏஜண்டுகளேற்படாததால் அங்கங்கே

* கம்பர், இராமாயணம், அங்கதன் தூது.

கஷ்டங்களுண்டாகி கடனுடனில்லாவிட்ட போதிலும் சாமான்ய குடும்பமாகிவிடும்படி நேர்ந்தது. இராமநாதன் தகப்பனாரும் மஹா புத்திசாலி. அவர் தன்னுடைய யௌவனகாலத்தில் இக்குடும்ப பாரத்தை ஒப்புக்கொள்ளும்போது கடன் வகையராத்தொந்தரவுகளை ஒழுங்குபடுத்த வேண்டிய விஷயத்தில் அதிக சிரமமெடுத்துக்கொண்டு பெரிய மனுஷரோடு கலந்து, உறவாடி, நாணயத்துக்கொரு பங்கமில்லாமல் சரிப்படுத்திக் கொள்ளவேண்டிய சந்தர்ப்பம் நேரிட்டதினால்; அப்படியே சரிப்படுத்திக் கொண்டதோடு அந்தச் சிறுவயதிலேயே பெரிய மனுஷத்தனமும், அமைதியும், நல்ல சாந்தமும் அவருக்குண்டாய்விட்டது. இப்பேர்ப்பட்ட நற்குணமுள்ள நமது இராமநாதனுடைய தகப்பனார் தானும் முயற்சிசெய்து இரண்டொரு இடங்களில் பெரிய மனுஷருடைய உதவியின்மேல் வியாபார சாபாரங்களை ஆரம்பித்துக்கொண்டு தானிருந்தார். காலம் சரியாய் ஒத்துவராததினால் பெருத்த லாபங்கள் கிடைக்காவிட்டபோதிலும் கூடியவரையில் சமாராக நடந்துவந்தது. இவருக்கு வெகுநாள் குழந்தைகளில்லாமலிருந்து நமது இராமநாதனும் அவனுடைய தம்பியும் ஒரு பெண்குழந்தையும் அவருடைய நாற்பதாவது வயதிற்குமேல் பிறந்ததினால் குழந்தைகளின்மேல் அவருக்கு பிராணப்பிரியம். குழந்தைகளை கண்ணுங் கருத்துமாகப் பார்த்துவந்ததோடு நல்லொழுக்கங்களைப் போதிப்பதில் மற்றவர்களைப்போலில்லாமல் மிகுந்த அக்கரையெடுத்து நடத்திவந்தார்.



ஆகையால் நமது இராமநாதனும் அந்தச் சிறுவயதிலேயே வெகு புத்திசாலியாக வளர்ந்துவந்தான். நமது இராமநாதனுடைய பால்யவயது எப்படி நடந்து வந்ததென்று மற்றவர்கள் தெரிந்துகொள்வதினால் இப்போதைய சிறுவர்களுக்கு அநேக நல்ல புத்திகளுண்டாகுமாகையால் நாமிங்கே விவரமாகப் பிரஸ்தாபிப்போம்.

## இரண்டாம் அத்தியாயம்.

நமது இராமநாதன் மிகவும் நல்ல பையனென்று நாம் முன்னமே சொல்லி இருக்கிறோம். மற்றப் பையன்களைப்போல் விளையாட்டுப் பிரியமுள்ளவனல்ல. ஆனால் சுறுசுறுப்புள்ளவன். காலையில் வெகுநேரந் தூங்காமல் ஐந்துமணிக்கே படுக்கையைவிட்டெழுந்து தகப்பனார் சொல்லிக்கொடுக்கும் செவிப்பாடங்களை வெகு ஞாபகமாகக்கேட்டுக்கொள்வான். பழையபாடங்களைக்கேட்டால் மறதியில்லாது சொல்லுவான். தேவார திருவாசக முதலியவைகளில் நல்லபாட்டுகளாகச் சிலது ஞாபகமிருக்கும். அதைத் தகப்பனார் தாயார் மற்றப் பெரியமனுஷர் யாராவது தம்பி! தேவார திருவாசகங்களில் தெரிந்ததைச் சொல்லென்றால் நல்ல இனியகுரலோடும் அட்சர சுத்தியாயும் கேட்போர் மனதைக் கிரகிக்கும்படியாயும்

சொல்லுவான். தனது வேஷ்டி, தேகம் முதலானவைகளில் கொஞ்சமாவது அழுக்கடையாது மிகவு முஷாராக நடப்பதோடும் தினம் குளிக்காமலும் வேஷ்டிமாற்றாமலுமிருக்கமாட்டான். சிற்சில சமயங்களில் தகப்பனோடு கோவிலுக்குப் போவான். அப்படிப்போனால் சந்நிதியில் நின்று தேவாரந் திருவாசகங்களை நன்றாய் அங்கு வந்திருப்பவர்களின் மனது ஆநந்தமாகும்படி பாடுவான். கேட்டவர்களில் ஒருவராவது இவனை இன்னார்மகனென விசாரித்தறிந்து இவன் மீதளவற்ற ஆநந்தமுறாது செல்லமாட்டார்கள். தன் தாயார், தகப்பனார், மற்றயாராவது வீட்டிலுள்ளவர்கள் பலகாரபக்ஷணம் முதலானவைகளைக் கொடுத்து தம்பி! தங்கைக்குங்கொடு நீயுஞ் சாப்பிடென்று சொன்னாலுஞ் சரி, ஒன்றுஞ்சொல்லாது கொடுத்தாலுஞ் சரி வாங்கிய பதார்த்தத்தை தம்பி, தங்கை இருவருக்கும் ஜாஸ்தியாகவே அவர்கள் மனோபீஷ்டப்பிரகாரம் கொடுத்துத் தான் கொஞ்சமாக மீந்ததைப் புசிப்பான். ஏழைகள், பிச்சைக்காரர்கள் முதலியவர்கள் வந்தால் கையிலிருப்பதைத் தான் புசியாது அவர்களுக்குக் கொடுத்துவிடுவான். சாப்பாடுவேண்டுமென்று கேட்டால் தாயாருக்குத் தெரிவித்து அந்தச் சிரமத்தைத்தானே ஏற்று வந்த ஏழைகளுக்குத் தானே பரிமாறி உபசரித்தனுப்புவான். ஆனால் சிறுவயதிலேயே மிகுந்த கருணையுந், தயையும், பரோபகாரமும், உள்ளவனென்பது நமது முழுமனதுடன் எழுதக்கூடியதே.



நமது இராமநாதன் பள்ளிக்கூடத்தில் வாசித்து வரும்போது ஒரு நாளாகிலும் எவ்வித காரணங்களை முன்னிட்டும் பள்ளிக்குப்போகா திருக்கமாட்டான். அவ்விதம்போகிறவன் மற்றப் பையன்களைப்போல் ஐந்துமணிக்கே போகிறதுமில்லை. விடிந்து ஏழுமணிக்குத் தாமதித்துப் போகிறதுமில்லை. காலை ஆறுமணிக்குள்ளாக எழுந்து தந்தசுத்திசெய்து கொஞ்சம் ஆகாரம் பார்த்துக்கொண்டு பள்ளிக்குப்போவான். அவ்விதம் போனால் மற்றபையன்களோடு வீண்காலம் போக்காமல் எல்லாருக்கும் முன்னமே பாடம் ஒப்பித்துவிடுவான். அவனிடம் உபாத்தியாயர், சட்டாம்பிள்ளை இவர்களுக்கும், மற்ற எல்லாப் பையன்களுக்கும் மதிப்பும் கௌரவமுமுண்டு. இப்படி நடந்துவருமிடையில் ஒருநாள் அக்கிரமம் செய்த ஒருபையனை உபாத்தியாயர் கோதண்டராமத்தில் போட்டுத் தண்டனை செய்ய மேற்படிபையன் அழுதான். அச்சமயம் உபாத்தியாயர், ஒவ்வொரு பையனைப் பார்த்தார். இராமநாதன் கண்ணில் நின்று மட்டும் நீர் தாரை தாரையாக வடிந்துகொண்டிருந்தது. உபாத்தியாயர் உடனே அவனைப்பார்த்து ஏன் அழுகிறாயென்று கேட்டார். அதற்கவன் "ஐயா! கோதண்டராமத்தில் போட்டு அடிக்கிற நமது சப்பய்யாவுக்கு எவ்வளவு அவஸ்தையாக இருக்கமாட்டாதென்ற அனுதாபமே யென்மனதுக்கு ஆறுதலில்லாது அழுது கொண்டிருக்கிறேன். தங்களுக்கு தயவு இருக்குமானால் அவனைக் கீழிறக்கிவிட்டு அவனுக்குப்பதிலாக என்னைச் சிட்சை செய்யுங்க" ளென்றான். இவ்வார்த்தையைக் கேட்ட

உபாத்தியாயர் நமது இராமநாதன் மீது மிகுந்த கருணையும், அவன் புத்திகோசரத்துக்கோ ராச்சரியமும் அவனது ஒழுக்கம், தயாளம் முதலான நற்குணங்களுக்கு அளவற்ற பேரன்பு முள்ளவராய் அவனது வேண்டுகோளுக்காகவே சிட்சை செய்த பையனையும் விட்டுவிட்டார். அன்று முதல் அப்பள்ளிக்கூடத்தில் அவனுக்கு எல்லாரும் அச்சமும் நன்மதிப்பும் காட்டி வந்தார்கள்.

இவ்விதம் நடந்துவருங்காலத்தில் சிலகாலஞ் சென்று நமது இராமநாதன் சட்டாம்பிள்ளையாக நியமிக்கப்பட்டான். அப்படி நியமிக்கப்பட்டதின் மேல் பள்ளிப் பையன்களில் எவனாவது ஒரு தப்பிதம் செய்தால் எல்லாப் பையன்களையுமே உட்காரவைத்து, ஒவ்வொருவனுக்கும் நற்புத்தி கூறி இன்ன இன்ன விதம் நடக்கவேண்டுமென்று புத்தி புகட்டி நல்வழியிற் செல்லும்படி செய்துவருவான். உபாத்தியாயர் வந்தால் அவரிடம் சொல்லும் விஷயங்களை ஒழுங்காகவும், நியாயமாகவும், அவசியம் சொல்ல வேண்டியதுகளையுஞ் சொல்லுவான். பள்ளிப்பையன்கள் ஒவ்வொருவரும் நன்னடக்கையில் திரும்பி வருவதையும், அக்கிரமமின்மையும், கல்வி அறிவையும், உபாத்தியாயர் பார்த்து நமது இராமநாதன் மீது மிகுந்த சந்தோஷப்பட்டு பள்ளிக்கூடத்தில் நடக்கவேண்டிய சகலவேலைகளையும் அவனையே பார்த்து வரும்படிசெய்து மேற்பார்வையாக காலாகாலங்களில் வந்துபார்த்து விசாரித்து விட்டுப்போவார்.



ஒரு நாள் பள்ளிப்பையன்களில் ஒரு பையன் இன்னொருவனுடைய தூக்குக் கயிற்றைத் திருடித்தன் வட்டில் போட்டுக்கட்டிவைத்திருந்தான். அதைக்களவு கொடுத்த பையன் ஒவ்வொருவனுடைய தூக்காகப் பார்த்துவரும்போது ஒரு தூக்கில் இருந்த வட்டில் கட்டியிருந்த கயிற்றை அடையாளங் கண்டு பிடித்து சட்டாம்பிள்ளையிடம் தெரியப்படுத்த, சட்டாம்பிள்ளை உடனே இருவரையும் கூப்பிட்டு விசாரித்து களவு கொடுத்தவனைப்பார்த்து உன்னுடையதென்பது எவ்விதந்தெரிந்தது என்றான். அவன் "அதோ பிள்ள, என் தூக்குகயிறைப் பாருங்க, நேத்துத்தான் வாங்கினது. புதிசாக இருக்குது. இவனுக்கு இதே தின்னு" விசாரியுங்கவென்றான். அவனைக் கேட்க அவன் அதற்கொன்றும் பதில் கூறமுடியாது திகைத்து நின்றான். அதற்குக் களவு கொடுத்தவன் "இன்னைக்கித்தான் இவன் திருடினான். அதுவும் மத்தியான சாப்பாட்டுக்கு எல்லாரும் போனப்பொ இவன் தான் காவலிருந்தான். அப்போதாங் களவாண்டிருப்பான். நாந்தானெல்லாருக்கும் முந்தியே சாப்பிட்டு வந்து அவனைப்போகச்சொன்னேன். அப்பரம் படிக்க ஏடு எடுக்கப்போனேன். தூக்கிலே ஏடு வைச்சுச் சேத்துக்கட்டியிருந்த கயத்தைக்காணோம், அதுக்கு மேலே நாந்தேடினதிலே இவந் தூக்கிலே இருந்திச்சு. இங்கிட்டே கூட்டிகிட்டுவந்தே" னென்றான். இப்பால் சட்டாம்பிள்ளை திருடினவன் யாதொன்றும் பேசாதிருப்பதாலும், கயிறும் மாதிரி சரியாயும் புதிதாயுமிருப்பதாலும், நிஜம் தெரிந்துகொண்டு

திருடினவனுக்கு வேண்டிய புத்திகளைச் சொல்லி இப்போதே இவ்விதஞ்செய்தால் இனிப்பெரியவனான பின் கொஞ்சங் கொஞ்சமாகப் பெரிய களவுகளிற் சேர்ந்து தண்டனையடைவையென்று வற்புறுத்திக் கயிற்றை வாங்கி சொந்தக்காரனிடங்கொடுத்து இவன் திருடினான் கண்டுபிடித்து வாங்கினேனென்று ஒருவரிடமுஞ் சொல்லாதே யென்றுஞ் சொல்லிவைத்தான். இவன் மற்றச் சட்டாம் பிள்ளைகளைப்போல் பலகார முதலானது லஞ்சம் வாங்கிக்கொண்டு அதற்காக ஒருவனைத்தான் கண்டிக்கிறது மில்லை. உபாத்தியாயரிடம் அனாவசியமான விஷயங்களைச் சொல்லித் தண்டிக்கச்செய்வதுமில்லை. அதுவும் அவனது நற்குணங்களாலென்பது அறிந்த விஷயமே. நாளுக்குநாள் இராமநாதனும் நன்றாய்த் தன்னளவுக்கு வேண்டிய மட்டில் படித்துக்கொண்டான். அவன் தகப்பனாரும் நன்றாய்த் தெரிந்து இனிப்படிப்புப் போதுமானதென நிறுத்திவிட்டு உபாத்தியாயரிடமுஞ் சொல்லித் தங்கள் குடும்பத்திலுள்ள கணக்கு முதலான வேலைகளுக்காக வீட்டில் நிறுத்தி வைத்துக்கொண்டார். அன்று முதல் சிலநாள் வரை உபாத்தியாயருக்கு இராமநாதனை நினைக்கும்போதெல்லாம் மிகுந்த சந்தோஷமும் அவனருகிலில்லாமையால் வருத்தமுமடைந்தார்.

மேலே கூறியபடி இராமநாதனுடைய பள்ளிக்கூட வயதானது நல்லகுணங்களோடு சென்றிருப்பதாகத் தெரியலாம். இராமநாதன் அவ்வளவு நல்லவனாக இருந்ததற்குக் காரணம் சுபாவமாக



அவனுக்கேற்பட்ட சாந்தகுணமும் சுறு சுறுப்பான புத்தியும் தான் என்று நமக்குத் தெரிந்தபோதிலும் வீட்டில் தாய் தகப்பன்மார் போதித்துவந்த நற்புத்திகளும் ஒழுக்கங்களும் அவனை நல்வழிக்கிக்கொண்டு வந்தது.

குழந்தைகளை வளர்ப்பதில் நம்மவர்கள் எப்பொழுதும் ஜாக்கிரதை உள்ளவர்களல்ல. "தொட்டிற் பழக்கம் சுடுகாடுமட்டும்." என்ற உண்மையான வாக்கியத்தை ஒவ்வொரு தாய் தகப்பனும் கவனித்துக் குழந்தைகளுக்குக் கெட்ட வழக்கங்களைச் செய்து வைக்காமல் ஜாக்கிரதையாக இருப்பார்களானால் எவ்வளவோ நன்மையாக இருக்கும். அறிவில்லாத சிலதாய்மார்களும் தகப்பன்மார்களும் குழந்தைகளை மடியின்மேல் தூக்கிவைத்துக்கொண்டு, விளையாடும் போதும், வார்த்தை பழக்கிக் கொடுக்கும் போதும் கெட்டபழக்கங்களை ஊட்டிவிடுகிறார்கள். உதாரணமாக தங்களுடைய மைத்துனன் மைத்துனிகளோடு கேலிவார்த்தைகள் பேசும்போது கொன்னிக்கொன்னிப் பேசும் தங்களுடைய மழலைக் குழந்தைகளுக்கு அசங்கியமான வார்த்தைகளைச் சொல்லிக்கொடுத்து ஒருவருக்கொருவர் வையச் சொல்லுவது வழக்கம். அந்த வழக்கத்தால் குழந்தை தனக்குக் கோபம் வரும்போதெல்லாம் கெட்டவார்த்தையைச் சொல்லி வைய பழகிக்கொள்கிறது. அடுத்த வீட்டுக் காரியோடு உப்புக்கும் மிளகாய்க்குங்கூட பிரயோஜனமில்லாத சங்கதிகளுக்கு ஒருவருக்கொருவர் வைதுகொள்ளும் வார்த்தைகளைக் கேட்டுக் குழந்தை

களும் அதைப்போல் பேசக் கற்றுக்கொள்கின்றன. அன்புள்ளவர்களைப்போல சிலபெண்கள் செல்வமான குழந்தைகளைப் பக்கத்தில் வைத்துத் "தம்பி ஒங்காத் தாளை ஒங்கப்பச்சி யெப்படி வைவார்களென்று" கேட்க அந்தக்குழந்தை வைதுகாட்ட அதை கேட்டுப் பெண்கள் சந்தோஷமாக அந்தக் குழந்தையைத் தூக்கி முத்தமிட்டு மடியில் வைத்துக்கொள்வார்கள். இப்படிச் செய்வதினால் சிறு குழந்தைகள் எல்லாரும் வைவதுகளையும் சந்தோஷமாகச் சொல்லிக்கொடுப்பதுகளையும் கற்றுக்கொண்டு தமக்குக் கோபம் வரும் போதெல்லாம் தாமுந் தமக்குத் தெரிந்த வார்த்தையால் வைது அதுவே பாடமாய் விடுகிறது. பொதுவாகத் தகப்பன்மாரிடத்திலிருந்து ஆண்குழந்தைகளும் தாய்மார்களிடத்திலிருந்து பெண்குழந்தைகளும் கெட்டவார்த்தைகளைக் கற்றுக்கொள்கிறார்கள். இவ்விதமான கெட்டபழக்கங்களும் போதனைகளும் நமது இராமநாதனுக்கு அவர்கள் வீட்டில் இல்லை. அக்கம்பக்கத்து வீட்டுக் குழந்தைகளைப் பார்த்து அவன் ஏதாவது கற்றுக்கொண்டதாகத் தெரிந்தால் உடனே அந்த வழக்கத்தை மறக்கும் படியான தந்திரங்களை தாய்தகப்பன்மார் செய்வார்கள். இவ்வாறு இராமநாதன் நற்பழக்கங்களிலே பழகி வந்தபடியால் அவனை சற்புத்திரனென்று எல்லாரும் கொண்டாடுகிறார்கள்.

சிறுவயதிலேயே குழந்தைகளை வளர்ப்பதில் அஜாக்கிரதையாக இருந்துவிட்டுச் சிறுவர்கள் பெரியவரானபிறபாடு அவர்கள் செய்யும் அக்கிரமங்களாலும்



அதிகச் செலவுகளாலும் துர்நடத்தைகளாலும் பெற்றோர் மனம்நொந்து வருந்தப்படுகிறார்கள். குடும்பக் கலகங்களும் வீண் உளவுகளால் செலவுகளும் ஏற்பட்டு அநேகம் பிள்ளைகள் பேர்கெட்டு வருந்துகிறார்கள். தாய் தகப்பன்மார்கள் பிள்ளைகளைச் செய்கிற தீமைகளினாலும் துர்வழக்கத்தினாலும் நடத்துகிற கொடுமையினாலும் சிறுவர்கள் பல துர்நட காரியங்களை பலவந்தமாகக் கற்றுக்கொள்ள நேரிடுகிறது. இதற்கெல்லாம் தகப்பன்மாரே காரணமாக இருக்கிறார்கள். எப்படியெனில் மகா உலுத்தருனை முன்ன தகப்பன்மார்கள் பிள்ளையைப் பெரிதென்று நினைக்காமல் பணத்தைப் பெரிதென்று நினைத்து பலகாரம் வாங்கிச் சாப்பிடவாவது, நல்ல வேஷ்டி, புஸ்தகம் முதலானது வாங்கவாவது ஒரு பைசாவுங் கொடாமல் இம்சைசெய்வதால் சிறுவர்கள் மனம் வெறுத்து அக்கிரமமான செய்கைகளைச் செய்ய ஆரம்பித்து 50 வாங்கி 400, 500-க்கு எழுதிக் கொடுத்தும். அல்லது 100-க்கு 25, 50 உசிதம் போட்டு எழுதிக் கொடுக்கிறார்கள். அவ்விதம் கடன் கொடுப்பவர்களும் கெட்ட நடத்தையுள்ளவர்களாகவேயிருப்பதால் அவர்கள் சிநேகத்தின் கெடுதியால் மேலும்மேலும் பெருங்கெடுதியான விஷயங்களிலும் ஆரம்பித்துவிடுகிறார்கள். இந்த உண்மையானது இப்போது தகப்பன்மாராக இருப்போர்கள் தங்கள் சிறுபிராயத்தில் நடந்த விஷயங்களை கவனித்துப் பார்த்தால் தெரியும்.

தங்கள் சிறுவர்களுக்குச் சிறிது சுதந்திரமாவது கொடாமல் நிரம்பக் கண்டிப்பாய் நடத்தும் தகப்பன்மார்களின் ஆளுகைக்குட்பட்ட சிறுவர்கள் தற்காலம் செய்கிற கெட்ட நடவடிக்கைகளைக் கவனித்தாலுந் தெரியும். கொண்டு விலைசெய்யுந் தொலைதூரங்களில் வசிக்குஞ் சிறுவர்கள் ஆசைப்பட்ட பண்டங்களை வாங்கித்தின்று பழகியிருக்க அவர்கள் தங்களுடைய சொந்த ஊர்களுக்கு வந்து சேர்ந்தபிற்பாடு, தாய் தகப்பன்மார்கள் அந்தப் பையன்களுக்கு வீட்டிலே போடுஞ் சோற்றைத்தவிர ஒரு செம்புச் சல்லிகூட அவன் கண்ணிற்படாமல் பத்திரப்படுத்தி இம்சைசெய்தால் அந்தப் பையனுடைய மனது சிறிதுநாளில் எப்படியிருக்குமென்பதை ஏன் யோசிக்கக்கூடாது? தின்று வளரவேண்டிய சிறுபிராயங்களில் அவர்களை இப்படி இம்சைசெய்வதினால் அவர்கள் குடும்பத்தார்களுக்குத் தெரியாமலேசிநேகர்களிடத்திலுந் தெரிந்தவர்களிடத்திலும் பஞ்சாங்கப்பார்ப்பான் வண்டிக்காரன் முதலானவர்களிடத்திலும் சமையம்போல் வேண்டிய பொய்யைச்சொல்லியாவது தகப்பனாரே வாங்கிவரச் சொன்னாரென்றாவது சொல்லி கடன் வாங்கித் தங்களிஷ்டம்போல் செலவு செய்கிறார்கள். சில பையன்கள் எந்தச்சமையத்தில் எந்த இடத்தில் தகப்பனார் பெட்டிச்சாவியை வைப்பாரென்று பார்த்திருந்து அப்படி நேர்ந்த சமையம் தனக்கு வேண்டியதை யெடுத்துக்கொண்டு செலவு செய்கிறான்.

மேற்காட்டிய பிரகாரம் உண்டாகுந் தூர்க்குணங்கள் நாளாகநாளாக விர்த்தியாகிப் பெருத்தகேடுகளுக்கு



இடமாகின்றதுடன் பிள்ளைகள் செய்கிற செலவுகளைக் கண்டு பயந்து தகப்பன்மார்கள் தங்கள் சொத்துக்களை மூன்றாவது மனுஷன் பேருக்கு எழுதி ரிஜிஸ்டர் செய்து வைக்கும்படியும் ஆகிறது. இங்கு நாம் இது விஷயமாகப் பிரஸ்தாபித்த தென்னவென்றால்? தகப்பன்மார்கள் நமது ராமநாதனுடைய தகப்பனைப்போல் சிறுவர்களை வளர்க்கவேண்டுமென்றும், குழந்தைகளும் ராமநாதனைப்போல் நற்குணத்தோடு வளரவேண்டுமென்றும் அவ்வித நற்குணங்களால் நமது தேசம் விர்த்தியடைய வேண்டுமென்றுங் கோரியேயாம். நல்ல தாயையும், நல்ல தகப்பனையும் அடைந்து நல்ல குணங்களோடும் வளர்ந்துவரும் நமது ராமநாதன் பள்ளிக்கூடத்தைவிட்ட பிற்பாடு தகப்பனாருடைய ஆக்கினைக்குட்பட்டு வீட்டிலுள்ள கணக்கு வேலைகளை பார்க்கத்தொடங்கினான்.

## மூன்றாம் அத்தியாயம்.

நமது ராமநாதன் முன்பின் பெட்டியடியிலிருந்து கணக்குப் பார்த்தவனாக இல்லாதிருந்தும் மற்றவர்கள் கணக்கு வழக்குகளைப் பார்ப்பதைப்பற்றி அடிக்கடி கவனித்திருந்ததினால் தன்னுடைய தகப்பனார் முதல் நாளிற் காட்டிக்கொடுத்த விஷயங்களை கவனமாகத் தெரிந்துகொண்டு யாதொரு உதவியில்லாமல், மறுநாள் முதல் பார்க்கத் தொடங்கினான்.

அந்தக்காலத்துக் கணக்குகள் இப்போதைப்போலக் காகிதப் புஸ்தகங்களில் எழுதப்படுகிறதில்லை. ஓலைக் கணக்குத்தான் சகல வியாபாரங்களிலும் வழங்கி வந்தது. இப்போதுகூட ஓலைக்கணக்கு பெரும்பாலும் வழக்கித்தான் வருகிறது. காகித கணக்கைவிட ஓலைக் கணக்கு கஷ்டமானதென்று இக்காலத்துச் சிறுவர்கள் நினைத்தபோதிலும் அக்காலத்தவர்களுக்கு அது கஷ்டமாகத் தோன்றவில்லை. இராமநாதன் பள்ளிக்கூடத்திலிருக்கும்போதே ஓலைகளை வாரி நேர்த்தியான சுவடிகளைச் சேர்ப்பதில் சமர்த்தன். அவனுடைய எழுத்துக்கள் குண்டுகுண்டாய் நன்றாயிருக்கும். ஏடுகள் வாரிச் சேர்ப்பதிலும் தமிர்ப்போடுவதிலும் கொஞ்சமும் முன்பின் அகலக்குறை நீளக்குறை முதலானது இராது. ஏடுகட்டுகிற கயிறு முதலானதுகளைத் தன் கையாலேயே திரித்துப் போட்டுக்கொள்வான். ஏடு, கயிறு, அதைவைத்துக்கட்டும் ஆணி, தன் பெட்டி இவைகள் அழகாயும் சுத்தமாயுமிருக்கும். அவன் எழுதுகிற எழுத்தாணியோ சீரான பதமுள்ளதாகவும் அழகுள்ளதாகவும் வைத்துக்கொள்வான்.

அன்றன்று கணக்கு பாக்கியன்றி யெழுதி முடித்துவிடுவான். எவ்வித முகாந்திரத்தை முன்னிட்டுங் கணக்குக ளெழுதாது பாக்கி வைக்கமாட்டான். பெட்டியிலிருந்து பணம் எடுக்குமுன்னமே கணக்கை யெழுதிவைத்துவிட்டுத்தான் பணமெடுப்பான். எச்சமயமும் தன் வேலையில் சோர்வுறான். இவ்விதம் நடந்துவருங்கால் தன் வீட்டில் வந்து சொல்லிக்கொடுக்கக்கூடிய ஒரு உபாத்தியாயரிடம் தேவாரம்,



திருவாசகம், திருவருட்பா முதலியதுகளை நல்ல பண்ணோடு பாடக்கேட்டு அறியுங்கூடியவரை தேர்ச்சியடைந்தான். எக்காலமும் தன் படிப்பையும் தனக்கேற்பட்ட கணக்கு வேலையையும் மிக்க கருத்துடன் பார்த்துவருவான். அந்நாளில் காலை, மத்தியானம், சாயரட்சை இக்காலங்களில் தன்னைப்போன்ற நற்குணமுள்ள சிறுவர்களோடும் தன்னை அன்போடழைக்கும் பெரியவர்களோடுஞ் சென்று ஸ்நானபானங்களைச் செய்துவருவதே யொழிய வீண்வம்பர்களோடும் விளையாட்டுப்பிள்ளைகளோடுஞ் சேருவதில்லை. இவன் செய்கிற எந்த வேலையையும் தனக்குத்தெரிந்தவரை அயர்ச்சியில்லாது செய்து முடிப்பான். அவ்வேலைகளை யார் கண்ணுற்றாலும் ஆச்சரிய முறாதவர்களில்லை.

ஒருநாள் தகப்பனார் ஊரிலில்லாத சமையம் ஒரு அர்ஜெண்டு தந்தி வந்தது. அதை உடனே பிரித்து மாஸ்டர் தருஜமாப்பண்ணி யெழுதி இருந்த தமிழ் எழுத்தை வாசித்துப்பார்த்தான் அதில் "சிங்கப்பூரிலிருந்து அபாயம் உடனே வா அப்படி வாராவிட்டால் ஜாஸ்தியான நஷ்டம் வரும் கடிதம் பார்" என்று எழுதி இருந்தது.

உடனே தகப்பனாரிருக்கும் ஊருக்கு ஆளனுப்பி அவசரமாகத் தாங்கள் வரவேண்டுமென்று ஒரு கடுக்கு எழுதினான் அதைப்பார்த்த நிமிஷமே அவரும் வந்துசேர்ந்தார்.

நேரஞ்சென்று வந்ததால் சாப்பாடு செய்துவிட்டுப் பெட்டியடியில் வந்துட்கார்ந்தார். ராமநாதனும்

தந்தியைக்கொண்டுவந்து கொடுத்தான். அவரும் பார்த்து யோசனை செய்துகொண்டிருந்தார்.

இராமநாதன்:—இவ்வளவு அவசரமான தந்தியின் கருத்தென்ன?

சுப்பிரமணியஞ் செட்டியார்:—இது நம்மகடைத் தந்தியில்லை. சிநேகிதருடைய தந்தி. விவரம் ஒன்றுந் தெரியவில்லை கடிதம் ரெண்டெழுதி யிருக்கிறது. கடிதம் வந்தால் தெரியும்.

இராமநாதன்:—சிங்கப்பூரில் நமக்குக்கடை எவ்வளவு நாளாக இருக்கிறது? முதலெவ்வளவு வைத்தது? எவ்வளவு தொகைவரை வாங்கல் கொடுக்கல் நடக்கிறது? தொழில் வட்டிக்குக் கொடுத்து வாங்குவது தானே? கொண்டுவிற்பவர் எந்த ஊர்? சம்பள மெவ்வளவு? என்று கேட்டான். அதற்கு சுப்பிரமணியஞ் செட்டியார் நம்மள் கடை (௩௰) வருஷமாக இருக்கிறது. ௨௰௲ வெள்ளி முதல் வைத்தது. ௧௰௱ வெள்ளிவரை கொடுத்து வாங்கி வருகிறது. தொழில் வட்டிக்குக்கொடுத்து வாங்குவது தான். கொண்டுவிற்கிறவன் லெக்ஷ்மிபுரம் கண்ணப்பன். அவனுக்குச் சம்பளம் ௬௨௱ வெள்ளி. அவன் சிங்கப்பூருக்குப்போய் ௩ வருஷமாகிறது. கொஞ்சம் கட்டுப்படாமல் வேலை செய்துவருகிறான். நான் எவ்வளவு கண்டிப்பாக எழுதியும் கவனியாமல் கிஸ்திவட்டிச்சீட்டு சயலொம்பம் முதலானதுகளில் பெருத்தவேலைகளைச் செய்யரான். இப்படித் தொழில்களில்தான் முந்தி நமக்கு ரொம்ப நஷ்டம் வந்தது. அதை உத்தேசித்தே

-21- 14



அங்குள்ள நமது சிநேகிதர்களுக்கெழுதி யிருந்தேன். அவர்களில் ஒருவர் தான் இப்போது தந்தி சொல்லி யிருக்கிறாரென்று சொன்னார். இராமநாதனும் ஒவ்வொன்றையுங் கவனமாகக் கேட்டுக்கொண்டான். அவன் தகப்பனாரும் கணக்கு வழக்கு முதலான விஷயங்களை அன்று நன்றாய் கவனித்துப்பார்த்து நாம் கூட இவ்வளவு ஒழுங்காய் வைத்துக்கொள்ள வில்லையே யென்று சந்தோஷப்பட்டுக் கொண்டார். அதற்கு நாலு நாளைக்குப்பின் கடிதமும் வந்தது அதில் கீழ்க்கண்ட விபரப்படி யெழுதப்பட்டிருந்தது.

உ

சிவமயம்.

சிங்கப்பூர். தேவிகோட்டை,
ப. கா. சி. கரு. சா. வெ. சுப.

குரோதன ௵ அற்பிசி ௴ ௨௰ௗ.

சுப்பிரமணிய அண்ணனவர்கள் தம்பி சின்னய்யா மீனாக்ஷி சுந்தரேஸ்பரர் கிருபையாலெழுதிக்கொண்டது. இப்பவும் அவடம் ஆவணி௴ ௨௰ புரட்டாசி௴ அவஷி மாசம் ௨௰ இந்தக் கடுதாசிகள் மூனும் வந்து சேர்ந்தது. இவ்விடம் இது கடுதாசியும் புரட்டாசி௴ ௨௰ கடுதாசியும் வரத் தெரியவரும்.

தங்கள் கடுதாசிப்படி கண்ணப்பனிடம் எவ்வளவு சொன்னாலுங் கட்டுப்படாமல் அவனிஷ்டம்போல் சில்லறைக்கிஸ்திக்கி லெட்சம் வெள்ளியும். லெட்சம் வெள்ளிவரை வட்டிச்சீட்டும். சயலொம்பத்தில் ௨௰ சேரும் வாங்கி வேலைசெய்து வருகிறான். நானும் முருகப்பண்ணனும் எவ்வளவோ சொல்லியுங் கொஞ்சமும்

கெவுனிக்கிறானில்லை, ரொம்ப மொறடானாக இருக்கிறான். ஆசாமிகளும் இப்போது அவ்வளவு நாணயமாகத் தெரியவில்லை. சயலொம்பமும் சீக்கிரம் விலையிறங்கிவிடும்போலிருக்கிறது. ஆகச்சே தாங்கள் வராவிட்டால் தாக்குப்பிசகான லாபநஷ்டத்துக்கு வந்துவிடும்.

அடுத்தாள் முத்தய்யாவும் ரொம்ப சாந்தமானவன். அவன் எவ்வளவு சொல்லியும் அதைக் கொஞ்சங்கூடக் கவனியாததால் கண்ணப்பனும் அவனுங்கூட நல்லாப் பேசுகிறதில்லை. சமையல்காரன் கொஞ்சங்கெட்டவன் அவனைத்தான் கண்ணப்பன் யோசனை கேட்கிறது. அவன் சொல்லுகிறதைக் கேட்டுத்தான் சந்தோஷப்படுகிறான். எங்கே போனாலும் சமையல்காரனைத் தான் கூடக் கூட்டிப்போகிறான். நம்மைப்போல யாராவது வேண்டிய விஷயங்களைச் சொன்னால் அவர்களோடேயும் பேசுகிறானில்லை. ரொம்பக்கட்டுப் படாதவன். தாங்கள் வந்தால் அல்லது வேலைகள் சீராகமாட்டாது.

அடுத்தாளும் யோக்கியனே தவிர அவ்வளவு புத்திசாலியில்லை. வட்டிச்சீட்டு பிடித்த ஆசாமிகளும் முன் போலே அவ்வளவு சுரவையாகத் தெரியவில்லை. தங்கள் கடைவேலை அடக்கமானதாக யிருந்தாலும் மதிப்பு ஜாஸ்தி யென்பது தங்களுக்குத் தெரிந்ததே. அப்படி உள்ளதால் தான். சயலொம்பச் சேர்கள் வாங்க இஷ்டம்போல் யெடங்கொடுத்தது. யெல்லா விஷயங்களுக்கும் யாதொருவிதமான சுணக்கமில்லாமல் அவசியம் தாங்களும் வந்து சேரவேண்டியது. கார்த்திகையீ



உகஉ பிறைக்கு கப்பல் டயமாகச்சேஷை கப்பலுக்கே வந்து சேருவது அவசியம்.

தங்கள்பையன் மூத்தவன் ராமநாதனும் ரொம்பக் கெட்டிக்காரனென்று வந்தவர்கள் சொல்லக் கேட்டு சந்தோஷ மடைகிறேன். அவனையுந் தாங்கள் கூட்டி வந்தால் ரொம்பக் கெட்டிக்காரனாவான். ஆகச்சே அவ்விடஞ் சவுரியம் போல தாங்கள் வரும்போது கூட்டி வரவேண்டியது. மைத்ததாக்கல் பின்பு.

வேணும்,

அண்ணாமலையார் துணை.

மேலே கண்டபடி எழுதிவந்த கடிதத்தைப் பெரிய செட்டியார் வந்தவுடன் உடைத்து வாசித்து ராமநாதனிடம் கொடுத்தார். ராமநாதன் வாங்கி வாசித்துப் பார்த்தவுடன் தகப்பனாரைப்பார்த்து "கடாசி இவ்வளவு கண்டிப்பாக வந்திருக்கிறதே கட்டாயமாய்ப் போகவேணுமோ?" யென்று கேட்டான்.

சுப்பிரமணியஞ் செட்டியார் :—ஆமா.

ராமநா :—அப்ப இன்னைக்கி கார்த்திகையீ அடை யல்லவா யின்னம் பதினறு நாள்தானே கப்பலுக்கு டயமிருக்கு?

சுப் :—அதற்குள்ளே நாம் பிரப்பிடவேணும்.

ராம :—நானுங் கூடத்தானே ?

சுப் :—ஆமா ஒன் தாயாருக்கு சமாதானஞ் சொல்ல வேணும்.

ராம:—சமாதானமென்ன நம்ம ஊரிலுழக்கப் படிக்கிறாளெல்லாம் இன்னம் தொலைக்கிப் போகாம லிருக்கிறது யெனக்கும் வெட்கமாகத்தா னிருக்கு. இச வயசுவரையார் தொலைக்குப் போகாமல் இருக்கிறார்கள்.

சுப்பிர:—ஒந் தாயாரைக் கூட்டிக்கிட்டுவா அவ ளிடம் சங்கதியைச் சொல்லி அவள் நோக்கத்தைத் தெரிவோம்.

ராம:—சரி கூட்டிக்கிட்டுவாரேன்.

வள்ளியம்மை ஆச்சி:—அப்பச்சி ராமய்யா!! அப்பச்சியும் நீயும் பேசிக்கிட்டு யிருந்தியளே திடீருணு யெங்கவந்தா?

ராம:—ஆத்தா! அப்பச்சியென்னமோ ஒங்கிட்டச் சொல்ல வேணுமாங் கூட்டிக்கிட்டு வரச்சொன்னாக.

வள்ளி:—சரி அப்பச்சி! வா போவம்.

சுப்:—ஏம்! பய கடதாசிச் சங்கதியை சொன்னானா? யென்டா சொன்னியா?

வள்ளி:—அவன் ஒண்ணுஞ் சொல்லலே. நீங்க கூட்டிக்கிட்டு வரச்சொன்னியண்ணுதாஞ் சொன்னான்.

சுப்:—சிங்கப்பூருக்குப் பத்து நாளைக்குள்ளாக நல்லநாள் பார்த்துப் புறப்படவேண்டிய திருக்கு. பையனையுங் கூடக் கூட்டிக்கிட்டு போகலாமிண்ணு நெனைக்கிறேன். அந்தச்சொல்லத் தான் ஒன்னைக் கூப்பிடச்சொன்னது.

வள்ளி:—அப்படி யென்ன அவசரம்?

16
25



சுப்:—சின்னய்யா எழுதி இருக்கிறான். கண்ணப்பன் வேலை சரியா நடக்கலே. போகவேண்டிய அவசியம்.

வள்ளி:—ராமய்யாவையுங் கூட்டிக்கிட்டு போக வேணுமிண்ணு நெனைக்கிறிய?

சுப்:—ஆமா.

வள்ளி:—நீங்களும் அவனும் புறப்படுறதா யிருந்தா ஒங்க அபிப்பிராயம். நானென்ன சொல்லப் போறேன். நம்ம சோசியரைக் கூட்டிபாத்து நல்ல நாள் பார்த்துத்தானே புறப்படவேணும்?

சுப்:—அப்பிடித்தான் செய்யவேணும் ராமய்யா! வண்டிக்காரனைக் கூப்பிடு.

ராம:—ஆகட்டும் கூட்டியாறேன்.

வண்டிக்காரன்:—ஏன் பெங்கெ வந்திய? அங்கெ வரத்தானிருந்தேன்.

ராம:—அப்பச்சி கூட்டியாரச் சொன்னாக.

வண்டி:—வாங்க போவம்.

சுப்:—வண்டிக்காரனைப் பார்த்து யென்டா! இன்னேரம் வரலே?

வண்டி:—இல்லே, மாட்டுக்குக் கட்டுத்துறை யிட்டுக் குழைகளைக் கூட்டிச் சுத்தம்பண்ணிப்பிட்டு இப்பத் தாம் பழையது சாப்பிட்டேன். அதுக்குள்ளே தம்பி வந்தாங்க உடனே வந்திட்டேன்.

சுப்:—அடே, நம்மசோசியர் சுப்புக்குட்டி அய்யரைக் கூட்டிக்கிட்டுவா.

வண்டி:—ஆகட்டும் கூட்டியாறேன் என்று சொல்லிவிட்டு அக்கிரகாரத்தைநோக்கிப்போய் சுப்புக்குட்டி ஜோஸ்யரைக்கண்டான்.

ஜோஸ்யம் சுப்புக்குட்டி ஐயர் மிகவும் நல்லவர். ஊரில் எல்லாருக்கும் அவர்மேல் பிரியம். ஊரில் எந்தவிசேஷம் நடக்கவேணுமென்றாலும் அவரைத்தான் உபசாரம்பண்ணி ஜனங்கள் கூட்டிக்கொண்டு போய் ஜோஸ்யங்கேட்பார்கள். அவர் யார்கேட்டாலும் சோம்பலில்லாமல் சொல்லுவார். அவருக்கும் வராளமான வரும்படி கிடைக்கும். ஒரு நல்லபேர் அவருக்கு எப்படியோ உண்டாகிவிட்டது. அவர் நாள் பார்த்து எந்தக்காரியஞ் செய்யச்சொன்னாலும், அவர் முகூர்த்தம் பார்த்து யார் தூரந் தொலைகளுக்குப்போனாலும், க்ஷேமமாகவும் லாபமாகவும் முடியுமென்று ஜனங்கள் சொல்லிக்கொள்வது வழக்கம். பாங்குத்தவணை காலங்களில் பணத்துக்கு எவ்வளவு பிரியமோ அவ்வளவு பிரியம் நமது ஜோஸ்யருக்கு. எப்போது பார்த்தாலும் ஜனங்கள் அவரிடம் நாள் பார்த்துக்கொண்டும் வீடுகளுக்கு வரவேண்டுமென்று கூப்பிட்டுக்கொண்டுந்தானிருப்பார்கள். வண்டிக்காரன் அழைக்கப்போகும் போது ஜோஸ்யர் கண்ணில் கண்ணாடி வைத்துக்கொண்டும் இடதுகையில் மஞ்சள் தடவிய ஏடொன்றை வைத்துக்கொண்டும் வலதுகையில் ஜோகிகளை யெண்ணிவைத்துக் கணக்கிட்டுக்கொண்டும் இருந்தார்.

வண்டிக்காரன் :—சாமி. கும்பிடுறேன்.





ஜோஸ்யர்:—மகாராஜனாயிரு! வென்று ஆசீர்வாதஞ் செய்வதுபோல் இடதுகையைத் தூக்கிவிட்டு எங்கடாவந்தே?

வண்டி :—சாமி! பெரியசெட்டியாரு ஒங்களை கூட்டிக்கினு வரச்சொன்னாங்க.

ஜோஸ்யர்:—ஆஹா! அப்படியே இதோவந்து விட்டேன், யென்ன சமாசாரம், அங்கே யாராரிருக்கிறார்கள், கூட்டமுண்டோ?

வண்டி:—இல்லே செட்டியாரும் அவுங்க மகனுந்தானிருக்கிறாக.

உடனே ஜோஸ்யர் ஜோகிப்பையையும், பஞ்சாங்கத்தையும், வருஷாதி நூலையும் எடுத்து கட்கத்தில் வைத்துக்கொண்டு புறப்பட்டார். வண்டிக்காரனும் ஜோஸ்யருமாகச் செட்டியார் வீடுவந்து சேர்ந்தார்கள். ஜோஸ்யர் வருவதைப்பார்த்து உடனே வள்ளியம்மையாச்சி யெழுந்து ஒரு இரத்தினக் கம்பளத்தைக் கொண்டுவந்து விரித்தார்கள். அய்யரும் வந்தார்.

சுப்பிர:—சாமிவாங்க! யென்று கும்பிட்டு கொஞ்சம் எழுந்திருக்குகிற பாவனையாய் ஒரு கையை ஊன்றி யெழுந்தார்.

ஜோஸ்யர் :—ஆசீர்வாதம்! ஆசீர்வாத!! மென்று இடதுகையின் கீழ் வலதுகையை வைத்துத் தூக்கி தலையை வணங்கிக் காட்டி இருங்கோ! இருங்கோ!!

சுப்பிர :—என் அந்த இரத்தினக்கம்பளிமேலே இருங்களேன்.

ஜோஸ்யர்:—இரத்தின கம்பிளிமேலே யிருந்தார். உடனே ஆச்சியும் ராமநாதனும் கும்பிட்டார்கள். ராமநாதனுக்கு ஆசீர்வாதஞ் சொல்லிவிட்டு ஆச்சியைப் பார்த்து, தீர்க்க சுமங்கிலியவா யென்றார். ஆச்சியும் ஒரு பக்கமாக இருந்தார்கள். ராமநாதனும் தகப்பனை அடுத்து உட்கார்ந்தான்.

சுப்பிர:—சாமி! நானும் நம்மபையனும் சிங்கப்பூருக்குப் போகவேணும். பத்து நாளைக்குள்ளே ஒரு நல்லநாள் பார்த்துச் சொல்லுங்க.

ஜோஸ்யர்:—சரியென்று ஒப்புக்கொண்டு கண்ணாடியை மாட்டி செட்டியார் ஜாதகம், பையன் ஜாதகம் இதுகளை வாங்கி நன்றாய் திருப்பித் திருப்பி ராசிச்சக்கரங்களையும், தற்காலம் நடக்கும் தேசாபுத்தி அந்திரம் முதலானதுகளையுங் கணக்கிட்டு ஜோதிகளைப் போட்டுப்போட்டுப் பார்த்துக்கொண்டு, நடக்கும் வருஷப்பஞ்சாங்கத்தையும் பார்த்து யெல்லாம் நன்றாய்த் தெரிந்துகொண்டவராய்; செட்டியாரைப் பார்த்துச் சொல்லத்தொடங்கினார்.

ஜோஸ்யர்:—எங் கேளுங்களேன்.

சுப்பிர:—சரி சொல்லுங்க.

ஜோசியர்:—இந்த மாதம் கடை வெள்ளிக்கிழமை கக நாழிகைக்குமேல் ௨௰௨ - நாழிகைக்குள் மூலநக்ஷத்திரமும், சப்தமி திதியும், கடகலக்கினமும், அமிர்தயோகமும், சுகவேளையும், கீழ்பஞ்சகமும், பாதாளயோகினியும், ஒன்பதாமிட சுத்தமும், குருபார்வையுமாக இருப்பதால் அன்று இருவருக்கும் ஒத்திருக்



கிறது. ஜாதகரீதியும் குருசார ராசியில் இருக்கிறார். நன்றாய் புறப்பட்டு பிரயாணமாக இருந்து மறுநாள் காலையில் சகுனம்பார்த்தால், வாசிவலம், நக்ஷணி கெவுளி, கெருட இடம், காடையிடம் பூராவாய் ஆகும். என்று சொல்லி விபரமாக ஒரு குறிப்பெழுதி மஞ்சள் தடவி தாம்பாளத்தில் வைத்துக்கொடுத்தார். உடனே செட்டியார் யெழுந்து தலையில் வேஷ்டியைக் கட்டி, நமஸ்காரஞ் செய்து தாம்பாளத்தோடு வாங்கிக் கொண்டு வெற்றிலை பாக்குக்கொடுத்தார். அவர் வாங்கினதும்; நான் ஏழை! பெரிய குடும்பம்!! ஞாபகமிருக்கவேணுமென்று சொல்லிவிட்டு யெழுந்தார். செட்டியாரும் அதற்கென்ன தடையா போயிட்டு வாங்க என்று கும்பிட்டார். அவரும் ஆசீர்வாதஞ் சொல்லிவிட்டு வீடுபோய்ச்சேர்ந்தார்.

---

## நான்காம் அத்தியாயம்.

---

நமது சுப்பிரமணியஞ்செட்டியார் கார்த்திகைப் புதுமையின் விசேஷத்தைத் தாம் சிங்கப்பூருக்குப் புறப்படுமுன் செய்து முடித்துவிடவேணுமென்று முன்னமே எற்பாடு செய்திருந்தபடியால் அதற்கான சாமான்களெல்லாம் தயாராக்கொண்டுவந்தது. ஊர்களில் கார்த்திகைப்புதுமை செய்யவேண்டியதற்காக ஒரு நல்ல நாளில் பெரிய செட்டியாருடைய மைத்துனன் வீட்டில் பெரிய செட்டியாரும் ராமநாதனும்

போய் சாப்பிட்டு கார்த்திகைப்புதுமை சொல்ல; அவர்களும் தடுக்குப்போட்டு சுமார் பத்துப்பலப்பாக்கும், ஒருபல வெற்றிலையும் வைத்தார்கள். முதலில் சொல்லுவதாகச்சே வழக்கப்பிரகாரம், அவ்வெற்றிலையின் மேல் நமது ராமநாதன் மிகவ ரூபாய் வைத்து மிகவ வெள்ளிக்கிழமை கார்த்திகைப் புதுமை வாங்க! என்று சொல்லி கொஞ்சம் பாக்கும் வெற்றிலையும் ரூபாயும் வைத்துவிட்டு, மற்றதை யெடுத்துக்கொண்டு வாசல் படி-நிலை-தடுக்காமல் தலைகுனிந்து வந்து தகப்பனோடிருந்தான். அப்பாலிருவரு மெழுந்து உள்ளூரில் சொல்லவேண்டிய மற்ற இடங்களுக்கும், அடுத்த ஊர்களில் சொல்லவேண்டிய பந்துக்களுக்கும் சொல்லி முடித்து வீடுவந்து சேர்ந்தார்கள். வந்த அன்றே சாமிக்குப் படைக்கிற அல்லது பந்துக்களெல்லாம் இவ்விசேஷத்தை முன்னிட்டு (கூடி ஆக்கி உண்கிற) நாளாகச்சே, அன்றிராத்திரி அதற்கு வேண்டிய சமையல் முதலானதுகளை சமையல்காரர்கள் செய்ய, செட்டியார் சம்சாரம் பெண் பிள்ளைகளையும், செட்டியார் ஆண்பிள்ளைகளையும் போய் உள்ளூரி லுள்ளவர்களைக் கூப்பிட்டு வந்தார்கள். அவ்விந்த விசேஷம் யெந்த ஊரிலும் பெரும்பான்மையாய் நடக்கக்கூடியதால், பல பங்காளிகளும் நெருங்கிய பந்துக்களும் வந்தார்கள். ராமநாதனுக்கும் காலில் வெள்ளி பிஞ்சியும், கையில் கொலுசு காப்பும், விரலில் வைரமோதிரமும், இடுப்பில் தங்க முகப்புவைத்த வெள்ளி அரைஞாணும், காதில் அவ்வஞ்சுபெரிய கடுக்கன்களும், கழுத்தில் குடாவும், போட்டு இடுப்பில் கெண்டைவேஷ்டியும் தலைப்பட்டும்





கட்டி நடையில் ஓர் பக்கத்தில் உட்காரவைத்திருந்தார்கள். பங்காளிகள் பந்துக்கள் எல்லாரும் வந்தவுடன், நடுவீட்டில் பெண்டுகளால் வட்டிகும்பாக்களில் படைத்திருந்த சாதப்படைப்புக்கு தாபக்காலிலிருந்த நெருப்பில் பசுவின் நெய்யை விட்டுக் கும்பிட்டு ராமநாதன்கூட உள்ளேயிருந்து படைத்த சாதத்தைச் சாப்பிடக்கூடியவர்கள் சாப்பிட; மற்றவர்கள் வெளியிலிருந்து சாப்பிடச் சாப்பாடு நடந்ததின்மேல் எல்லாரும் தாம்பூலந்தரித்துக்கொண்டு அவரவர் வீடுபோய்ச் சேர்ந்தார்கள்.

மறுநாட் காலையில் யெல்லாரையும் போய்க் கூட்டிக்கொண்டு வந்து பலகாரம் சாப்பிடச் செய்து மத்தியானம் கார்த்திகை விரதமாகையால் சைவச் சமையல் நடந்தது. யாவரும் சாப்பிட்டு முடிந்ததும்; இராத்திரி பலகாரத்துக்காக இட்டிலி, தோசை முதலானவைகளுக்கு வேலை நடந்து கொண்டிருந்தது. அச்சமயம் வாழை நடுவதற்காக ஒரு சனில் காய்த்த வாழைமரம் ஒன்று கொண்டுவந்து 2 கஜ உயரம் நறுக்கி மேலே எடுபட்டிருந்த வாழைப் பட்டைகளை எடுத்து, ௫-கெஜ நீளம் ௪-பட்டையும், ௬-கெஜ நீளம் ௪-பட்டையும், நறுக்கி பூலாவிளாறு கொண்டுவந்து வைத்துக்கொண்டு படைத்த வீட்டுக்கு நேரில்வந்து வனு கஜம் ஆழம் குழிவெட்டி அதில் நைப்பவளம் போட்டு பால்வார்த்து வாழைமரத்தை ஊன்றி மணல் போட்டு உருக்கிட்டு மரத்தைச்சுற்றி கால்கெஜ உயரம் திண்ணை மூன்றடுக்காகப்போட்டுவாழைமரத்தில் தரை மட்டத்துக்குமேல் ௧௦-கஜ உயரத்தில் ௧-கெஜ நீளம்

மூன்று பூலாவிளாறு நறுக்கி குறுக்காகச்சொருகி கஜ நீளமாக எட்டு விளாறு நாலுபக்கமும் வைத்துக் கட்டி அதின்மேல் ௧ கஜ நீளமான நாலு வாழைப் பட்டையை வைத்துக் கட்டி அதற்கு நாலு அங்குலத் துக்குமேல் மூக்கில் ௧ கஜ நீளமான மூன்று விளாறு களைச்சொருகி முக்கால் கஜ நீளமான அ விளாறுகளை நீளவசத்தில் நாலுபக்கமும் கட்டி, அதின்மேல் ௧ கஜ நீளமுள்ள நாலுபட்டையை வைத்துக்கட்டி ஊன்றின வாழை மரத்தில் உச்சியில் பள்ளந்தோண்டி அதில் ஒரு பெரிய கிளிஞ்சிட்டியில் பருத்திக்கொட்டை கட்டிய துணியை விளக்கெண்ணெயில் நனைத்துவைத்தும், அதன்கீழ் நாலுமூலையிலும்நாலு பெரியகிளிஞ்சிட்டியும் மத்தியில் நாலுபக்கமும் அ கிளிஞ்சிட்டியும் அதில்கீழ் நாலுமூலையிலும் நாலு பெரிய கிளிஞ்சிட்டியும் மத்தி யில் நாலுபக்கத்திலும் அ கிளிஞ்சிட்டியும் பட்டை யில் உருட்டி வைத்திருக்கும் சாணி உருண்டை யின்மேல் வைத்து நல் திரிபோட்டு யெண்ணெய்விட்டு எல்லாவற்றிலுந் தீபமேற்றிவைத்து அதன்முன் மணை போட்டார்கள். வீட்டிலும் இடத்தலைருது கூடம், வாசல்படி, சமையலிடம்மாட்டுக்கொட்டம் பயிர்க்குழி இந்த இடங்களிலெல்லாம் கிளிஞ்சிட்டி யேற்றிவைத் தார்கள். புதுவைசெய்யாத விடுகளிலுங்கூட வழக்கப் பிரகாரம் வாழைமரமட்டும் ஊன்றுது கிளிஞ்சிகள் மேல் விளக்கு யேற்றி வைத்திருந்தார்கள். இராத்திரி அ-மணியானதும் எல்லாரும் பலகாரம்சாப்பிட வந்து விட்டார்கள். வந்தவரெல்லாம் பலகாரஞ் சாப்பிட்டு முடிந்ததும்; நமது ராமநாதனை மாப்பிள்ளைக்கோலமாகச்-



சிங்காரித்ததுடன் மஞ்சள் துணியில் அரைக்கால் ரூபாய் முடிந்துகொண்டு மாமன் வந்து முன் படைத்த வீட்டிற்குள் மேல்புறம் கிழக்குமுகமாய் மாப்பிள்ளையை உட்காரச்செய்து மாமன் மாப்பிள்ளைக்கு முன் மேற்கு முகமாக இருந்துகொண்டு மாப்பிள்ளைகையில் மஞ்சள் காப்புக்கட்டி சமுத்தில் மகரகண்டி, கெவுரி சங்கம், பதக்கம் முதலானதும் போட்டதுடன் பிச்சி மல் லிகை, முல்லை, ஹாரங்களும் போட்டு தலையில் ஜரிகைக் கரைகள் வரிசை வரிசையாகத் தெரியும்படி யெடுத்து சிங்காரமாகப் பட்டுக்கட்டி பீதாம்பரம் போர்த்தி கையில் பூச்செண்டும் கைபிடி லெஞ்சியுங்கொடுத்து மாமன் மாப்பிள்ளையை வெளியில் கூட்டிக்கொண்டு வந்து முத்தத்தில் இட்டிருக்கும் கோலத்தின்மேல் இருத்தி வைக்க; உடனே அங்குள்ள பெரிய மனுஷி வந்து ஒரு தட்டில் பிடித்துவைத்திருக்கும் மூன்று ஆலாத்திகளைத் திவட்டியில் பற்றவைத்து ஆலாத்தி யெடுத்து விபூதியை பையன் மாமன் இருவர் நெற்றியி லும் பூசி தன் நெற்றியிலும் பூசிக்கொண்டு வீட்டுக்குட் போகவும். மத்தியானமே தச்சன் கொண்டுவந்து கொடுத்த ஐந்து கிளையுள்ள மாவிலிக்கம்பில் பஞ்சு வைத்துக் கட்டி பசுவின் நெய்யில் நனைத்து வைத் திருந்ததை, ஒருவன் கொண்டுவரவும், வெற்றிலை பாக்கு ஒருவன் கொண்டுவர பொரி ஒருவன் கொண்டு வரவும் இரண்டு பேர் திவட்டி பிடிக்கவும் நம்முடைய ராமநாதனை வெளியில் கூட்டிக்கொண்டு வந்தார்கள்.

வெளியில் வந்தவுடன் வழக்கப்படி ஊரில் ஆலா த்தி யெடுக்க குதிரையேறிப் போகும் வழக்கம்போல்

குதிரை தயாராக வந்திருந்தது. அச்சமயம் நமது ராமநாதன், தற்காலம் தனக்கு நடந்து வரும் உபசாரங்கள், ஒவ்வொன்றையும் நினைத்துச் சந்தோஷிப்பான். தன் மார்பைப்பார்ப்பான். கைவிரலிலுள்ள வயிர மோதிரத்தைப் பார்ப்பான். காப்பும் கொலுசும் பார்ப்பான். புஷ்ப ஹாரத்தைப் பார்ப்பான். பீதாம்பர போர்வையைப்பார்த்து ஆனந்தித்துக்கொள்வான். அடிக்கடி தானிவ்விதம் பார்ப்பதை யாராவது பார்த்துவிட்டால் கேலிசெய்வார்களோவென்று வெட்கப்படுவான். மாமன் மைத்துனர்கள் பரிகாசஞ்செய்தால் வெட்கத்தால் தலைகுனிந்து கொள்வான். தான் மாப்பிள்ளைக் கோலமாக இருக்கிறதை நினைத்து நினைத்துச் சந்தோஷித்துப் புன்சிரிப்பாகப்பக்கத்தில் நிற்பவர்களைப் பார்ப்பான். இவ்விதந் தனக்கு கார்த்திகைப்புதுமை நடக்கிறதென்ற ஆனந்தத்தோடு குதிரையில் மாமனும் தோழனும் தூக்கிவைத்து இருபுறமும் பக்கத்தில் பிடித்துக்கொண்டு வர, இவன் தாய் தகப்பன் பந்துக்களும் கண்டு ரொம்ப ஆனந்தப்பட்டார்களென்றால் நமது ராமநாதனுடைய ஆனந்தத்துக்கு எல்லை இவ்வளவென்பது நாம் சொல்லாமலே எல்லாருந் தெரிந்துகொள்ளக்கூடும்.

அப்பால் குதிரை பிடிப்பவன் பிடித்துக்கொண்டு முன் செல்ல, ராமநாதனும் இடதுகையால் கடிவாளத்தைப் பிடித்துக்கொண்டும் அங்குமிங்கும் பார்த்து சந்தோஷித்துக்கொண்டுஞ் சென்றான். ஊரில் ஆலாத்தியெடுக்கவேண்டிய இடங்களெல்லாம் எடுத்து முடிந்ததும் பின்பு கோவிலுக்கருகாமையில் போய் குதிரையை



விட்டிறங்கி குளத்தில் கால்கை அலம்பிக்கொண்டு இவன் கோவிலுக்குட் போய் முன்னமே போயிருப்பவர்களுடன் நின்று; வரிசைக்கிரமப்படி ஒவ்வொருவராக சுவாமி தெரிசனை செய்து பிரசாதம் பெற்றுக்கொண்டார்கள். குருக்களையால் கோவில் கெர்ப்பகிரகத்தில் நின்று மாவிலிக்கம்பின் கீழ்ப்பக்கத்தைப் பிடித்துக்கொண்டு "மாவிலி மாவிலி மகாமாவிலி ஊராண்டான் மாவிலி ஒருக்காலு மாவிலி" என்று சொல்லி மூன்றுதரம் வலஞ்சுற்றினர். அப்பால் பிரதக்ஷண நமஸ்காரஞ்செய்துகொண்டு கோவிலுக்கு வெளியில் வந்து திருக்கார்த்திகைக்கு சுவாமியெழுந்தருளாகி வீதி வலம்வருகிறவர்களுடன் வலம்வந்து கோவிலுக்குமுன் கட்டியிருக்கும் சொக்கப்பத்தின்மேல் குருக்கள் நின்று மாவிலி சுத்தி பொரித்தீபத்தை நடுமரத்தின் உச்சியில் வைத்து இறங்கினர். உடனே அதில் தீவைத்து எரியவும் அந்த மரத்தை வெட்டி வடபுறஞ்சாய வீழ்த்தியவுடன் முன் குருக்களால் மாவிலி சுத்திய கம்பையே வந்திருந்த பெல்லாருடனுந் தானுஞ் சுற்றிவிட்டு சுவாமி கோவிலுக்குட் போகவும்; இராமநாதன் குதிரையேறி வீட்டுக்குவந்து இறங்கினன். வாசலில் ஆலாத்தியெடுத்தவுடன் வீட்டுக்குள் போயிருந்து வெற்றிலை பாக்கு போட்டுக்கொண்டு மாமன், தாய், தகப்பன், மற்றும் உள்ளபேரைக் கும்பிட்டு வணங்கினன். மாமனார் நகைகளைக் கழட்டிவைத்துவிட இராமநாதன்படுத்துக்கொண்டான். கார்த்திகையின் மறுநாள் இரண்டு வேளையும் மில்லெட்டி சாப்பாடு நடந்தது. காலை அந்தி இரண்டு காலமும் பலகாரம் காப்பி நடந்தது.

மூன்றும்நாள் சாயரக்ஷை பணமெழுதுவதற்காக வெல்
லாரும் முகத்தத்தில் மணைக்கி முன்னும்பின்னுமாக இர
த்தினக் கம்பளம் விரித்திருந்ததின்மேல் வீற்றிருந்
தார்கள். தீபங்களேற்றி வைக்கப்பட்டது. அத்
தீபத்தை அடுத்திருந்து பங்காளிகளில் ஒருவர்
மூன்று ஓலைகளைவாரி அவர்கையால் உமக-விரல் நிளம்
நறுக்கி ஐந்து விரலுக்கப்பால் தமிர்ப்போட்டு அதில்
இன்னவருஷம் இன்னமாதம் இன்னதேதி (என்று கார்
த்திகையன்றுள்ள தேதியைப்போட்டு) இன்னார் மகன்
இன்னார் கார்த்திகைப் புதுமைக்கி மொய்போட்டதற்
கு விபரமென்றெழுதி பங்காளிகளை முன்னும் மாம
னைப் பின்னும் மற்றவர்களை அதற்குப் பின்னுமாக
பணமெழுதி; முடிந்தது. பொரிக்கிட்டதென்று ஒரு
மேட்டில் தாயார் தகப்பனாரின் பெண் வழியார்
மொய்யெழுதி முடிந்தது. அதை எண்ணி மஞ்சள்
துணியில் முடிந்து எட்டிலும் மஞ்சள் தடவி வாரு
கடையால் எட்டை முடிந்து தாம்பாளத்தில் வைத்து
மாப்பிள்ளைகையில் கொடுக்க மாப்பிள்ளையும் வாங்கிக்
கொண்டு பெரியவர்களை நமஸ்காரஞ்செய்து அப்பால்
அவன் தம்பியால் அவனை நமஸ்கரிக்கச் செய்தார்கள்.
பின்பு வீட்டுக்குட் போய் நடுவீட்டில் வைத்து விட்டு,
தாம்பூலம் போட்டுக்கொண்டு வெளியில் வந்தவுடன்,
யெழுதினவருக்கும் பணம் கோட்டப் பார்த்தவருக்
கும் மற்றெல்லாருக்கும் வெற்றிலை பாக்கு சந்தனங்
கொடுத்தார்கள். எல்லாருக்குஞ் சாப்பாடு முடிந்தது.
நாலாநாள் யெண்ணை தேய்த்து ஸ்நாகஞ்செய்தார்கள்.
அஞ்சாநாள் மாப்பிள்ளைக்கி யெண்ணெய் தேய்த்து



வாழைமரத்தைப் பிடுங்கி, தோழில் வைத்துக்கொண்டு
போய் ஊரணியில் போட்டு, ஸ்நாநஞ்செய்து விடுவந்
தான். யெல்லாரும் அவரவர் வீடுபோய்ச் சேர்ந்தார்
கள். அன்று ராத்திரியே மாமன் வீட்டில் பெரிய
செட்டியார் அவர் சம்சாரம் ராமநாதன் முதலிய யெல்
லாருக்கும் காச்சி ஊத்தியபணம் பட்டை கொடுத்தார்
கள். வாங்கிக்கொண்டு வந்தபின் மறுநாள் மத்தியா
னம் செட்டியாரும் ராமநாதனுஞ் சாப்பாட்டின்மேல்
சிங்கப்பூருக்குப் புறப்பட எல்லாரிடமுஞ் சொல்லிக்
கொண்டு பிரயாணமாகி வடபாலுள்ள ஓர் பங்களாவில்
வந்துசேர்ந்தார்கள்.

---

## ஐந்தாம் அத்தியாயம்.

---

மறுநாட் காலே, ௫, மணிக்கு பங்களாவைவிட்டுப்
புறப்பட்டு சிநேகிதர்களுடன் சகுனம் பார்க்க ஆரம்
பித்தார்கள். முன் ஜோஸ்யம் அப்புக்குட்டி அய்யர்
சொன்னபிரகாரம் யெல்லாச்சகுனமும் ஆனபின் தயா
ராக இருந்த வண்டியிலேருவருமேறி காரைக்குடிவந்து
பலகாரஞ் சாப்பிட்டு காறுகொத்தான்வந்து சாப்
பிட்டார்கள். மத்தியானம் சாப்பாடானதும் ௨-மணிக்
கிப் புறப்பட்டு ௫-மணிக்குப் புதுக்கோட்டை வந்து
சேர்ந்தார்கள். வந்தவுடன் உலகநாத சுவாமிமடத்தில்
வண்டியை அவிழ்த்து இராச்சாப்பாடானதும் நித்தி
ரை செய்துகொண்டார்கள். காலையில் தாங்களேறி

வந்தவண்டியை ஊருக்கனுப்பிவிட்டு தஞ்சாவூர்போகும் குதிரைத் தபால் வண்டியிலேறி மேகூட யாகிய அன்று மத்தியானம் தஞ்சாவூர் வந்து சாப்பாட்டின்மேல் நாகபட்டணம் போகும் ரயிலேறி இராத்திரி நாகப்பட்டணம்வந்து செட்டிகள் விட்டுக் கடையிலிறங்கினார்கள். உடனே காலை கப்பலுக்கு ஆர்டர்வாங்கியும் சாப்பாட்டுக்காக வேண்டிய சாமான்களும் சிற்றுண்டிக்காக வேண்டிய சாமான்களும் வாங்கிக்கொண்டு ஊருக்கும் விபரமாக லெட்டரெழுதிவிட்டுப் புறப்பட்டு அவ்விடமுள்ள தங்களுக்குத் தெரிந்த சிலருடன் கடற்கரை யோரமாகவந்து பினாங்குக் கப்பலுக்குப் போகத் தயாராக இருக்கும் படகில்லேறி எல்லாருடனும் பயணஞ் சொல்லிக்கொண்டார்கள். நடு மத்தியான நேரமாகையால் படகும் ஏழெட்டுமயில்போய் கப்பலேறவேண்டியபடியால் வெயில் ஜாஸ்தியாக ஜாஸ்தியாக அப்படகிலுள்ள புதுப்பிரயாணிகளுக்கும் நமது ராமநாதனுக்கும் மயக்கமுண்டாகி ஒவ்வொரு பெரிய அலைகள் வந்து படகைத் தூக்கி ஆட்டும் போதெல்லாம் வாந்தி செய்வதுடன் ஒவ்வொருவனும் கொஞ்சந் தைரியமாக இருக்குந் தங்கள் ஜனங்களைக் கட்டிக்கொள்வார்கள். இவ்விதம் ராமநாதனுக்கு ரொம்ப மயங்கினான். வாந்திசெய்தான். இவ்வித கஷ்ட சமயத்தில் படகோட்டும் துஷ்டர்கள் தங்கள் வழக்கப்பிரகாரம் ஒவ்வொருவரிடமும் கால் அரை என்று வாங்கியும் அவ்விதம் யாராவது தராவிட்டால் எல்லாரையும் இம்சை செய்வோமென்று படகை ஆட்டியும் படகை முன்விடாமல் நிறுத்திப் பின் போக



விட்டும் இவ்விதமாகக் கஷ்டப்படுத்தி ஜனங்களிடம் இயன்றவரை வாங்கிக்கொண்டு பத்துமணிக்குப் படகேற்றிய ஜனங்களை மூன்றுமணி சுமாருக்கு கப்பலில் கொண்டுவந்து ஏற்றினார்கள். யாவருங் கப்பலேறினார்கள். இவ்வளவு காலமுங் கடலையே பார்க்காதிருந்த நமது ராமநாதனுக்கு கடலினுடைய தோற்றம் அதிக ஆச்சரியத்தையும் பயத்தையு முண்டாக்கிற்று. படகில் வரும்போது படகசைந்ததையும் அதனால் தனக்கு வாந்தியுந் தலை மயக்கு முண்டானதையுங்கண்டு பயந்தானென்றாலும் பெரிய செட்டியார் தைரியத்தைச் சொல்லிக்கொண்டு வந்ததினால் சிறிது ஆறுதலோடு மனதைச் சமாதானப்படுத்திக்கொண்டான். கப்பலில் கீழ்த்தட்டில் பந்தோபஸ்தான இடம் பார்த்து உட்கார்ந்தார்கள். கப்பலும் சற்று நேரத்திற்கெல்லாம் புறப்பட்டது. பெரிய செட்டியார் முன் கப்பலில்போய்ப் பழக்கமுள்ளவராகையால் அவருக்குச்சொந்த வீடுபோலவே இருந்தது. ராமநாதனுக்குமட்டும் மறுநாள் மத்தியானம் வரையில் தலை தூக்கமுடியவில்லை. கொஞ்சம் வாந்தியுமெடுத்தான். பெரியவர் வேண்டிய சிகிச்சைகளைச்செய்து தைரியப் படுத்திக்கொண்டுவந்தார். சிறிது மயக்கந் தெளிந்ததும் ஆகார முதலியது செய்துகொண்டு உடம்பைத்திடப் படுத்திக்கொண்டான். ஆனால் மூன்றுநாள் சாயரக்ஷை வரையில் அவன் கப்பல்மேல்த்தட்டுக்குப்போகவில்லை. அன்று சாயரக்ஷை உடம்பு குணமாயிருந்ததினால் பெரிய செட்டியாருடன் கப்பல் மேல்தட்டுக்குப் போய் ஒரு இடத்தில் உட்கார்ந்தார்கள். குளிர் காற்று

ஜில்லென்று தேகத்தின்பேரில்படவும் ராமநாதனுக்குச் சந்தோஷமாக இருந்தது! கன்னங்கரேலென்று கண்ணுக்கெட்டியதூரம் ஒரே நிறமாக இருந்த ஜலப்பிரவாகத்தைப் பார்த்துக்கொண்டிருந்த (ராமநாதன்) கொஞ்ச நேரத்திற்கெல்லாம் மனதிற்குள் மிகவும் ஆச்சரியப்பட்டவனாய் தகப்பனைப்பார்த்து அப்பச்சி! இந்தச் சமுத்திரம் எவ்வளவு தூரம் வரை இப்படி இருக்கிறதெனக் கேட்டான். பெரிய செட்டியார் நமக்கென்ன தெரியும்! நம்ம சிங்கப்பூருக்குப்போகிறதுக்கு பினாங்குபோகிற வரையிலும் பினாங்கிலிருந்து சிங்கப்பூருக்குப்போகிற வரையிலும் இப்படித்தானிருக்கும்.

ராமநாதன்:—இந்தக்கப்ப ஆரு வீட்டு?

பெரியசெ:—வெள்ளக்கார வீட்டு.

ராமநாதன்:—வெள்ளக்காரர் இருப்பது எந்த ஊர்?

பெரியசெ:—அவுக இருக்கிறது சீமை.

ராம:—அவுக இருக்கிற சீமை நம்ம ஊரிலேயிருந்து யெவ்வளவு தொலையிருக்கும்?

பெரிய:—அது யெவ்வளவோ யெனக்குத் தெரியாது கப்பலேறிப்போனா ஒருமாசந் செல்லுமாம்.

ராம:—நம்ம பக்கத்திலே யிருக்கிறவுகளுக்கு கப்ப இல்லியோ?

பெரிய:—வச்சிருக்காக.

ராம:—நம்ம அதிலேபோனா யென்ன?

பெரிய:—அது பாய்க்கப்ப அதிலே இவ்வளவு தொலைபோக முடியாது.

A-1 24



ராம:—ஏன் அதிலேபோனா யென்ன?

பெரிய:—அது காத்து வந்தாத்தாம் ஓடும். இது வெசைக்கப்ப வெசையினாலே ஓடும் அதினாலே தானிதிலே யெல்லாரும் ஏராது.

ராம:—நம்ம பிள்ளைய யேனிந்த மாதிரிக்கப்ப வைக்கப்படாது?

பெரிய:—நம்மவுக ஒத்துமையில்லே. ஒருத்தரே இம்பிட்டுப்பணம்கொடுத்து ஆரு வெசைக்கப்பவாங்கி வைச்சு ஓட்டப்போறா.

ராம:—வெள்ளக்கார யென்னமா வாங்கி வச்சிருக்காக அப்பிடி நம்மளும் வாங்கி வச்சாயென்ன?

பெரிய:—அது யென்னமோ யெனக்குத் தெரியாதே. நமக்கென்ன இதெல்லாம். சிங்கப்பூருக்குப் போய்ச்சேர்ந்தாச் சரிதாம் பேச்சுவேண்டாம்.

ராம:—இந்த கப்ப வரும்படி யெல்லாம் ஆரு யெடுத்துக்கிறது?

பெரிய:—வெள்ளக்கார தானெடுத்துக் கருவாக. வேறை ஆருயெடுத்துக்கிறா.

ராம:—அவுக யெடுத்துக்கிறா சீமைக்குத்தானே கொண்டு போவாக! நம்மளும் கப்ப வச்சா யெவ்வளவு மிச்சம் யேன் வைக்கப்படாது?

பெரிய:—அதென்னமோ யெனக்குத் தெரியாது இதெல்லாம் நமக்கென்ன.

ராம:—பினாங்குக்கு யெப்பப்போயிச் சேருவம்?

பெரிய:—இன்னம் அந்தகாசசொல்லும். சரி கீக்குத்தனுக்குப்போகலாம் வா பொழுது போச்சு.

ராம:—வாங்க வென்று பெரியசெட்டியாருடனே எழுந்து கீழ்க்குத்தனுக்குப்போய்ச் சாப்பிட்டு விட்டுத் தூங்கினார்கள். காலை சூரிய உதையமானதும் தந்த சுத்தி முதலானது செய்து பலகாரஞ் சாப்பிட்டுவிட்டுப் படுத்திருந்தார்கள். அச்சமையம் மேற்குத்தளிலுள்ள ஜனங்களெல்லாங் கோவென்று சப்தம் போட்டார்கள்.

கப்பல் வேலைக்காரர்கள் மிழுமேனுமாக ஓடிக்கொண்டும், கயிறு முதலான சில சாமான்களைத்தேடிக்கொண்டும், சப்தம் போட்ட ஜனங்களை அடக்கிக்கொண்டும், அங்குமிங்குமாக அலைந்துகொண்டிருந்தார்கள். கீழ்க்குத்தலிலிருந்தவர்களில் ஒருவருக்கும் ஒன்றுந் தெரியவில்லை. சற்று நேரத்திற் கெல்லாம் கப்பல் வேலைக்காரர் தவிர மற்றவர்களெல்லாம் கீழ்க்கட்டுக்குப் போய்விடும்படியாக கப்பல்காரர் உத்தரவு செய்ததினால் மேலிருந்தவர்களெல்லாம் உள்ளே வேகமாக இறங்கினார்கள். அவர்களும் காரணந் தெரியாதவர்களாகவே *கூப்பாடு போட்டுக்கொண்டிருந்தார்கள். நமது ராமநாதன் தகப்பனைப்பார்த்து ஏனிப்படி ஜனங்கள் சத்தம் போடுகிறார்களென்று கேட்டான். அதற்கவர் "கப்பலுக்கு யென்னமாவது ஆபத்துவரும் போலிருந்தாத்தானிப்படி ஜனங்களை கீழிறக்கிக் கதவுகளைச் சாத்துவதின்னு சொல்லுவாக. சங்கதியென்னமோ தெரியலே," யென்று சொன்னார். ஜனங்கள் பயப்





படும்படியாகப் பலவிதமான பிரஸ்தாபங்கள் பேசிக்கொண்டார்கள். கொஞ்சநேரத்திற்கெல்லாம் முன்னிலுங் காற்று அதிகமாக அடிக்க ஆரம்பித்தது. நிமிஷத்துக்கு நிமிஷங்காற்று அதிகமாகி கப்பல் ரோல் பண்ண, (ஆட்ட) ஆரம்பித்தது. அத்துடன் பெருமழையுந் தொடங்கிற்று. ஜாஸ்தியாய்க் கப்பல் ரோலாக ஆக வாந்தி யெடுக்கிறவர்களும், மயங்கி விழுபவர்களும் நடக்கும்போதே தடுமாறி விழுகிறவர்களுமாக; மூட்டைகள் கப்பலாட்டத்தால் அங்கு மிங்கும் புரண்டு ஜனங்களின் மேல் விழ அதனுல்காயப்பட்டவர்களும் தங்கள் தங்களைச்சேர்ந்த ஒவ்வொருவரும் ஒருவரையொருவர் கட்டிக்கொண்டு சத்தம் போட்டு அழுபவர்களும் இவ்விதங் கப்பலிலுள்ள யெல்லா ஜனங்களும் அவஸ்தைக்குள்ளாகி இருக்குஞ்சமயம். மாலுமியான ஒரு வெள்ளைக்காரன் கீழே இறங்கி வந்து பெரிய சப்தமாக ஜனங்களே! புயல் ஜாஸ்தியாகி விட்டது!! இனிக்கப்பலோட்டும் யெங்களாலும் ஒன்றுஞ் செய்ய முடியாது! அவரவர் தெய்வங்களை அவரவரும் வேண்டிக்கொள்ளுங்கள்!! இனித் தெய்வச் செயலே! இன்னும் அரைமணி நேரமிவ்விதம் காற்றடித்தால் கட்டாயம் கப்பல் முழுகிப்போகும்!! யென்று சொல்லிக்கொண்டே மேலே போய்க் கதவை சாத்திக்கொண்டான். இவன் சொல்லிய வார்த்தையை இங்கிலீஷ் தெரிந்த சிலர் தமிழில் சொல்லவே ஜனங்கள் முன்னைப்பார்க்கிலும் ஜாஸ்தியான கலவரப்பட்டு இந்துக்களெல்லாம் தண்ணீர்மலைவடிவேலனை நினைத்துக் காணிக்கை முதலானது செலுத்

துவதாயும், ஒவ்வொருவரும் கால்மண்டலம் விரதத்தோடும் மலையின்பேரிலேயே யிருப்பதாயும் மிகுந்த கூக்குரலோடும் சிறந்த பக்தியோடும் பிரார்த்தித்துக் கொண்டார்கள். மகம்மதியர்களோவெனில் நாகூராண்டவருக்குக் காணிக்கை செலுத்துவதாயும் சிலர் மக்கத்துக்குப்போய்வருவதாயும் நேர்ந்து கொண்டு கப்பலிலும் நாகூராண்டவருக்குப் பாத்தியா ஓதுவதாயும் நேர்ந்து கொண்டார்கள். இந்துக்களிலும் பெரும்பான்மையோர் நாகூராண்டவருக்கும் நேர்ந்து கொண்டார்கள். இவ்வித சமயத்தில் நமது ராமநாதனும் அவன் தகப்பனும் மயங்கி இருந்ததில் பெரிய செட்டியார் கொஞ்சந் தெளிந்து ராமநாதனை கட்டிக்கொண்டு ஒன்றும் பேசமுடியாதவராக மயங்கினர். அப்பால் ராமநாதனுங் கொஞ்சந் தெளிந்து கப்பலின் கோரத்தைச் சகிக்கமுடியாதவனாய் வாந்தி யெடுக்கவுஞ் சக்தி யற்று தகப்பனைக் கட்டிக்கொண்டு துயரப்பட்டான். செட்டியாருந் தெளிந்து ராமநாதனையுந் தேற்றி தண்ணீர்மலை வடிவேலவர்க்கும் மதுரை மீனாட்சி சொக்கலிங்கத்துக்கும் பழனியாண்டவருக்கும் சிங்கப்பூர்த் தெண்டாயுதபாணிக்கும் மற்றத் தெய்வங்களுக்கும் வேண்டிய வரை மனதால் பிரார்த்தனை காணிக்கை முதலானதும் நேர்ந்து கொண்டு இருந்தார்கள். இவ்விதம்நேரமாக ஆக காற்று ஜாஸ்திப்பட்டதே தவிர குறையவில்லை. அவ்விதமிருந்தாலும் சுழல்காற்றடியாது ஒருதிக்காகவே அடித்துக்கொண்டிருந்ததால் கப்பல் ஆடல்மட்டும் ஜாஸ்தியாக இருந்ததே தவிர ஆபத்தொன்றும் நேரவில்லை.

AS - 26



கப்பலிலுள்ள மிஷின்களை யெல்லாம் நிறுத்திக் காற்று வாட்டத்திலேயே கப்பலை விட்டுவிட்டார்கள். கப்பலும் வடபாலிலே போய்க்கொண்டிருந்தது.

சுமார் 4-மணிக்கெல்லாம் காற்றுப் பூராவாக நின்றது. ஜனங்களும் அமரிக்கையானார்கள். கப்பித்தானும் காற்று நின்றுவிட்டது. இனிக்கப்பலுக்கபாயமில்லை யென்று யெல்லாருக்குந் தைரியஞ் சொல்லி ஜனங்களை மேல்த்தட்டுக்கு விட்டுவிட்டான். உடனே ஜனங்கள் கரகோஷஞ்செய்துகொண்டு சந்தோஷத்துடனிருந்தார்கள். இஸ்லாமானவர்களிற் சிலர் செம்பொன்றெடுத்து காலணா அரையணா ஓரணா இவ்விதமாக யெல்லாரிடமும் அவரவர் தருவதை வாங்கி முடித்தவுடன் சக்கரை பழ முதலான அவ்விடமுள்ள சாமான்களை வாங்கி நாகூராண்டவருக்கு பாத்தியா ஓதினார்கள். அன்றிராத்திரி ஜனங்கள் முன் பட்ட அவஸ்தையால் கொஞ்சந் திகில்பட்டவர்களாகவே சாப்பாடுமுதலானதுஞ் செய்துகொண்டார்கள். அப்பால் பினாங்கு போய்ச்சேரும்வரை யாதொரு வருத்தமுமில்லாது ஒன்பதாநாள் வரவேண்டிய கப்பல் பத்தாநாள் காலையில் பினாங்குவந்து சேர்ந்தது.

கப்பல் வந்தவுடன் அவ்வூர் வழக்கம் போல் யெல்லாரும் கப்பலடிக்கு வந்திருந்தார்கள். யெல்லா ஜனங்களும் பாலத்திலிறங்கியவுடன் நமது சுப்பிரமணியஞ் செட்டியாரையும் ராமநாதனையுங் கண்டு சினேகிதர்களெல்லாம் மிகுந்த அன்போடும் ஆதரவோடும் கூட்டிக்கொண்டு செட்டிகள் வீடுருக்கும்

பெரியவீட்டுக்குப்போய்ச் சேர்ந்தார்கள். சேர்ந்ததும் நெருங்கிய சிநேகிதரொருவரின் கடையில் வெந்நீர் போட்டுத் தயாராக இருந்தது. இருவரும் ஸ்நானஞ் செய்து சிநேகிதரால் கொடுக்கப்பட்ட சுதேச வேஷ்டிகளிரண்டை செட்டியாரும் இரண்டை ராமநாதனுமாகக் கட்டிக்கொண்டு மேல் வீட்டிலுள்ள தெண்டாயுதபாணியைத் தெரிசனை செய்து சாப்பாடானதும் கொஞ்சம் படுத்திருந்து பொழுதவுடன் யெல்லாரும் வந்து யோகக்ஷேமங்களை விசாரித்து கப்பலின் அவஸ்தைகளையுங்கேட்டு வருத்தமும் ஆச்சரியமுமுடையவர்களாய் சந்தோஷத்துடன் அவரவரும் போனபின் அங்குள்ள சிலரும் நமது செட்டியாரும் ராமநாதனுங் கூட தண்ணீர்மலைக்குப்போய் சுவாமி தெரிசனைசெய்து விடு வந்து சாப்பாடு செய்துகொண்டு நித்திரை செய்து காலையிலெழுந்தார்கள். அன்றும், அவ்விடமிருந்து ஊருக்கு லெட்டரெழுதி சிங்கப்பூருக்குந் தந்தியுஞ் சொல்லிவிட்டு மூன்றுநாள் மத்தியானம் சிங்கப்பூர்க் கப்பலேறி சவுக்கியமாய்ச் சிங்கப்பூர் வந்து சேர்ந்து கப்பலைவிட்டிறங்கினார்கள். அவ்விடத்திலுள்ள செட்டிப்பிள்ளைகளும் மற்ற ஜாதிக்காரர்களும் வந்திருந்து செட்டியாரையும் ராமநாதனையும் கண்டு மிகுந்த அன்போடு கட்டிக்கொண்டு இரட்டைக் குதிரைச்சாரட்டிலேறி கடைக்குவந்து சேர்ந்தார்கள்.

அன்று ஸ்நானஞ் செய்து சுவாமி தெரிசனை செய்துகொண்டு சாப்பாடானதும் யோகக்ஷேமங்களை அவரவரும் வந்து விசாரித்தார்கள். யெல்லாரும் நமது ராமநாதனுடைய ஒழுங்கும் ஒடுக்கமுங் கண்டு வியந்

47 27



தார்கள். மறுநாள் காலையில் பெரிய செட்டியார் கண்ணப்ப செட்டியைக் கூப்பிட்டுக் கணக்கு முதலானதுகளைப் பார்த்தும் ஒவ்வொன்றையும் விபரமாகக் கேட்டும் வருத்தப்பட்டுக்கொண்டாரே தவிர இக்காலத்தவர்களைப்போல், ஜாதி அபிமானமின்றி சிவில் முதலிய விவகாரங்களை கிரிமினலில் செய்ய ஆரம்பிக்கவில்லை. இரண்டுநாள் சென்றதும்.

பெரிய செட்டியார்:—சினேகிதர்களில் இரண்டொருவரை வைத்துக்கொண்டு கணக்கு வழக்குகள், ரிக்கார்டுகள், வாங்கல், கொடுக்கல், முதலிய சகல விஷயங்களையும் பரிசோதனை செய்தும் தன் கூட்டாளியாகிய கண்ணப்பசெட்டியை வேண்டிய கேள்விகளைக் கேட்டு ஒவ்வொன்றாக விபரங்களை எல்லாந்தெரிந்து கொண்டு கண்ணப்பசெட்டியைப்பார்த்து என் நீ நம்முடைய கடிதங்களையும் நடக்கவேண்டிய மனுஷர்களின் அபிப்பிராயங்களையும் கொஞ்சமுங் கவனிக்காது ஒன்றுடைய நோக்கம்போல் இவ்வளவு பெரிய தொழிலைச்செய்ய ஆரம்பித்தாய்?

கண்ணப்பசெட்டி :—ஆபீசுக்காரர்கள் வங்கிக்காரர்கள் முதலாகியபெரிய வியாபாரிகள் இவ்விதமான தொழிலால்த்தானே பெருத்தலாபம் அடைகிறார்கள். நாமளும் செய்தால் அவ்விதம் லாபம் அடையக்கூடியதுதானே யென்று செய்தேன்.

பெரிய செட்டியார்:—அவர்களுக்கு இருக்கும் முதலெவ்வளவு? நமக்கிருக்கு முதலெவ்வளவு? அவர்களைப்போல் நமக்கு லாபம் கிடைக்குமென்று

யென்ன தீர்மானம்? நமக்கு லாபம் வந்தால் தாங்கும் நஷ்டம் வந்தா லென்ன செய்கிறது?

கண்ணு:—அவர்களுக்குமட்டிலும் லாபங்கிடைப் பானேன் நமக்கு நஷ்டம் வருவானேன்?

பெரிய:—அவுக கடன்கார நெருக்குக் கேக்க மாட்டாக நம்மை நெருக்கிக்கேப்பாக அவ்விதம் யெல்லாரும் நெருக்கிக்கெட்டுட்டா எங்கிருந்து பணங்கொடுக்கிறது? வாங்கி இருக்கும் பண்டமெல்லாம் சேர்க்கனே நோக்கும்போல் கொள்ளைக்குத்தானே கொடுக்கவேணும்? அப்படி வித்தா யெவ்வளவு நட்டம் வரும்? வார நட்டத்துக்கு லாபம் யார் கையிலிருந்து குடுத்து சரிபண்ணிக்கொள்ளுறது? நீ பேசுறதெல்லாம் வெள்ளைக்காரரைப்போலே தானிருக்கு காரியங்க ளொண்ணுந்தான் சரியாயில்லே. ஒம்பேச்சுக்கும் யெம் பேச்சுக்கும் சரிப்படாது. இருக்கிறவரை கணக்குச் சரியாத்தா னெழுதிவச்சிருக்காய் காரியங்கதான் ஒண்ணுஞ் செட்டிய விட்டு மொறையாயில்லே.

கண்ணு:—முந்தி நடந்ததை இனிமே ஒண்ணுஞ் செய்யமுடியாது. இனிமே நடக்கவேண்டியதைச்சொன்னு அதுபோலே செய்யராது.

பெரிய செட்டியார்:—இனிமே நடக்கவேண்டிய தென்ன? ஒளுங்கா மொறையாக்கணக்குகளை ஒப்பிச்சுப்பிட்டு நீ வெலகிக்கிற வேண்டியதுதான்.

கண்ணு:—நீங்களே வந்து கணக்கை ஒப்புக் கொள்ளுகிறதின்னா யெனக்கு ரொம்பசந்தோசம். நல்லா அதுபோலவே இண்ணைக்கே முடிச்சுகிறது.



பெரிய செட்டியார்:—நீ சொல்லுறபடி சரி நல்லா முடிச்சுக்கிறது. என்தம்பி முருகப்பா! சின்னய்யா! கண்ணப்பன் சொல்லுறதுந் சரிதானே? அதுபோலே சங்கதியை முடிச்சுக்கிறது இரண்டுபேருக்கும் மதிப்புத் தானே ஒங்க நோக்கமென்ன?

முருகப்பசெட்டியார்:—யெங்க நோக்கமென்ன! அவம்பேருங்கெட்டுப்படாது ஒங்க பணமும் போயிரப் பிடாது. ஒண்ணுங்கலவரையில்லாமெ மொறையாக் காரியங்களை முடிச்சுக்கிறதுதான் தேவிலே சின்னய்யா நோக்கமும் அப்படித்தான்.

பெரிய செட்டியார்:—சரி ராமய்யா யெங்கே?

ராமநாதன்:—யேன்?

பெரிய செட்டியார்:—கணக்கு வழக்குகளை யெடுத்துக்கிணு முத்தய்யாவையும் இங்கே கூட்டிக் கிணுவா.

ராமநாதன்:—சரி, கூட்டிக்கிணுவாறேன். யென்று சொல்லிவிட்டு பெட்டியடிக்கிப்போய் சிட்டை குறிப்பு பேரேடு ரிக்கார்டுகள் முதலிய சகலத்தையு மெடுத்து முத்தய்யாவையுங் கூட்டிக்கொண்டு யெல்லாரு மிருக்கிற இடத்துக்குவந்து சேர்ந்தான். உடனே யெல்லாருமாக இருந்து கணக்குகளையும் ரிக்கார்டு களையும் கிரமப்படி ஒப்புக்கொண்டு ராமநாதனிடம் ஒப்புவித்து ஒவ்வொரு ஆசாமிகளிடமும் நேரில் கணக்குகளை ஒத்துக்கொண்டார்கள். ஏஜண்டு கண்ணப்ப செட்டியையும் சம்பளக்கணக்குப்பார்த்து அதிகம் பிரிதியை வாங்கிக்கொடுத்து சீர்பண்ணி

சம்பளச்சீட்டைக்கொடுத்து மரியாதையாய் வழிசெலவுக்கு நூறு வெள்ளியுங்கொடுத்து விலகிவிட்டார்கள். அப்பால் வரவேண்டியதுகளை வசூல்பண்ணிச் செலவுக்காரர்களுக்குக்கொடுத்துவந்தார்கள். அப்படி நடந்துவரும்போதே ஈபலொம்பச்சேர் விலை கூடுதல் குறைச்சல்களை அடிக்கடி கவனமாகப்பார்த்து வந்ததில் இனிமேலும் விற்காதிருந்தால் கடன்காரரின் இம்சை ஜாஸ்தியாகுமென்று நினைத்தும் சிறிது காலஞ்சென்று விற்றால் விலை குறையுமென்றும் அதிக நாள் தாமசிக்கக்கடன்காரர் பொறுதியாக இருக்க மாட்டார்களென்றும் தற்காலம் விற்றால் வட்டி மட்டுத்தான் நஷ்டம் வரக்கூடுமென்றும் உத்தேசத்தோடு இருபதினாயிரம் சேரையும் முன்வாங்கிய விலைப்படி சேர் ஒன்றுக்கு வெள்ளி பத்தாக விற்றுக் கடன்காரர்களுக்கெல்லாம் கொடுத்து பேரைக்காப்பாற்றிக் கொண்டார்கள். அதில் ஆறேழு மாஸத்து வட்டிதான் நஷ்டம். மற்ற வியாபாரங்கள் ஒழுங்காய் நடந்துவந்ததினால் இவ்வட்டி நஷ்டம் ஒருவிதமான கெடுதிக்கும் இடம் உண்டாக்கிவிடவில்லை. இப்படி ஒருவருஷத்துக்குள் சகல விஷயங்களையும் முடித்து ஜாஸ்தி செலவில்லாமல் வியாபாரங்களை ஒடுக்கிச் சில்லரைக் கிஸ்திக்குக்கொடுத்து வாங்குவதைமட்டும் சுருக்காமல் வேலை நடந்துவந்தது. ராமநாதனும் தினசரி சாப்பாட்டின்மேல் க-மணிக்கு வழக்கப்பிரகாரம் முத்தப்பாவுக் காணமாக கிஸ்திவாங்கப்போய் வருவான். ஒவ்வொரு நாளில் தான் மட்டிலும் போவான். புத்திசாலியாகையால் அந்த ஒருவருஷத்துக்குள்ளாகவே சகல



வேலைகளையுந் தானே பார்த்துக்கொள்ளக்கூடிய நிலைமைக்கு வந்ததோடு அத்தேச பாஷையான மலாயி சீனு முதலிய பேச்சுக்களையுங் கற்றுக்கொண்டான். பெரிய செட்டியாரும் பார்த்து சந்தோஷப்பட்டு தான் ஒன்றையுங் கவனிக்காது யெல்லாம் ராமநாதன் பொறுப்பாக விட்டுவிட்டார். ராமநாதனும் தகப்பனார் ஒன்றையுங் கவனிக்காதிருந்தாலும் அவசியமான விஷயங்களைத் தகப்பனாரைக்கலந்தே செய்வான். ராமநாதனே சகல வேலைகளையும் பார்த்து வருவதாலும் தனக்கு வேலைப்பொறுப்பில்லாது வீணாய் மாதம் ஒன்றுக்கு முப்பது நாற்பது வெள்ளி ஜாஸ்திச்செலவு யெதற்காக வென்றும் தான் ஊருக்குப் புறப்பட நினைத்து தன் சிநேகிதர்களிடம் பெரிய செட்டியார் சொன்னார். அவர்களும் சரிதான் என்று ஒப்புக்கொண்டார்கள். இதுவரை தகப்பனாரை விட்டுப் பிரிந்திராத ராமநாதன் கொஞ்சம் வருத்தமடைந்தான். பெரிய செட்டியாரும் மகனுக்கு வேண்டிய புத்திமதிகளையும் வியாபாரத்தோதையும் தைரியத்தையுஞ் சொல்லி அவன் மனதைத்தேற்றி வேண்டிய காரியங்களுக்குத் தன் சிநேகிதர்களிடம் கலந்து கொள்ளும்படியும் சொல்லிவிட்டு சிங்கப்பூரை விட்டுப் புறப்பட்டு பினாங்குவந்து நாகப்பட்டணங் கப்பலேறி சௌக்கியமாய் ஊர்வந்து சேர்ந்தார். சிங்கப்பூர் வியாபாரம் ராமநாதனிருந்து செய்து வந்ததால் மதிப்பாகவும் ஒழுங்காகவும் நடந்துவந்தது. நமது ராமநாதன் காலையிலெழுந்தவுடன் தந்தசுத்தி முதலானது செய்துகொண்டு பலகாரஞ் சாப்பிட்டானதும்

முதல் நாள் கணக்குகளை யெழுதி முடித்து மூத்துக் கொண்டு பத்துமணிக்கெல்லாம் ஸ்நானம் முதலியது களை முடித்தும் கொஞ்சம் ஸ்வாமியாராதநஞ்செய்து கொண்ட நித்திரைசெய்து மூன்று மணிக்கெல்லாம் எழுந்து காலைக் கடந்செய்து கொண்டு கிடங்கிற் போய் இராத்திரி ௭ மணிக்கெல்லாம் வந்து சேருவான். வந்தவுடன் கணக்குகளையெழுதி கிட்டம் பார்த்து குளோசானதும் மேல்மாடியிலிருக்குந் தெண்டாயுதக்கட்டிலில் தெரிசித்துக்கொண்டு போஜனமுடித்து நித்திரைக்குப்போவது வழக்கம்.

---

## ஆறுவது அத்தியாயம்.

---

சிங்கப்பூரிலிருந்து பெரிய செட்டியார் ஊர் வந்து சேர்ந்ததும் யெல்லாரும் வந்து பெரியசெட்டியாரைக்கண்டு வியாபார விஷயங்களையும் மற்ற யோக க்ஷேமங்களையும் விசாரித்து ராமநாதன் மேலாளாக இருந்துகொண்டு இருக்கும் விஷயத்தைத் தெரிந்து சந்தோஷப்பட்டார்கள். கொஞ்சநாள் சென்றதும் நமது ராமநாதனுக்குக் கலியாணஞ் செய்யவேணு மென்று செட்டியாரும் ஆச்சியுமாக யோசனைசெய்து பத்துப்பெண்கள் வரை இவர்களுக்குத் தெரிந்தது களைப் பற்றிப்பேச அதில் செட்டியாருக்கும் ஆச்சிக்குமே கொஞ்சம் விவாதமுண்டாகி அதின்மேல் முடிவானது.



ஒருநாள் சம்சாரத்துடன் பேசிக்கொண்டிருக்கும் போது பெரியசெட்டியார் ஏன் நம்ம தெக்கு வீட்டு நாராயண மக சேதியென்ன?

வள்ளியம்மையாச்சி:—நல்லதாம் பொண்ணும் அழகாத்தானிருக்கா அவ்வளவு கெட்டிக்காரியில்லே, செய்யுறதுஞ் சுருக்கமாகத்தாஞ் செய்வாக.

பெரியசெட்டியார்:—செய்யுறது சுருக்கமாச்செய்தா யென்ன! நமக்குப் பொண்ணும் நல்லவளா இருந்து குடும்பமும் மதிப்பாயிருந்தாச் சரிதானே. இதுபடிக்காட்டா முடிச்சுவிட்டு சுப்பய்யாமக நல்லபொண்ணின்னு தாஞ் சொல்லுராக அதென்னசேதி?

வள்ளி:—நல்லபொண்ணுதாம் நல்லாவுஞ்செய்வாக, தாய் தகப்பனும் நல்லவுகதான், சனக்கட்டுக்காரு; நல்லவம்மிசம் ஒருகுத்தமிருக்கு பொண்ணுக்கு மாலைக் கண்ணு!!

பெரியசே:—சரி, சரி, அதைப்பத்தி மேக்கொண்டு சொல்லவாண்டாம், யெங்கபெரியமுத்தப்பா அண்ணன் மகசின்னன் சிவராம ஆயித்தானமக தங்கப் பொண்ணு குத்தமில்லையா நீ பாத்திருப்பியே?

வள்ளி:—ஆரு! நம்ம சின்னகருப்பாயி ஆயித்தி மக நடுவிலம்ஞ்சிதானே?

பெரிய:—ஆமா, ஆமா, தெரியாதுபோலே யென்னென்னமோ கேக்கிரியே.

வள்ளி:—யில்லே, யில்லே, நல்லாக்கேட்டுக்கிறு சொல்லுவமேயின்னு கேட்டேன் அதுக்கென்ன, அந்தப் பொண்ணு நல்லவயின்னுதாஞ் சொல்லுராக

கொஞ்சங் கோவியாம் அவ்வளவு அடக்கமான புத்தி யில்லியாம். ஆரைக்கண்டாலுஞ் சிறுச்சுச் சிறுச்சுப் பேசுவாளாம்.

பெரிய:—ஒன்னையைக்கோட்டா யெல்லாரையுந் தானுட்ட சொல்லுவாய். ஒப்பனைகபோலதானெதை யாவது ஒண்ணைச்சொல்லி முடி.

வள்ளி:—நீங்களாந் சொல்லுரீங்க. எல்லாம் இப்படித்தானுஞ்சொல்லுறது. அதுக்குத்தான் ஒங்களு க்கப்போலே யெதையும் ஒத்துக்கிறதில்லே நாம் பேசிறது. ஒங்க மனசுபோலேதானு யெதையாவது ஒண்ணைப்பேசிமுடிங்க. நம்ம ராமய்யாவுக்குங் கலி யாணஞ்செய்து கங்காச்சிபாக்கா பெண்ணுக்குச்சந்தோ சந்தானே.

பெரிய:—பொம்பிளைய வழக்கந்தாம் போகாதே! யெதையாவது கேட்டாச்சரியான பதில்சொல்லாமெ கோணமாணலான பதில்தானெசொல்லுறது. இதுவரை நாஞ் சொல்லிவந்த பொண்ணெல்லாம் நம்மபொருக பண்ணுமையேமுடியும் இதுகளெல்லாம் படிக்காட்டா நம்ம தடுக்குத்தூக்கிர விதிகளிலேதாஞ் சொச்சபண்ணி முடிக்கவேணும்.

வள்ளி:—யெதா இருந்தாலும் நல்லபொண்ணாக வும் மாமியா மாமனுக்கு வணங்கினவளாகவும் ஆம்பிளைக்குக் கோள்சொல்லிச் சண்டைமூட்டிற வம்மிசத்திலில்லாமல் நல்லவம்சத்திலே பொறந்தவளு மா இருந்தாச்சரி.

பெரிய:—ஆராவையோ. வீட்டு முப்பாந்செட்டி மகளைச் செய்யலாமா?





வள்ளி:—நல்லாய்ச் செய்யலாம் பிள்ளைகுட்டி பெ ரியவுகயெல்லாரும் ரொம்பநல்லவுகதானே ஒங்கமனசு.

பெரிய:—பொட்டக்களுதையசேதிய தெரிஞ்சது தானே அந்தவீட்டிலேயெல்லாருஞ் சம்மதப்பண்ணுறு நம்மதாந் தடுக்குத் தூக்கிச்சிறு பேசிரதுக்குஞ் சொரிகசெய்யவேணும். பொம்பிளைகளுக்கென்ன சொல்லிப்பிட்டு வீட்டிலேயிருக்கிறதுதானே, சரி அதைத்தானெபேசிமுடிப்பமா அதையாவது முடிவாச் சொல்லு பேசிப்பிட்டுக் கசபுசங்கிற தின்னு நல்லாருக் காது.

வள்ளி:—நீங்கசொல்லுறதுக்கு நானென்ன சொ ல்லப்போறேன். இதுத்தானெபேசிமுடிங்க யென்று சொல்லவே செட்டியாருஞ் சரியென்றுஒத்துக்கொ ண்டு வெளியில்போனார். வள்ளியுமையாச்சியும் வீட்டு வேலைகளைப் பார்த்துக்கொண்டிருந்தார்கள். வெளியில் போன பெரியசெட்டியார் தன்மைத்துனன் பெரிய னைஞ்செட்டியார் வீட்டுக்குப்போனார். மைத்துனனவ ரைக் கண்டதும் மரியாதையாக இருக்கச்செய்து ஒருநாளும் தனிமையாய்வராத தாங்கள் வந்த காரண மென்னவென்று விசாரித்தார். அதற்கு நமது பெரிய செட்டியாராகிய சுப்பிரமணியஞ் செட்டியார் ஒன்னு மில்லே ஒரு சமாசாரத்தைப்பற்றி ஒன்னைக் கண்டு பேசலாமென்று வந்தேன்.

பெரியணைஞ் செட்டியார்:—அப்படி யென்னசமா சாரஞ் சொல்லிவிட்டா நான் மாட்டேனு?

சுப்பிரமணியஞ் செட்டியார்:—வாமெடென்ன நல்லொருவிங்க நானுவந்து பேசலாமின்னு வந்தேன்.

பெரியணஞ்செட்டியார்:—சரி நல்லாய் பேசுறது யென்னதாக்க சொல்லுங்க.

சுப்பிர:—தாக்கலென்ன நம்மவீட்டுப் பய கலியாணத்தாக்க தான்.

பெரி:—நம்ம மாப்பிள்ளைக்கித்தானே ?

சுப்பிர:—ஆமாமா.

பெரி:—பேச்சுயேதாவது வந்துதா இல்லையா ? நம்மதாம்போயிப் பேசவேணுமா ?

சுப்பிர:—தாக்கல்வந்தது. அதெல்லாம் ஒங்காச் சிக்கிப்புடிக்கலியாம். புதசா நம்மதாம் யோசிச்சிப் பேசவேணுமாம்.

பெரிய:—அதெங்கெபோய்ப் பேசவேணும் ?

சுப்பிர:—ஆராவயலெ. வீட்டு குப்பாஞ்செட்டி வீட்டுலெ.

பெரிய:—முடிஞ்சா நல்லபேச்சுதான் அவுக நோக்கங்க யெப்புடி இருக்கொ.

சுப்பிர:—அவுகநோக்கமென்ன! நீபோயிப்பெண் ணைப்பத்தி விசாரிச்சு ஒம்மனசுக்குப் புடிச்சிருந்தாப் பேசு, முடிஞ்சாச்சரி இல்லாட்டா நட்டமென்ன? அவு சரம் ஆருக்காவுது கட்டிக் குடுக்கவேண்டியதுதானே.

பெரிய:—அதுசெரிதா நீங்கசொல்றாது பேசி முடியாட்டா யெனக்கேனெக்கயா மிருக்கும் அதுக் குத்தாஞ்சொன்னது.

சுப்பிர:—நீபாப்போய் பேசுறதுபோலெ பேசிப் பாரெ நடக்குதுசரி.



பெரிய:—சரி நீங்க வீட்டுக்குப்போங்க நாளை யென்னை நாம்போயித் தாக்கலைத்தெரிஞ்சுகிணு சாய ரச்சைசவாரனே.

சுப்பிர:—சரி! நாம்போயித்துவாரேன். நீயென்ன னைப்போயித் தாக்கலைநல்லாத் தெரிஞ்சுக்கிணுவா, யெல்லாருவுக யிருக்கட்டும் அவுகசெய்யிரதுசுமாராக இருந்தாலுங் குத்தமில்லே. நமக்குச் சங்கதி முடிஞ்சாச் சரி யென்றுசொல்லிவிட்டு வீடுபோய்ச்சேர்ந்தார்.

பெரியணஞ் செட்டியாரும் மறுநாட் காலையில் எழுந்து தந்தசுத்தி முதலானது செய்து பலகாரஞ் சாப்பிட்டபின்பேரில் ஆராவயலுக்குத் தன் கொழுந் தியாள் வீட்டுக்குப்போய்ச் சேர்ந்தார். உடனே இவர் சகலன் யிவரைக்கண்டதும் சந்தோஷமாய் "ஒன்றும் தாக்கலை யில்லாமெயிவ்வளவு வந்திருக் காப்பிலேயிருக்கெ யென்ன" யென்று விசாரித்தார்.

பெரி:—ஏவராயா! அப்படி ஒருதாக்கலுமில்லே. நாச்சிமகனுக்குக் கலியாணப்பேச்சுக வந்தது அதை முன்னிட்டு இங்கெவந்தேனே தவிர வேறெ ஒன்றும் விசேசமில்லே.

தெய்வராயஞ் செட்டி:—சரி! சரி: யாரைப்பாருக்கா? இங்கெ அருவீட்டுப்பெண்ணு. இங்கெ அப்படி ஒண் ணுந்தெரியலெயே; நம்ம ஆருக்கவீட்டிலேயும்பெண்ணு களில்லேயே.

பெரி:—இவெ. வீட்டுவளவிலெ குப்பாஞ்செட்டி அண்ணன்மக நப்பிள்ளையைப்பத்திப் பேசலாமி ன்னு நினைச்சேன்.

தெய்வராய :—ஏ கோ அங்கையா! அவுக வீட்டிலே சம்மந்தஞ்செய்யிறதுன்னு நல்லதுதான். ஆனும் வந்து சொன்னதை நீங்களாக கேக்கலையின்னு தெரிக் கிறீயளா?

பெரியணை :—ஒருத்தருஞ் சொல்லலே. நானுத்தா னெனைச்சேன். ஒண்ணையும் நல்லா சங்கதி நல்லாத்தெரி யலேயின்னு தாக்கலே யிப்ப நுக்கிட்டச்சொன்னேன்.

தெய்வராய :—சரி. நாமெதிர்த்துக்கொள்ளவேண்டி யது ஒண்ணுமில்லே முடிஞ்சுட்டா நல்லசம்மந்தந்தான். இவுகபணக்காரவீட்டாப்பாக; அவுகளுக்கும் பணம் ரொம்ப இல்லைவிட்டாலும் பெரியகுடும்பந்தான். மதிப் பான மனுசன்தான். தங்காளுடைய சினகப்பூர்கடை யும் அவனவு கொளரிவ்வே. பொண்ணைப்பத்தி விசாரிக் கிறது அறுவல்லம் பொண்ணும் ரொம்ப நல்ல பொண்ணு புத்திசாலி. லெச்சுணமானது. அடக்க ஒடுக்கம் ரொம்ப. பெத்தவர்களைப்பத்தி விசாரிக்க வேண்டியதுமில்லே. முடிவதுதான் சுலபசம்மதமாக இருக்கிறது.

பெரியணை: அதென்ன அப்படிச் சொல்லுராய். முடிவது சுலபசம்மத மென்றால் பையனுக்கென்ன குறை; அல்லது பெத்தவர்களுக்குத்தானென்ன வீடில் லையா? சொத்தில்லையா? கடையில்லையா? இவுகளுக்கு அவுகபலமென்ன கொழுந்துபோனதுபணத்திலே கொ ஞ்சங்கொறைஞ்சு போறது பெல்லாங் கொறைஞ்சுபோன தானு? என்னப்பா? இவுகளுக்கு மூணுவெட்சமிருக்கும். மூணுபங்கு பிரிக்கவேணும். அவுகளுக்கு ஒருவாயிரு க்கும் அதிதான் ஒருத்தரானே. இத்தபெத்தவிதத்தே



சங்கட இல்லாமைப் பாத்தால் ஒருங்காணை இடம் இவுகளுக்கும் அப்பிடாது.

தெய்வராய:—அதுசரிதான். நான்தானே இதெல் லாம்பேசி முடிவுசெய்துகிறுவாரனே யென்னமோ போய் பேசிப்பார்த்தாச் சங்கதிதெரியது.

பெரியணஞ் செட்டியார் :—சரி நீபோயி அவரைக் கண்டு சங்கதியைச் சொல்லித் தெரிஞ்சிக்கிறுவாயே மற்றதை அப்பரம் பேசிக்கிரலாம்.

தெய்வராய :—சரி இருங்க நான் வெளியே போய் விட்டு வந்து தாக்கலெல்லாஞ் சொல்லுறேன், என்று வெளியில் போனவர் குப்பாஞ் செட்டியாரைக்கண்டு பேச அவர்கள் வீட்டுக்குச்சென்று அவரைக்கண்டார். அவரும் வா தம்பி! தெய்வராய யென்ன விசேஷம்.

தெய்வராய.—விசேஷம் ஒண்ணுமில்லே சும்மா ஒங்களைக்கண்டு பேசிக்கிறு போகலாமின்னு வந் தேன்.

குப்பாஞ் செட்டியார் :—அப்படி யென்ன தாக்கல்.

தெய்வராய :—தாக்கலென்ன நம்ம வீட்டுத்தாக் கல்தான் ஒங்கள் அபிப்பிராயம் தெரிந்தாச் சொல்ல லாம்.

குப்பாஞ்:—யென்ன தாக்கல் அதைத்தானே சொ ல்லே சொன்னாத் தெரியிது.

தெய்வராய :—நம்மபிள்ளை தெய்வயானைக்குக் கலி யாணப் பேச்சு யெங்கே நடக்கிறது?

குப்பாஞ்:—நல்ல பேச்சுகள் பெண்கையானது வந்தாப் பேசி முடிக்கப்பிடலாம். பொண்ணும் பெரிய

61 34



மகனுக்கிப்போ கலியாணமாச்சு. மாப்பிள்ளை ஒன்றும் நல்லதா பெண்ணையார் தாறேனென்றா வரை ஒரு பேச்சு முடியலை. என்னிட்ட அப்படிப் பேச்சுவந்தாலு வந்திருந்தாச் சொல்லு பொம்பிளைகளையுங் கலந்துக்கிறது சங்கதியை முடிச்சுப்பிடலாமே.

தெய்வராய:—தேவகோட்டைப் பேச்சுத்தான் ஒன்றும் பெம்மனசுக்குப் பிடிச்சாப்பிலேயிருக்கு அதுக ஒருதருமவந்து சொல்லலை.

குப்பாநு:—அப்படி தேவகோட்டையிலே ஆரு! நல்ல பேச்சாயிருந்தா உடனே முடிச்சுப்பிட இன்னு ஒன்றுதாநு சொல்லேன் இதுக்கென்ன இளவு பேச்சு.

தெய்வராய:—ஆரு, சம்-சு. சா. செ. சுப்பய்யா அயித்தான் மகனுக்குச் செய்தாலென்ன?

குப்பாநு:—நல்லமாப்பிள்ளைதான் ஒன்றுங் குறைவில்லை அந்தக் குடும்பம் அந்தாலும் கொஞ்சம் கடம்பாக இருக்குதென்றுதான் யோசனை. ரெண்டொரு சமயம் நானுங் கூட நெனைச்சேன். பையன் சிங்கப்பூரிலேயிருக்காப்பிலே இருக்கு. குடும்பத்தில் தனியா தப்பிச்ச பணங்காசு இல்லை இருக்குமென்று நிச்சயந் தெரியலை. மாப்பிள்ளையை நானுமொருதரம் பார்த்திருக்கிறேன். ஆனாலும் செட்டியாருமாச்சியும் நல்லவுங்க. எல்லாம் பொம்பிளைகளையுங் கலந்து சொல்லுறேன் நீயும் மத்தியானத்துக்கு வா எல்லாம் பேசிக்கிடுவோம்.

தெய்வராய:—சரிதான் போயிட்டுவாறேன் என்று சொல்லிவிட்டுத் தேத்து செட்டியாரிடம் சொல்லிவிட்டு இருவரும் தங்காப்பிடச் சென்றார்கள்.



குப்பாநுசெட்டியாரும் ஸ்நானம் பூசை முதலானதை முடித்துக்கொண்டு சாப்பாட்டுக்குப்போய் உட்கார்ந்தார். அவர் சம்சாரம் அலமேலாச்சி சாதம் வட்டித்துக்கொண்டிருந்தார்கள். அவர் சாப்பாடு முடிந்ததும் கால்கை சுத்திசெய்து தாம்பூலந் தரித்துக்கொண்டிருந்தார். அச்சமயம் அவர் சம்சாரம் அவரைப்பார்த்து அப்பொழுது நம்ம தேவராய அயித்தான்வந்து என்னமோ பேசிக்கிட்டு இருந்தாகளே யென்ன?

குப்பநு செட்டியார்:—ஆமா அதுக்கென்ன!

அலமேலாச்சி:—அதுக்கொண்ணுமில்லை யென்ன சொன்னு என்று கேட்டேன்.

குப்பா:—அப்படியா கேட்டா! ஒண்ணுமில்லை நம்ம தெய்வானை கலியாணச் சங்கதியைப் பேசிக்கொண்டிருந்தோம் அதுதான்.

அலமே:—அதெங்கை?

குப்பா:—தேவகோட்டையிலே.

அலமே:—ஆரு வீட்டிலே.

குப்பா:—வடக்கு வீட்டுக்கார சுப்பய்யா அயித்தான் மகன் மூத்த பையனுக்குச் செய்தாத் தேவலையென்று யோசனை பண்ணுறோம்.

அலமே:—அந்தப்பேச்சு நீங்க நெடுகச்சொன்னதானே புதுசில்லையே.

குப்பா:—ஓகோ! புதுசுபுதுசாய் பேசவேணுமோ பழைய பேச்சுகளுந் தன்னுபடிபோலிருக்கு அப்படியானுஞ் சரிதான்.

அலமே :— இல்லெப் புதுப்பேச்சு யேதாவது வந்திச்சாயின்னு கேட்டேன்.

சுப்பா :— இது பழைப்பேச்சா? நீ இன்னைச்சாதுவம் கூட நம்ம மனசுக்கு மட்டும் படுதே தவிர அவுகவந்து பேசிப் பழகாப்போகலியே.

அலமே :— சரி, சரி, நீங்க வெவகாரமே இப்ப டித்தாம் பேசுவீய.

சுப்பா :— நாம் பேசறதெல்லாம் நீ வெவகாரமா னெனைக்கிறதைத் தவிர நான் வெவகாரம் பேசலே.

அலமே :— சரிதா நீங்க சங்கதியைச் சொல்லுங்க நானுங்கூட வெவகாரம் பேசலே.

சுப்பா :— இனிமேல் பேசிறு வதிலுக்கூடச் சொல்லமாட்டாபோலிருக்கு நாஞ் சொன்னமாப்பிளே குத்தமில்லியா ஒம்மனசென்ன ?

அலமே :— மாப்பிளே குத்தமில்லே.

சுப்பா :— அப்பாவென்ன ?

அலமே :— அவுகளுக்குப் பணங் காசென்ன இருக்கும் ? யெதாலெ கடையிருக்கு ? அதெல்லாம் ஆம்பிளைகளுக்குத்தானே தெரியும்.

சுப்பா :— அப்படி ஒருக்காக் கெட்டா பேசவும் நல்லாருக்கும் பெண்ணேவா குருக்கமருக்காப் பேசிக்கிறீனை இருக்கிறியே அவுகளுக்குச் சிக்கப்பூருலே கடையிருக்கு. ஒரு பத்திப்பு சுமாரு உம் – வெள்ளி இருக்குமின்னு நெனைக்கிறேன். ரெண்டு ஆம்பிளைப் பிள்ளையும் ஒரு பொம்பிளைப் பிள்ளையுமிருக்கு. வீடு பெரிய



வீடாகமுந்திலே கட்டியாச்சுது. மாப்பிளே கெட்டிக் காரன் யோக்கியந்தான் சங்கதி ஒத்துக்கிறு சுருக்கா முடிச்சுப்பிடலாம்.

அலமே :— செட்டிய வீட்டுப்பேச் செல்லாம் பிள்ளைகளுக்கு கலியாணம் முடியிறவரை ஒன்னும் வெளியவராது. அப்பித்தாந் தெரியும். பெங்கை யாவது நம்மவீட்டுப் பொன்னு வதிராச் சாப்பிட் டுக்கிறு றென்ஓப்பிள்ளே குட்டிபோட்டே நல்லாருந்தாச் சரி.

சுப்பா :— பெங்கையாவதன்னு நீ சொல்லு றதைப் பார்த்தா இதுவேண்டா மிக்கிராப்புலே இரு க்கே.

அலமே :— நானேம் வாண்டா மின்னு சொல்லு றேன் பெத்தப்பேச்சு நாம் பேசிறதும் நீங்க இப்ப டித்தானே அருத்தம் பண்ணுரது.

சுப்பா :— கேட்டாக் கேக்கிறதுக்கு வதிலுச் சொல்லுரதா அதை விட்டுட்டு வேறை பென்னத்தை யாவது சொல்லுரதா! இப்ப நாஞ்சொன்ன மாப் பிள்ளைக்கிச் செய்யலா வாண்டாமா அதைச்சொல்லித் தொலைசும்மா பேசிக்கிறு யிருக்கியே.

அலமே:— ஒங்களுக்குக் கோவம்வந்தா யெந்தப் பேச்சுக்குந் தொலைகில்லே யின்னுதாம் பேசுரது நல்ல பேச்சுமில்லே பொல்லாப்பேச்சுமில்லே.

சுப்பா:— இந்தப் பேச்செப்படி அதைச்சொல்லி முடிச்சுவிடு மத்தது அப்புறம் பேசலாம்.

அலமே:— சொல்லுறதென்ன பேசுங்க! முடிங்க! நானு வாண்டாமிங்கிறேன்.

குப்பா:—நாங்கட்டாப் படிக்கிறது போலேயும் அதுக்காக நீ வருத்தமாத்தாங்க சொல்லுரது போலே யுமிருக்கே; நாம் பேசலே. இனிமே நீ யாதொரு மாப்பிளே பார்த்துக் கலியாணம் பண்ணேன் என்று சொல்லிவிட்டுக் கோபமாக எழுந்து வெளியே வந்தார். ஆச்சி பின்னுலே வந்து இந்தாங்க! இதென்ன கூத்தா ருக்கு! பேசுறதெல்லாம் பேச்சுக்காரனே வருமிதுக் கென்ன இவ்வளவு: ஒருநாளு மில்லாததாருக்கே.

குப்பா:—ஒருநாளுமில்லாதது இருநாளுமில்லா அது ரொம்ப பேசாதேபோ என் வேலையைப்பாரு.

அலமே:—செய்யு முன்னே யெல்லாத்தையும் யோசிச்சாத்தானே நல்லது. செஞ்சுபிட்டா அப்பா லென்ன பண்ணுறது. "விருந்துக்குத் தேவருக் கிறு" சும்மா இருக்கவேண்டியது தானே? நம்ம பொன்ன கண்ணசிடு அகம்படி விடில்லியே! வாண்டா மின்னு சொல்லிவிடுறதுக்கு கோவில்லேயும் கேக்க லேனும் அப்பரம் ஒங்க மனசு. ஒங்க அண்ணாக் தம்பியளையுங் கலந்து செய்யுங்க. மாப்பிள்ளே நல்லாவும் பணக்காரனா யிருந்தா பெனக்குச் சரிதான். என்று சொல்லிவிட்டு அகமேலாச்சி வீட்டுக்குள் போய்விட்டார்கள். குப்பாஞ்செட்டியார் உடனே தம் தமையனைக்கண்டு பேசினர் அவரும் எல்லா விஷயங்களேயும் தெளிவாகக்கேட்டுக் குற்றமில்லே நல்லாச் செய்யலாம் என்று சொன்னார். அந்தச்சமை யம் தெய்வராய செட்டியாரும் வந்து சேர்ந்தார். மூன்று பேருமாக ரொம்பநேரம் மற்றக்காரியங்களேப் பற்றிப் பேசிக்கொண்டிருந்துவிட்டு கலியாணப் பேச் சைப்பேச ஆரம்பித்தார்கள்.

65-36



தெய்வராயஞ் செட்டியார்:—யேன்! அண்ணனை கலந்தியளா?

குப்பாஞ்:—ஆமா கலந்தேன். ஒத்துக்கிறாப்பிலே தானிருக்கு. அவுக வந்தா யெல்லாம் பேசி முடிச்சுக் கலாம். அண்ணனும் ஒத்துக்கிணிட்டாக. நீ யாச்சொல் லிவிடுரது போலே அவுகளுக்குத்தாக்க சொல்லி விடென்று சொல்லி அவரும் கோவிலுக்குப்போய் நல்லுத்தரவு கேட்டுவந்தார்.

தெய்வராய:—சரி அப்படியே செய்யிரது. நானுந் தேவகோட்டைக்குப் போகவேனும். போயிட்டுவந்து யெல்லாத்தாக்கனுஞ் சொல்லுரேனே. என்று சொல்லிவிட்டு வீடுபோய்ச் சேர்ந்தார். உடனே பெரியணஞ்செட்டியாரும் இவருமாக விஷயம் முடியு மென்ற சந்தோஷத்துடன் பேசிக்கொண்டே தேவகோட்டைக்குப் புறப்பட்டு வந்து சேர்ந்தார்கள். நமது சுப்பிரமணியஞ் செட்டியார் வீடு வருமார்க் கத்திலிருப்பதாலங்கேயே போய்ச்சேர்ந்தார்கள். இவர் களைக்கண்டவுடன் சுப்பிரமணியஞ் செட்டியாரும் ரொம்ப சந்தோஷமாயிருக்கும்படிசெய்து பெரியணஞ் செட்டியார் போய்வந்த விஷயங்களை விசாரிக்க ஆரம் பித்தார். அவருந்தான்போய் வந்தவிஷயங்களைப்பேசி முடித்து "அவுங்களும் ஒத்துக்கிண்டாக" நாமும் ஒரு நல்ல நாள்பார்த்து ஆராவயலுக்குப்போய் அவர்களைக் கண்டு பேசி முடித்துக்கொண்டால்" நல்லதென்று சொன்னார். சரிதானென்றிருவருமாக அங்குதானே சாப்பிட்டுவிட்டு "இன்று திங்கக்கிழமை நாளையின்று புதன்கிழமை காலையில் ஆராவயலுக்குப்போய்

விஷயத்தைத முடித்துக்கொள்ளலாமென்று" சுப்பிரமணியஞ்செட்டியார் சொன்னார். சரிதானென்று எல்லோருமாகவொத்துக்கொண்டார்கள். பெரியணஞ்செட்டியாரும் தெய்வராய செட்டியாருமாக பெரியணஞ் செட்டியார் வீடுபோய்ச் சேர்ந்தார்கள். சுப்பிரமணியஞ் செட்டியாரும் சம்சாரத்தினிடம் விஷயங்களையெல்லாம் சொல்லி சந்தோஷமாகப் பேசிக்கொண்டிருந்தார். தெய்வராயஞ்செட்டியாரும் தன் சகலன் வீட்டுக்குப்போய் அன்றிரவு அங்கிருந்து விட்டு மறுநாட்காலையில் ஆராவயல் போய்ச்சேர்ந்தார். அன்று மத்தியானம் குப்பாஞ்செட்டியாரைக்கண்டு பேசினார். அவரும் சந்தோஷமாகவே சு. ப. அவர்கள் நாளை வந்தால் உடனே நம்ம வீட்டுக்குத்தாக்கல் சொல்லிவிடென்று சொன்னார். தெய்வராயஞ் செட்டியாருஞ் சரியென்றொத்துக்கொண்டு வீடுபோய்ச்சேர்ந்தார். குப்பாஞ்செட்டியார் வீடு போனதும் தன் சம்சாரத்தினிடம் "தேவகோட்டையிலிருந்து நாளை வருவாகளாம் பேச்சை முடிச்சுக்கிண்ணிறது தேவலையென்று" சொன்னார். அந்த ஆச்சியும் சரிதானென்று சந்தோஷமான வார்த்தையாய் ஒத்துக்கொண்டார்கள். அதற்கு மறுநாள் புதன் கிழமைக் காலையில் சுப்பிரமணியஞ் செட்டியாரும் பெரியணஞ்செட்டியாருமாகப் புறப்பட்டு ஆராவயல் தெய்வராயஞ்செட்டியார் வீட்டுக்கு வந்துசேர்ந்தார்கள். இவர்கள் வருந்தாக்கல் முன்னமே தெரிந்திருப்பதால் பலகார முதலானதும் தயாராக வைத்திருந்தார்கள். இவர்களும் வந்தவுடன் எல்லாருமாகப் பலகார முதலானதுஞ் சாப்பிட்டு முடித்தபின்





குப்பாஞ்செட்டியார் வீட்டுக்குப் போகலாமா வென்று நமது சுப்பிரமணியஞ் செட்டியார் கேட்கவே சரி போச்சு; நான் முன்னமே போய் கண்டு பேசி ஆளனுப்பின மேல் நீங்கள் வரலாமென்று சொல்லிவிட்டு தெய்வராயஞ்செட்டியார் குப்பாஞ்செட்டியாருடைய வீடுபோய்ச்சேர்ந்தார்.

குப்பாஞ்செட்டியார்:—தேவராயா! வா! வா! வா! அவுக வந்திட்டாகளாம் ஆளுவந்து சொன்னானே அதுக்குத்தானிங்கேயே இருக்கிறேன். அண்ணனுந் தம்பியும் வெளியே போனவுக இன்னங்காணும் ஆளனுப்பி இருக்கிறேன். இப்ப வந்திடுவாக வந்தவுடனே ஆளனுப்பலாமினுதானிருந்தேன். நீயே வந்திட்டாய். அவுக யெங்கே பெரியண்ணனும் வந்திருக்காளாமில்லாம நல்லது யெம்மச்சினனுக்கும் ஆளனுப்பி இருக்கிறேன். இப்ப வந்திடுவான். யென்று சொல்லிக் கொண்டிருக்கும்போதே இருவரும் வந்துவிட்டார்கள். உடனே இரத்தினக்கம்பளி ஒன்றை விரித்து பேசிக் கொண்டிருக்கும்போது ஒரு ஆள் அனுப்பி வரலாமென்று சொல்லி அனுப்பினார்கள். உடனே சகுனம் பார்த்துக்கொண்டே பெரியணஞ்செட்டியாரும் சுப்பிரமணியஞ்செட்டியாரும் வந்து சேர்ந்தார்கள். எல்லாரும் அவர்களுடைய வரவை நல்வரவாக யேற்றுக் கொண்டபின் பலகார முதலானது சாப்பிட்டுத் தாம்பூலந்தரித்துக்கொண்டார்கள்.

தெய்வராயஞ் செட்டியார்:—குப்பாஞ் செட்டியாரையும் சுப்பிரமணியஞ் செட்டியாரையும் பார்த்து, வந்த விஷயங்களைப் பேசுறதென்ன?

பெரியணஞ் செட்டியார்:—சரி பேசறது யேம் பேசுங்களேன் நேரமாச்சல்லவா என்று சொல்லவே பேச ஆரம்பித்தார்கள். சுப்பிரமணியஞ் செட்டியாரும் குப்பாஞ் செட்டியாரும் ஒன்றும் பேசவில்லை. மத்தியி லிருந்தவர்களாகவே பேசி முடித்துக்கொண்டு சுப்பிர மணியஞ் செட்டியார் இடத்தில் பெரியணஞ்செட்டி யார் சொல்ல ஆரம்பித்தார்.

பெரியண:—அயித்தாம்! பேசி முடிச்சாச்சு. அவுக பொண்ணுக்கு நகை சீதனம் கொண்டுவிக்க வெல்லாத் துக்குமாக ஆசா விராகனுக்கு இப்பவே உண்டிய லெழுதித்தந்திருவார்கள். நாம் உம் விராகனிடையில் சங்கு தாலி செய்கிறதோடு மற்ற சில்லரை நகைகளும் செய்து போடுகிறதென்று பேசியிருக்கிறது. உங்களுக் குச்சம்மதந்தானே.

சுப்பிர:—ரொம்ப சந்தோசம் அப்பிடியே முடிச் சுப்பிடுகிறது நல்லது.

தெய்வராய:—யேம் பேசினது சரிதானே?

சுப்பிர:—ஒங்க யெல்லாரு நோக்கம் போலே சரி.

தெய்வராய:—குப்பாஞ்செட்டியாரைப் பார்த்து சரி உண்டியலெழுதிப்பிடுறது வேறென்ன.

குப்பாஞ்:—சரி என்று உண்டியலெழுதி பஞ்சஸ் தட்சி தாம்பாளத்தில் வெற்றிலை பாக்கோடு உண்டி யலையும் வைத்து தலையில் வேஷ்டியைக்கட்டிக் கொண்டு உண்டியலைக்கொடுத்தார். சுப்பிரமணியஞ் செட்டியாரும் தலையில் வேஷ்டியைக் கட்டிக்கொண்டு



வாங்கிக்கொண்டார். மூன்றுநாள் வெள்ளிக்கிழமை தெவகோட்டைக்கிவந்து நாள் பார்த்துக்கொள்ளுகிற தென்று பேசி முடித்து அங்கே தானே யெல்லாரும் ஸ்நானஞ்செய்து சாப்பாடு முதலானதும் நடந்தபின் நடுது சுப்பிரமணியஞ் செட்டியாரும் பெரியணஞ் செட்டியாரும் யெல்லாரிடமுஞ் சொல்லிக்கொண்டு தேவிகோட்டை வரவே; போய் வந்த விஷயங்களை யெல்லாம் வள்ளியம்மை ஆச்சி கேட்டு சந்தோஷப் பட்டார்கள். பெரியணஞ் செட்டியாரும் வீடுபோய்ச் சேர்ந்தார். குப்பாஞ்செட்டியாரும் அவர் சம்சாரத்தி னிடம் சொன்னார். மற்றெல்லாரும் இந்த விஷயத் தைக்கேட்டு மாப்பிள்ளையும் பெண்ணும் நல்ல ஜோடி. நல்ல சம்பந்தந்தானென்று சந்தோஷப்பட்டார்கள். அப்பால் வெள்ளிக்கிழமை காலையில் ஆராவயலி லிருந்து குப்பாஞ்செட்டியார் அவர் மைத்துனன் தமையனார் தெய்வராயஞ் செட்டியார் யெல்லாருமாக தேவி கோட்டை வந்து சேர்ந்தார்கள். அவர்களை சுப்பிரமணியஞ்செட்டியார் வேண்டிய உபசாரணைசெய்து முன்னமே தயாராக இருந்த பலகார முதலானதுஞ் சாப்பிட்டபின் பெரியணஞ்செட்டியாரும் சுப்பிரமணி யஞ் செட்டியார் தாயாதிக்காரர் (பங்காளிகளில்) சில ரும் வந்து சேர்ந்தார்கள் உடனே யாவரு மிருந்து பேசி இது தை மாதமாகச்சே இந்த மாஸத்திலேயே தாலிக்கிப் பொன்குடுத்துவிடுவோம். கல்யாணத்தை பைங்குனி மாஸத்தில் வைத்துக்கொள்வோம். சிங் கப்பூருக்கு ஒரு ஆளனுப்பி பையனை வரவழைக்க ரெண்டு மாதஞ் சொல்லும் ஆகச்சே பைங்குனி மாதந்

தான் முகூர்த்தம் வைத்துக்கொள்ளவேணுமென்று பேசி முடிந்தபின் முன்னமே ஒருதரம் ஜாதகங்களைப் பார்த்துப் பொருத்த மிருக்கிறதாக எல்லாரும் தெரிந்துகொண்டிருந்தாலும் இப்போதும் ஒருதரம் பார்க்க வேணுமென்று கருதி, ஜோஸ்யம் அப்புக்குட்டி அய்யரைக்கூட்டி வரும்படி செய்து இரண்டு நாளும் பார்க்கச்சொன்னார்கள். அவரும் அதுபோல் பார்த்து தைமாதம் உகூ தாலிக்கிப்பொன் கொடுக்க ஒரு நாளும். பைங்குனி மீ௴ உகூ கலியாண முகூர்த்தமும் பார்த்து முடித்து மாப்பிள்ளை பெண் ஜாதக மிரண்டையும் பார்த்தார். பெண்ணின் பெயரென்னவென்று கேட்டார். சுப்பாஞ்செட்டியார் கூப்பிடுரது தெய்வானை பேரும் சீதையென்று சொன்னார். அய்யர் இந்த இரண்டு ஜாதகமும் ரொம்ப நல்லாய் பொருந்தி யிருக்கிறதென்று சந்தோஷப்பட்டுக்கொண்டு தான் பார்த்த நாளை ஒரு நறுக்கி லெழுதி மஞ்சள் தடவி தாம்பாளத்தில் வைத்துக்கொடுத்தார். உடனே சுப்பிரமணியஞ்செட்டியாரும் தலையில் வேஷ்டி கட்டிக்கொண்டு ஜோஸ்யர் கொடுத்த தாம்பாளத்தை வாங்கி நாள்பார்த்த சீட்டையெடுத்துக்கொண்டு தாம்பாளத்தில் வெள்ளிப்பணமாக நால்ரூபாய் வைத்துக்கொடுத்து நமஸ்காரம் செய்தார். அவருஞ் சந்தோஷமாக வாங்கிக்கொண்டு ஆசீர்வாதஞ் செய்துவிட்டு வீடுபோய்ச்சேர்ந்தார். அதன்பின் எல்லாரும் ஸ்நானஞ் செய்து அங்கு தானே சாப்பாடு செய்துகொண்டு அவரவர்களும் வீடுபோய்ச் சேர்ந்தார்கள். நமது சுப்பிரமணியஞ் செட்டியாரும் சிங்கப்பூருக்கு ராமநாதனுக்கு பதிலாள் அனுப்புவதற்காக சேதுபுரம் மெய்யப்ப செட்டியாரை



ருடா வெள்ளி சம்பளம் பேசி தைமாதம் உகஉ பயணம் செய்து சீக்கிரம் போய் கணக்கெழுதி வாங்கிக்கொண்டு பயணஞ் செய்தனுப்பும்படி சொல்லி அதின் விபரங்களெல்லாம் லெட்டரெழுதி விட்டார். மெய்யப்ப செட்டியாரும் நாகப்பட்டணம் வந்து கப்பலேறினர். இந்த விபரமிப்படி இருக்க.

## ஏழாவது அத்தியாயம்.

நமது ராமநாதன், தன் தகப்பனார் ஊருக்குப்போன பிற்பாடு அடுத்தாள் முத்தய்யாவோடு கணக்குவழக்குகளையும் கொடுக்கல் வாங்கல்களையும் ஒழுங்காகப்பார்த்து வந்தானென்று முன்னமே சொல்லி இருக்கிறோமல்லவா. ராமநாதன் சிறுபையனாக இருந்தபோதிலும் மற்றச் சிறுவர்களைப்போல் வேடிக்கை விளையாட்டுகளில் அதிகமாகப் புத்தியைச் செலுத்தாமல் தன் வேலையிலேயே கருத்தைச்செலுத்தி வருவான். அநாவசியமாக ஒருவரிடத்திலும் பேசமாட்டான். டிராமாப்பேச்சு சீட்டாட்டப்பேச்சு வேசி தாசி வீட்டுப்பேச்சுகள் இவைகளைப்பேசும் பையன்களைக் கண்டால் அந்த இடங்களில் நிற்காமல் வந்துவிடுவான்.

வேலை ஒழிந்த நேரங்களில் வீணாகப் பகல் தூக்கந் தூங்கிப் பொழுதைக்கழிக்காமல் நல்ல புஸ்தகங்களையும் பத்திரிகைகளையும் படித்து வருவான்.

பத்திரிகைகளை வாங்கிப் படியாதவர்கள் மற்ற விஷயங்களில் எவ்வளவு கெட்டிக்காரராக இருந்த போதிலும் அங்கங்கே நடக்கும் உலகவிவரங்கள் தெரியாமல் கஷ்டப்படுவார்கள் என்றும் வர்த்தகத்தில் வரும் செட்டிப்பிள்ளைகளுக்குப் பலதேசத்து வர்த்தமானங்களும்-கொலமாறுபாடுகள், ராஜாங்க உத்திரவுகள் சுபிக்ஷம், பஞ்சம் சரக்குகளின் விளைவு, கிராக்கி சவுதம் பண்டப்பிரியம், சவுதம், தேச சமாசாரங்கள், முதலியதெல்லாம் அப்போதப்போது பத்திரிகை வாயிலாகத் தெரியுமாகையால் மற்ற ஜாதிக்காரர்களைவிட நகரத்தார்களே பத்திரிகைகளை அவசியம் வரவழைத்துப்படிக்கவேண்டுமென்றும் ராமநாதன் நன்றாக அறிந்து பத்திரிகைகளை வரவழைத்துத் தவறாமல் படித்து வருவதுடன் மற்றவர்களுக்கும் சொல்லுவான். தவிரவும் பத்திரிகைகளைப்படிப்பதினாலேயே வெள்ளைக்காரர்கள் இந்த உலகத்தை எல்லாம் கட்டி ஆண்டு வருவதுடன் வர்த்தகம் தொழில் முதலிய செல்வச் சிறப்பானகாரியங்களில் சிறந்திருக்கிறார்களென்றும், பத்திரிகைகளில் வியாபார விஷயங்களை விபரமாக எழுதி மனத்தெளிவு உண்டானால் நாமும் பலதொழில்களைச்செய்யலாம் என்றும் நாம் செய்யாவிட்டாலும் நம்மைச் சேர்ந்தவர்களுக்காவது சொல்வதற்கு உபயோகப்படுமென்றும் ஆகையால் பத்திரிகைகளை அவசியம்படித்து அறிவு விர்த்திசெய்துகொள்ள வேண்டியது ஒவ்வொரு நகரத்து வர்த்தகரின் கடமை என்றும் பலபேருக்கும் எடுத்துச்சொல்வதுடன் பத்திரிகைகளில் வியாபார விஷயமான எந்தச்சங்



கதி எழுதியிருந்தபோதிலும் அதை எல்லாம் எடுத்துப் பத்திரப்படுத்திவைத்துக் கொள்வான். பத்திரிகை ஒரு வாரமாவது வராமல்போனால் அன்றைக்கு அவனுக்குச் சாப்பிடக்கூட மனம்வராது. இப்படியிருந்ததினால் இராமநாதன் மற்றவர்களைவிட உலக அறிவிலும் வர்த்தக அறிவிலும் சிறந்தவனாக இருந்தான்.

தன் வயதுப்பையன்கள் வீணாகக் கெட்ட விஷயங்களில் திரிந்தலைந்து கெட்டுப்போவதைப் பார்த்து வருத்தப்படுவான். தனக்கு வேண்டிய பையன்களுக்கு நல்ல புத்திமதிகளைப் போதிப்பான். இத்துடன் ராமநாதனுக்கு ஒரு பெருங்கவலை மனதில் பதிந்திருந்தது. அதாவது தன்னை நம்பி தன் தகப்பனார் ஒப்புவித்து விட்டுப்போய் விட்டபடியால் அதிலேதாவது முன் பின் வந்து விட்டால் தன் பேர் கெட்டுப்போவதோடு தான் சிறு பையனாக இருப்பதினால் கெட்ட விஷயங்களில் செலவழித்து விட்டானென்று சந்தேகிப்பார்களே! பகிலான் வருகிறவரையும் குற்றங் குறையில்லாமல் காப்பாற்றி விட்டாலல்லவா நாம் சமர்த்தன் என்பதுதான்.

ஆக இந்த விசாரத்தினால் எந்தக்காரியமும் செய்யப்பயப்படுவான், பணங் காசு விஷயத்திலொருவரோடும் போட்டிபோடமாட்டான், நிதானமாகவே ஒவ்வொருகாரியத்தையும் நடத்திவந்தான். இப்படி ராமநாதன் நடந்து வந்ததினால் பெல்லாப் பையன்களும் பெரிய கடை முதலாளிகளும் வெகு பிரியமாக

இருந்தார்கள். இவனுக்குச் செல்வாக்கும் மதிப்பும் அதிகப்பட்டது. இவன் மகாபுத்திசாலியென்று அனேகம்பேர் இவனிடத்தில் யோசனை கேட்க ஆரம்பித்தார்கள். இவனுடைய பெரிய மனுஷத்தனத்தைப் பார்த்து இவன் வயதுப்பையன்களிற் சிலருக்கு இவனிடத்தில் பொறாமையும் வெறுப்பும் உண்டாயிற்று. என்னமோ ராமநாதன்தான் தான் கெட்டிக்காரன் போலவும் பெரிய மனுஷத்தனமாகவும் நினைத்துக் கொண்டிருக்கிறான். நம் டிராமாவுக்குப்போனால் ஒருநாளாவது வரமாட்டமென்கிறான் சிரித்தால் சிரிக்கமாட்டமென்கிறான். எங்காவது போகக் கூப்பிட்டால் நம் கூட வரமாட்ட மென்கிறான். இவனுக்கு இவ்வளவு பவர் யென்ன? யெவ்விதமாவது இவன் கொர்வத்தையும் பவரையும் கெடுத்துவிடவேண்டு மென்றும் நினைத்தார்கள். இவ்விதம் நெடு நாளாக இவன் மீது வைத்திருந்த கெடு நினைப்புள்ள ஒரு பையன் ஒருநாள் சாயந்திரம் நாலு மணிக்கு கிஸ்தி வாங்குமிடங்களுக்குச் சென்ற பையன்கள் யெல்லாம் வீண்காலம் போக்குகிறதற்காகப் போகும் (தாசியாகிய ராஜம் என்னும் பெண்ணின்) வீட்டில் வந்து கூடினார்கள். இவர்களைக்கண்டதும் அவ்வீட்டிலிருந்து மாமா வேலை செய்யும் அவள் ஆசை நாயகனாகிய ஸ்ரீநிவாசன் யென்ற ஆசாமி யேதோ வேலையாகப் போகிறவர்போல வெளியில் போய் விட்டார். அங்கிருந்த ராஜம் யென்னும் பெண் யெல்லாருக்கும் உபசாரம் செய்து ஒவ்வொருவருக்காக வெற்றிலை பாக்கு மடித்துக் கொடுத்துக்கொண்டிருந்தாள். அவளுக்கு ஒருபெண்குழந்தை



யுண்டு. அது வந்தவர்களில் ஒவ்வொருவரிடமும் வந்து மடியில் விழுந்து புரண்டு அவர்களிடத்திலும் அப்பா! பூவாங்க காசுவேணும். பாவாடைவாங்க காசுவேணும் பொம்மை வாங்க காசுவேணும். சிகிரெட் பெட்டிக்குள்ளிருக்கும் படம் வாங்கக் காசுவேணும். பால் வாங்க காசுவேணும். மிலாயிவாங்கக் காசுவேணும். கொலுச்சிங்காரிக்கிற சாமான்கள் வாங்ககாசுவேணும் யென்று கெம்பீரமாகவும் ஷோக்காகவும் சொந்தம் பாராட்டியுங் கேட்டு சுமார் ௨ம் வெள்ளி வரை வாங்கி தன் சொந்தமான ஒரு சிறு பிஸ்கோத்துப் பெட்டியில் வைத்துப் பூட்டிக்கொண்டது. அங்கு போயிருந்த ஷோக் மேன்களில் இவ்வளவு பையன்களையுங் கெடுத்து இக்கெதியாக்கின புண்ணியவானாகிய சுப்பிரமணியன் யென்னும் வாலிபன் தன் மடியிலிருந்து இரண்டுவெள்ளியெடுத்து ஒரு பையனிடங் கொடுத்து சிகரெட்டுக்கு பூக்கான இன்னம் யென்னென்னமோ சாமான்களை வாங்கி வரச் செய்து தானே அடுப்பண்டை போய் வேலை செய்து யெல்லாரும் திருப்தியாய் சாப்பிட்டபின் வீடுபோக நினைக்கவே சுப்பிரமணியனென்ற ஆசாமி ராஜத்தை பார்த்து "ராஜம் நாங்கள் ஒரு ஆசாமியைக்கூட்டியாறம் அவனை யெவ்விதத்திலாவது உன்வலையில் விழுத்தாட்டிவிடவேணும் ஒர்புறமிருக்கட்டு" மென்று சொன்னான். வெகு குடியைக் கெடுத்த புண்ணியவானாகிய சுப்பிரமணியன் சொன்னதும்! ராஜம்! சரிதான் நீங்க இப்படிச்சொல்லச்சொல்ல நான் கேட்டு என்ன சுகமடைந்தேன்! பவுன் மாலை அமெரிக்கன் டாலர் (அது கொழும்பில் இனுங்கிடைக்

து) கொலுசு, கெம்புத்தோடு இவ்வளவும் அடகுவைத்து 350 ரூபாய் வாங்கி டிராமாக் கம்பெனிக்குக் கொடுத்து விலகிக்கொண்டேன். என்ன சம்பாத்தியம் பண்ணியிருக்கின்றனை? நீங்கள் சொல்லுகிறபடி நான் கேட்கிறேன். இந்த நகைகளைத் திருப்பித் தரவேணும். கை வெள்ளியில் ஒட்டியாணம்செய்து போட்டுக்கொள்ள ஆசையாக இருக்கு. வயிர மூக்குத்தியும் கெம்பு மூக்குத்தியும் வாங்கியிருக்கேன். மற்றதெல்லாம் நீங்க வாங்கித்தரவேண்டும் என்றாள். உடனே விரப்பனென்ற ஆசாமி நான் ஒட்டியாணஞ் செய்து தருகிறேனென்று சொன்னான். இவ்விதம் பேசிக்கொண்டு இருந்து எல்லாருமாக எழுந்து வெளியில் வந்தார்கள். அச்சமயம் நமது ராமநாதன் அந்தப்பாதையாக வந்தவனைக்கண்டு சுப்பிரமணியனென்பவன் 'ஏன்! ராமனானே! இங்கே ஒரு நல்ல ஆசாமி கிஸ்திக்குக் கேக்கிறது அதுக்குப் பாதியாக்குடுப்பமா?

ராம:—நல்ல ஆசாமியா இருந்தாக்குடுக்கிறது.

சுப்பிர:—கெட்ட ஆசாமியா இருந்தா நானுங்ககிட்டச் சொல்லுவனா?

ராம:—என்ன தொழில்?

சுப்பிர:—தொழிலென்ன சம்பாரிக்கிறவ.

ராம:—என்ன சம்பாரிக்கிறவ?

சுப்பிர:—என்னமாயிருந்தாலும் ஆசாமி நல்லயிருந்தாச் சரிதானே?

ராம:—எவ்வளவு தொகை?

சுப்பிர:—௨௲-வெள்ளி.



ராம:—இனைக் கிஸ்திதானே?

சுப்பிர:—ஆமா.

ராம:—ஆசாமி குத்தமில்லையே?

சுப்பிர:—அப்படியிருந்தா நான் உங்களோடே பாதி குடுப்பனா?

ராம:—எப்ப குடுக்கவேணும்?

சுப்பிர:—இன்னைக்கி வேணுமாம்.

ராம:—இப்பயில்லை ராத்திரி (௮) மணிக்குக் குடுப்பமே.

சுப்பிர:—இப்ப போயிப் பேசிக்கிறது வந்தா அட் விரக் குடுக்கிறது. வாங்களேன் போவம்.

ராம:—இப்ப வேலையிருக்கே.

சுப்பிர:—சுருக்கா வந்திருவது.

ராம:—வீடு தூரமா?

சுப்பிரமணியன் இல்லைகிட்டத்தானென்று கூட்டிக்கொண்டு அந்த வீடுபோய்ச் சேர்ந்தான். இவர்கள் இருவரும் போனவுடன் இராஜமென்னும் அந்தப்பெண்ணும் மிக உபசாரமாய் கட்டிலண்டை கூட்டிக்கொண்டு போய் உட்காரவைத்து தாம்பூலங் கொண்டு வந்து வைத்து பக்கத்தில் நின்று பேசிக்கொண்டிருந்தாள். நமது ராமநாதன் இதற்குமுன் இவ்விஷயம் ஒன்றுந் தெரியாதவனாதலால் சாதாரணமாகப் பேசிக்கொண்டிருந்தான். சுப்பிரமணியன் அந்தப் பெண்ணைப்பார்த்து ஆர்மோனியப்பெட்டியை எடுத்து மீட்டிக்கொண்டு தேவாரந் திருவருட்பா முதலியதுகளில் நல்லதாய் ரெண்டொன்று பாடலாமேன்று கேட்

டான். அவளும் சரி யென்று பாட ஆரம்பித்து தேவாரத்தில் சிலது பாடி திருவருட்பா பாடிக்கொண் டிருந்தாள். அச்சமயம் நமது ராமநாதன் ஆனந்த சாகரத்தில் மூழ்கி இருந்தான். சுப்பிரமணியன் மெள்ளக் கண்சாடை காட்டி விட்டு வெளியில் போய்விட்டான். அவன் போகவே அந்தப்பெண்ணும் தாயுமானவர் பாடலில் சிலதைப்பாடி விட்டு ராமநாதனுக்கு மோகமுண்டாகக்கூடிய சில பதங்களையும் ஜாவடிச்சிந்துகளையும் பாடி முடித்து ராஜம் திடீரென்றெழுந்து வந்து கட்டிலிலிருந்த ராமநாதன் மடியில் படுத்தாள். ராமநாதன் உடனே! பதட்டமாய் ஏன் இப்படிச் செய்தாயென்று கேட்டான். அதற்கு ராஜம் என் துரையே! தங்கள் பேரில் ஆசையாய் சகிக்கமுடியாத அவஸ்தையிலிருக்கும் அடியாளைக் காப்பாற்றவேணுமென்று அவன் கன்னத்தில் முத்தமிட்டாள். ராமநாதன் பயந்தவனைப்போல் தாழ்ந்த கீச்சுக்குரலுடன் உடம்பெல்லாம் புல்லரிக்க நெற்றியில் சிறு வேர்வையரும்ப ஒரு நிலையற்றமனதோடு ஆசையென்ன? சகிக்கமுடியாத அவஸ்தையென்ன? அதை நான் காப்பாற்றுவதென்ன? யெனக்கொன்றுந் தெரியவில்லையே யென்றான். ராஜம் மடியிற் படுத்துக்கொண்டே காமரசம் வடியும் பார்வையுடன் புன்சிரிப்புடனும் ராமநாதன் மனதைக் கொள்ளை கொள்ளும்படியான ஜாடைகளுடனும் ஒங்களுக்கு ஒன்றுந் தெரியவில்லையா? பெண்களின் ஆசையைப் புருஷர்கள் யெவ்விதந் தீர்ப்பதென்பது நான் சொல்லியா தாங்கள் தெரிந்து கொள்ளவேணும்? இந்த ஆறு மாதகாலமாகத் தின



சரி தங்களை யிந்த ரோட்டு வழிபோகக் கண்டு ஆசைநாளுக்குநாள் வளர்ந்து போஜன முதலானதுஞ் செல்லாது மெலிந்த அடியாள் இன்று இக்கட்டிலின்மேல் தங்களைக்கண்டு என்னாசைதீர முத்தமிட்டபின் தான் திரேகம் பூரித்தது. என்று சொல்லிக்கொண்டே மெதுவாக அவன் மடியிலேயே புரண்டு மேகலையை நெகிழ்த்து ஸ்தனத்தைக அரைவாசி தெரியக்காட்டி உடனே கைத்தவராய் மேகலையை ஜாஸ்தியாய் தூக்கினபாவனைபோலும் வெட்கமடைந்தவள்போலும் திடீரென மூடிக்கொண்டாள்.

ராமநாதன்:—நடந்ததைப்பார்த்து இதென்ன விபரீதமாக இருக்கிறது. நாம் வந்தவேலையென்ன? இருக்கும் இடமெதுவென்று தப்பித்துக்கொண்டு போகவும் மனம் வராமல் தன் ஆசையைக் காட்டவும் தெரியாமல் அவனது நற்குணமும் யோக்கியதையும் ஒரு பக்கம் அவன் மனதைத்தடுக்க அவன் வயசுக்கேற்றிய காமக்கிளர்ச்சியும் வந்து அகப்பட்டுக்கொண்ட இடமும் அந்தப்பெண்ணின் ஜாலங்களும் மற்றொரு பக்கம் அவன் புத்தியைக்கெடுக்க என்ன செய்வதென்று தெரியாமல் மயங்கிக்கொண்டிருந்தான்.

ராஜம்:—யென்ன யோசனை செய்துகொண்டிருக்கிறீர்களென்று கட்டித்தழுவி அப்படியே மெத்தையில் படுக்கவை.................................தாள்.

இராமநாதன்:—மிகவும் தாழ்ந்த குரலுடன் ஏன் இப்படி எல்லாம் செய்கிறாய்? யாராவது கண்டாலென்ன சொல்லுவார்கள்.................................

....................................................................................................

சரி சரி போதும் போதும் விடு! விடு! என்று எழுந்து உட்கார்ந்தான்.

ராஜம் :—தங்கள் பிரீதியை வைக்கிருக்கும் ஆசைப் பெருக்கே இவ்விதஞ்செய்ததைத்தவிர யென் மனதார நான் ஒன்றும் மோசஞ்செய்ய நெனைத்தவளல்ல என்று கட்டித்தழுவியபடியே அவளும் கட்டிலின்உட்கார்ந்தாள்.

ராம :—சிறிது மனப்பதட்டம் நீங்கினவனாய் மிகவும் வெட்கப்பட்டுக்கொண்டு அதை வெளிக்குக் காட்டாதவன்போல் சரி என்மனது மட்டிலும் அவ்விதமிருந்தால் யென் மனதை நீ அறியவேண்டாமோ?

ராஜம் :—ஆஹா!! தங்கள் மனசு எனக்கு நன்றாகத்தெரியும். அக்கினிவோரத்துக்கு வெண்ணெய்யைக் கொண்டுவந்தால் அதுதானே உருகுகிறது இது கூடத் தெரியாதா? என்ன! என்னைப்போன்ற ஆசை நாயகிகளின் மனசு உங்களுக்குத்தெரிந்தால் அப்பொழுதே உங்கள் மனசு உருகிவிடும் என்பது நிஜம். அன்றியும் என்னைப்போன்ற பெண்மணிகள் நினைத்தால் இதெல்லாம் அருமையா? என்று தன் சாமார்த்தியத்தை எடுத்துச்சொல்லி மார்பமுறச்சத்தழுவி....................

..........................................செய்து,....................

..................................முகத்..........................து..........

.............................முத்தமிட்டாள்.

ராம :—பயமும் வெட்கமும் கொண்டவனாய்த் தன் கையால் அவளைச்சற்று மெதுவாக விலக்கி......



..........................உட்காரச்செய்து மனப்பதட்டத்தைக் காட்டாதவன்போல் உன்னைப்போலப் பெண்களுக்கு யெதை நினைத்தாலும் முடிக்கக்கூடிய வல்லபம் பூராவாக இருக்கோ?

ராஜம் :— அதற்கென்ன தடை?

ராமநா :—யென்னிஷ்ட மில்லாவிட்டால் தடையேற்படாதோ?

ராஜம் :—என்னைப்போன்றவர்களே புருஷர்களை வலியவளைந்தால் அதிலும்பெரும் பாக்கியமென்ன உங்களுக்கு வேண்டும்?

ராம :—எனக்கவ்விதமான பாக்கியம் வேண்டுவதேயில்லை.

ராஜம் :—அப்படித்தாங்கள் சொன்னால், யார்விடப்போறது?

ராம :—விடாது யென்னசெய்வாய்?

ராஜம் :—வலுவந்தமாகத் தழுவுவோம்.

ராம :—நானிணங்கா விட்டாலோ?

ராஜம் :—இணங்கக்கூடிய மார்க்கத்தை அனுசரித்து இணங்குவோம்.

ராம :—அம்மார்க்கமெப்படி?

ராஜம் :—அவ்விதஞ் செய்துதான் யென்னபீஷ்டத்தை நிறைவேற்றிக்கொள்ளவேணுமோ?—என்று நெருங்கிவந்து ராமநாதனைப் புன்சிரிப்புடன் பிடித்தாள்.

ராம :—உடம்பெல்லாம் புல்லரிக்க மனப்பதட்டம் ஒருபக்கம் பயத்தை உண்டாக்க அதை எல்லாம்

மறைந்துக்கொண்டவன்போல் காட்டி வாய் குளிர்த்தானும் புன்சிரிப்புடன் முடிந்தால் செய் என்றான்.

ராஜம் :—பாவாடை..............................மெது ...............விரமேகலைகளை நீக்கிவிட்டு சரேலென்று வந்து ராமநாதனைத் தழு..................தி.................கு..............................டாள்.

இராமநாதன் :—அவனுக்கிருந்த பயத்தை விட ஆசை மிஞ்சினதாயிருந்தாலும் பதட்டம் மேலிட்டவனாய் அவளிடமிருந்து சமாளித்துக்கொண்டு உடம்பு புல்லரிக்க மெதுவாகக் கட்டிலை விட்டிறங்கி சரி! சரி! போதும்! போதும்!......................இனிமேல் ரோக்கம்போலச் செய்யலாம் இன்னைக்கி சோமவார விரதம் நாளைக்கி வருகிறேன். என்று தட்டுப்படலாய்ச் சொல்லி சீக்கிரம் வெளியே புறப்படத் தயாரானான்.

ராஜம்:— ராமநாதனுடைய செய்கைகளைக் கண்டு வியப்புற்றவளாய் இனி ரோக்கம்போல்தான் நடக்க வேணும் இந்த ஆசாமி நம்முடையவலையில் அகப்பட்டுக்கொண்டானென நினைத்து தானும் எழுந்து நின்று சிரித்த முகத்துடன் அவர் கையைப் பிடித்துக் கொண்டு நாளை அவசியம் வருகிறீர்களா? என்றாள்.

ராம :—சரி! வரேன்!

ராஜம் :—எத்தனைமணிக்கி.

ராம :—ஆறுமணி சுமாருக்கு.

ராஜம் :—நிச்சயந்தானே?

ராம :—நிச்சயமே.

ராஜம் :—மறந்துவிடப்படாது.

ராம :—ஒருநாளுமில்லை.



ராஜம் :—யென்ன? ஒருநாளும் மறப்பதில்லையா? நினைப்படதில்லையா?

ராம :—மறப்பதில்லை.

ராஜம் :—நாளைக்கி வழிபார்த்துக்கொண்டிருப்பேன்?

ராம :—அப்படியே. போய்வரட்டுமா?

ராஜம் :—புன்னகையோடு சமீபத்தில்வந்து அடியாள் யேழை மறந்துவிடப்படாது, ஞாபகமிருக்க வேணும்.

ராம :—பயமாச்சு போய்வருகிறேனென்று சொல்லிக்கொண்டெழுந்து வாசலைநோக்கி வந்தான். வெளித்தாள் போட்டிருந்தது. அதையும் ராஜம் வந்து கதவைத்தட்டின உடன் வெளியில் நின்ற அவள் பெண் திறந்துவிட்டாள். ராமநாதனும் கால் நடுக்கத்துடன் யாராவது பார்த்து விடுவார்களோ என்ற பயமும் திகிலும் கொண்டவனாய் முகத்திலுள்ள வேர்வையைத் துடைத்துக்கொண்டு மனதைத் திடப்படுத்திக் கொண்டும் ஒருவருக்கும் தெரியாமல் போய்விட வேணுமே என்று யோசனையோடு அங்குமிங்குந் திரும்பிப் பார்த்த வண்ணமாக வெளியே வந்தான். வந்தவன் நேரே வீடு போகாமல் சீக்கிரமாக கிஸ்திகளை வாங்கிக்கொண்டு ௯-மணிக்குப் போய் வீடு சேர்ந்து கணக்குகளை யெழுதி முடித்துவிட்டு இதே விசாரமாக சாப்பாடுகூட சரியாய் சாப்பிடாது படுத்துக்கொள்ளச் சென்றான். தூக்கமும் வரவில்லை. பலவாறு நினைவுகள் ஓடுகின்றது. சில சமயங்களில் தான்

செய்தது தப்பிதம் என்றும் சில சமயங்களில் நியாயமென்றும் தோணுகிறது. கடைசியாகத் தான் தப்பி வந்ததே பாக்கியம் என்றும் இனிமேல் ஜாக்கிரதையாக இருக்கவேணும் என்றும், இவ்விதமாக விடியும் வரை நினைப்பினால் சங்கடப்பட்டுக் கொண்டிருந்து சூரிய உதயமானதும் எழுந்து தந்தசுத்தி செய்யுஞ் சமயம் முதல்நாள் கூட்டிக்கொண்டுபோன புண்ணியவானாகிய சுப்பிரமணியன் புன்சிரிப்புடன் சிரித்துக் கொண்டு ராமனாதனைப்பார்த்து ராத்திரியென்ன! விசேஷந்தானே? என்றான்.

ராம:—எல்லாம் விசேஷந்தான்.

சுப்பிர:—இனியாவது எங்களோடு நீ சேருவியா? அல்லது சங்கதியை வெளியாக்கிடுவா?

ராம:—நீங்கள் சொல்லுவதை யெல்லாங் கேட்கிறேன்.

சுப்பிர:—இன்னைக்கு டிராமாவுக்கு வாரியா?

ராம:—இவனுக்கு இந்தச்சமயம் இவன் மனம் போலப் பேசாவிட்டால் மோசம் என்று நினைத்துக் கொண்டு சரி வாரேன்.

சுப்பிர:—நிச்சயந்தானே?

ராம:—நிச்சயந்தான்.

சுப்பிரமணியன் போய்விட்டபின் ராமநாதன் சனியன் தொலைந்தது என்று சீக்கிரம் கால்கைசுத்தி செய்துகொண்டு பெட்டியடி போய்ச்சேர்ந்து வேலைகளைப் பார்த்தானே தவிர; அன்று முதல் அவன்

85 - 46



முதனாள் சென்ற ரோட்டுக்குஞ் செல்லவில்லை. கிஸ்திக்கு முத்தய்யாவை அனுப்பினான். பையன்களிவன் மனோதிடத்துக்கு மெச்சி அக்கிரமச் செய்கைகளில் முதல்வர்களான பையன்கள்கூட நல்ல நிலைமைக்கு வந்துவிட்டார்கள். சுப்பிரமணியன்மட்டினும் முன்னிலும் அதிகமாகவே நடத்திவந்தான்.

ஆயினும் ராமநாதன் இராஜத்தை அவளிடம் சொன்னபடி சில நாள் வரை மறந்தவனல்ல. வேலைகள் முடிந்து படுத்துக் கொள்ளும்போது அவளுடைய நினைப்பு அவனுக்கு வராமலிருக்கவில்லை. அவள் பாடினதையும் கண் ஜாடைகள் செய்ததையும் முத்தமிட்டதையும்மேல்விழுந்து..........தழுவினதையும் நினைத்து நினைத்துத் தனக்குள்ளே ஆனந்தப்பட்டதுமுண்டு. அவளைப்பற்றி நினைக்கும்போது சில சமயங்களில் நாமே நாளைக்குக் கிஸ்திக்குப்போக வேணும் இருட்டினபிறகு அவளிருக்கும் தெரு வழியே போய்ப் பார்ப்போம் என்ன சொல்லுகிறாள் என்று அறிவோம் என்று நினைப்பான். இப்படி அவன் நினைக்கும்போதே அவன் புத்தியிலேயே படிந்து அஹா!! அன்று நாம் சீக்கிரம் அவளை விட்டுவந்தது பிசகு என்றுநினைப்பான். எப்படியும் ஒருவருக்குந் தெரியாமல் ஒரு நாள் போகத்தான் வேணும். போனால் உபசரிப்பாள் என்று நினைப்பான். அவன் சற்று நிதானித்து யோசிக்கும் போதெல்லாம் அதில் உள்ள கெடுதிகளையும் தான் பத்திரிகைகளில் படித்திருக்கிறபடி அநேகர்கள் கெட்டுப்போன சங்கதிகளையும் தன் யோக்கியதைக்கும் மதிப்புக்கும் இப்படிப்பட்ட காரியங்கள் மகா

கெடுதி என்பதையும் உணர்ந்து இராஜத்தை மறந்து மனந்தேறுவான். இப்படி நாளாவர்த்தியில் நற் பழக்கத்தாலும் புத்தியாலும் அவளை மறந்து தன் புத்தியிலிருந்து நீக்கினனே யொழிய, அற்பர்களின் சவகாசம் சிறிதாவதிருந்தால் அவன் புத்தி கெட்டே போயிருக்கும். எப்பேர்ப்பட்ட மகரிஷிகளும் தவசிகளும் ஞானிகளும் மகா படிப்பாளிகளும் இந்த விஷயத்தில் மானமழிந்து திண்டாடி யிருக்கிறார்களென்றால், கேவலம் நமது இராமநாதன் இவ்வளவு தூரம் மயங்கினது ஆச்சரியமல்ல.

இராமநாதன் பொறுப்பான வேலையில் மேலாளாக இருந்து வந்ததினாலும், பெரிய மனுஷாளுடைய உறவும் மதிப்பும் ஜாஸ்தியாக இருந்ததினாலும், பிறந்தது முதல் நல்ல பழக்கத்திலேயே பழகிவந்ததினாலும் அவன் மனோபலத்தைக் கொண்டு வைராக்கியத்துடன் நல்வழியில் நின்று விட்டான். சிறு வயதில் இராமநாதனைப் போலவாவது நல்ல படிப்பும் சத் பழக்கமும் விவேகமும் சிறுவர்களுக்கிருந்தால் நமது இராமநாதனுக்கு வந்தது போன்ற அற்ப சொற்ப ஆபத்துக்கள் வந்தாலும், தப்பித்துக் கொள்ளுவார்கள். ராமநாதன் உலக விவகாரங்களை நன்றாகப் பத்திரிகைகள் மூலமாக அடிக்கடி அறிந்திருந்ததினால் பத்திரிகைகளில் வேசி தாசி வீட்டுக்குப் போனவர்கள் கெட்டலைந்ததையும் ஜயிலுக்குப் போனதையும், நஷ்டமடைந்ததையும், அவமானப் பட்டதையும், படிக்கும்போது ஐயோ! நாம் கூட இப்படித்தானே ஆயிருப்போம் அன்றைக்கு யோசிக்காமல் அவள்



மாயையில் விழுந்திருந்தால். நல்ல வேளை தப்பித்துக் கொண்டோம் என்று மனந் தெளிவடைவான். பத்திரிகை படித்து வந்ததின் உபயோகம் இராமநாதனுக்குப் பெரிய குருபோல அவனை நல்ல வழிக்குக் கொண்டுவரத் துணையாக இருந்தது. தவிரவும் பெரியவாள் புத்தியைக் கேட்பதிலும் அந்தப்படி நடப்பதிலும் இராமநாதன் பழகி வந்தபடியால் அவன் நாளாக ஆக அதிக சமர்த்தனாய் விட்டான்.

ராமநாதன் சிலகாலத்துக்கெல்லாம் விவகார முதலிய சகல விஷயங்களிலும் கெட்டிக்காரனாகவே, இவனிடம் இனாம் வாங்கிவரும் சிநேககாரனொருவன் ஒரு நாள் காலையில் ராமநாதனிடம் வந்து முதலாளி! நான் இன்னந் தாயாதி பிரித்துக்கொள்ளவில்லை. சிறுசிலேயே இங்கே இருந்து நான் வியாபாரஞ்செய்து ரொம்பத் தேர்ந்திருக்கிறேன். அப்படி இருக்க என் தமையன்மார் இருவரிருக்கிறார்கள். சொத்து மூனு நாலு லக்ஷம்வெள்ளி இருக்கிறது. நானிங்கேயே இருந்து வருகிற அபினையெல்லாம் லாபத்துக்கு விற்று அனுப்ப எல்லாவற்றையும் எடுத்துக்கொண்டு என்னை மோசஞ்செய்துவிட்டார்கள். இப்போது வியாஜ்யம் போட்டால் லாயர்பீசு மவுண்டு முதலானதும் இருந்து வெள்ளிவரையில் செல்லும் இதற்கு எங்கள்ஜாதியில் எல்லாரும் ஒன்றுசேர்ந்து கொண்டார்கள். மற்றவர்கள் தரப் பயப்படுகிறார்கள். நீங்கள் கொடுத்தால் தக்க லாபம் உங்களுக்குக் கொடுக்கலாம். தயவுசெய்து கொடுக்கவேணுமென்றான்.

ராம:—உனக்கென்ன ஆதரவு இருக்கிறது?

வியாபாரி:—அங்கிருந்துவந்த லெட்டர்கள் நானெழுதிய லெட்டர்களின் காப்பிகள், சரக்குவிற்றனுப்பிய கணக்குகள், பட்டோலைக்கல்கள், அபின் கண்டிராக்டு பில்கள் சகலமும் யிருக்கிறது. செலவுக்குப் பணந்தானில்லை.

ராம:—அதுகளை இங்கே யெடுத்துவரக்கூடுமா?

வியாபாரி:—ஜாஸ்தியாக இருக்கிறது அங்கே வந்துபார்த்தால் நல்லது.

ராம:—சரி வாபோகலாமென்று இருவருமெழுந்து கடைக்குப்போய் அவன் யெல்லா ரிக்கார்டுகளையும் வியாமெடுத்தெழுதிக்கொண்டு மறுநாள்வருவதாய்ச் சொல்லிவிட்டு அப்படியே லாயர்வீட்டுக்குப்போய் விவகாரத்தைச் சொல்லிக்கேட்கவே லாயரும் இந்தக் கேசு முன்னமே யோசனைக்குவந்ததுதான் இன்றையுடையகேசு கோர்ட்டில்போட்டால் நான் அவசியம் ஜெயம்பண்ணித் தருகிறேனென்றான். ராமநாதனும் சரியென்று சொல்லிவிட்டு நேரே சீனன்வீட்டுக்குப் போய் அவனைக்கண்டு இந்தக்கேசை ஜெயித்தபின் யெனக்கெவ்வளவு தருவாய் யென்று கேட்டான்,

வியாபாரி:—சிலவழித்ததுக்கு வட்டியும்முதலும் ஜெயித்த தொகையில் நாலிலொன்றும் தருகிறேனென்றான்.

ராம:—சரி யென ஒப்புக்கொண்டு உடனே யெக்ரிமென் டெழுதிக் கையெழுத்துப்போட்டு வாங்கிக்கொண்டு சுமார் [illegible] வெள்ளி பெருமான வியாபாரியினுடைய சிலசொத்துக்கள் இருந்ததுகளை



யெழுதிவாங்கிக்கொண்டு மறுநாளேகேசை ஆரம்பஞ்செய்து நாலுமாதம்வரை படாதகஷ்டமெல்லாம் பட்டு மேலுமேலும் கேசை முறுக்காய்நடத்தவே எதிரிகளும் பயந்து செட்டி நடத்துவதால் கேசை லேசில் விடமாட்டானென்று நினைத்து 15,0000 வெள்ளிக்குப் பிராது போட்டிருந்ததற்கு சிலவுசகிதம் 12,0000 வெள்ளியாகத்தீர்த்து ராஜிநாமாக் கொடுத்துவிட்டார்கள். உடனே ராமநாதன் அத்தொகையைவாங்கிவந்து செட்டிகள் விடுகளில் கொடுத்துவைத்தான். அதில் ராமநாதனுக்கு யெக்ரிமென்டுப் பிரகாரம் நாலில் ஒன்றுக்கு 30,000 முப்பதினாயிரம் வெள்ளியும் செலவு 15,000 வெள்ளியும் ஆக 45,000 வெள்ளியை யெடுத்துக்கொண்டு செலவுதொகைக்கு வட்டியைத்தள்ளிவிட்டான். பாக்கி 75,000 வெள்ளியும் ராமநாதனிடத்திலேயே அரைவட்டிக்கி வைத்துச் சீட்டுவாங்கிக்கொண்டான். இந்தவிஷயங்களை அங்குள்ள யெல்லாருங்கேட்டு ராமநாதன்மீது அளவற்ற ஆனந்தப்பட்டார்கள். மதிப்புவரவர படிப்படியாயேறிவந்தது. யெவ்வளவுமதிப்பு ஜாஸ்தியானாலுங்கூட நாளாக நாளாக கௌரவத்தோடும் அடக்கத்தோடும் நடந்துகொண்டானே தவிர விடபுருஷர்களைப்போல் அகௌரவமான எவ்வித விஷயங்களையும்செய்ய ஆரம்பித்ததுமில்லை. கோவமடையவுமில்லை. இறுவர்களெல்லாம் இவ்விதமிருந்தால் கூடியசீக்கிரம் முன்னுக்குவருவதிலென்ன தடை? நமது ராமநாதன் எவ்வித குணத்திலும் குறைவுபட்டவனில்லை. இவ்விதம் நடந்துகொண்டு வரும்போது ஒரு லெட்டரும் ஒருதந்தியும் வந்தது. தந்திவந்தவுடனே

வாசித்துப்பார்த்து அதிலுள்ள விஷயங்கள் ஒன்றும் முன்பின் தாக்கலில்லாம லிருப்பதால் சந்தேகப்பட்ட மனதுடன் லெட்டரைப்பிரித்துப் பின்வருமாறுவாசித்தான். லெட்டரில் நாலுமூலையிலும் மஞ்சள் தடவி இருந்தது..

உ

சிவமயம்.

தேவகோட்டை, சிங்கப்பூர்.

கரு. சா. வெ. சுப.

பராபவ௵ தைமீ உ௰௨ சுப்பிரமணியன் தம்பி ராமநாதனுக்கு மீனாக்ஷிசுந்தரேஸ்வரர் கிருபையால் மென்மேலும் பெருக உண்டாவதாகவும். இப்பவும் இதுகடுதாசியும் முன்மீ ௰௨உக் கடிதாசியும் வரத் தெரியவருமே. அவடம் நாளதுமீ டேட் கடுதாசியும் வந்துசேர்ந்தது. சின்ன கேசுவிஷயமாய் நான் செய்த வேலையும் கடவுளின் கிருபாகடாக்ஷத்தால் நன்மையாய் முடிந்தவிஷயத்தில் சந்தோஷமே. இனிமேலும் இவ்விதமான வேலைகளை பதறாதுசெய்தால் நன்மையே. எந்தக்காரியமும் முன்பின் அனுபோகமும் கால இயற்கையும் யோசித்துச்செய்து நல்லபேரோடு இருந்து வருவதுதான் வாசி. தனக்கும் ஆராவயல் லெ. வி. செ. கு. குப்பாஞ்செட்டியாரின் நடுப்பெண்ணைப்பேசி முடித்து நாளது மாதம் உகூ தாலிக்குப்பொன் குடுக்கிறது. வைகாசிமீ உகூ முகூர்த்தமும் பார்த்திருக்கிறது. நகை சீதனமுதலானதுக்காக ஆசாரிகளுக்கு உண்டியிலும் எழுதிவாங்கியிருக்கிறது.



தனக்கு பதிலாளும் சேதுபுரம் மெய்யப்பனை நூறு வெள்ளி சம்பளம்பேசி நேற்றுப் பயணஞ்செய்து அனுப்பி இருக்கிறேன். கணக்குகளை கூடியசீக்கிரம் எழுதிக்குடுத்துவிட்டுத் தானும் வைகாசிமீ ௨௰க்குள் இவ்விடம் வந்துசேரவும். அடுத்தாள் முத்தையா இன்னம் நாலுமாதமிருந்து வரட்டும். தாமசிக்கப்படாது. கணக்குகளை ஒப்பித்துவிட்டு சீக்கிரம்வந்து சேரவும். மற்றுத் தாக்கல் பின்பு.

வேணும்,

அண்ணாமலையார்துணை.

இந்த லெட்டரை வாசித்தபின்தான் தந்தியின் விபரம் தெரிந்தது. அதாவது தனக்குபதிலாள் மெய்யப்பசெட்டியார் பினாங்குவந்து சொல்லிய தந்தியென்று தெரிந்துகொண்டான். உடனே இந்தலெட்டர் தாக்கல்மற்ற பெரியமனுஷாளுக்கும் மற்றவர்களுக்குந் தெரியவே சில சிறுவர்கள் கேலிபண்ண ஆரம்பித்தார்கள். அதற்குநமது ராமநாதன் ஒன்றும் பதில் சொல்லாது வெட்கமாய்த் தலைகுனிந்துகொள்வான். முன் கப்பலேறிய மெய்யப்பசெட்டியும் பினாங்குக்கு வந்து ஒருவாரமங்கிருந்து ஊருக்கு லெட்டர் முதலானதும்எழுதி சிங்கப்பூருக்கும் தந்தி சொல்லிவிட்டு மறுவாரம் கப்பலேறி சிங்கப்பூர்வந்துசேர்ந்தார். நமது ராமநாதன்முதலிய சிலர் கப்பலடிக்கிவந்து கப்பலில்வந்தவரைக் கூட்டிக்கொண்டுபோய் ஸ்நானபானஞ் செய்துவைத்து கோடிவஸ்திரந் தரிக்கக் கொள்ளச்செய்து மறுநாள்முதல் கணக்குகளையெழுதி விட்டு, எழுதிவிட்ட கணக்குகளின் ஆசாமிகளின்

வீடுகளுக்கு அன்றுடகம் கூட்டிக்கொண்டு போய்க் காண்பித்துவந்து கணக்குகளெல்லாம் ஒரு வாரத்தில் எழுதிமுடித்து சித்திரை மாதத்தில் புதுக்கணக்கு போடச் சொல்லிவிட்டு புதுக்கணக்கு ஆளிடம் முதல் வெள்ளி ௨௰௲ தனதுமுதல் வெள்ளி ௬௰௲ கணக்கு ஆதாயத்தில் ௫௲ வெள்ளி கசர்த்தள்ளி மிச்சம் வெள்ளி ௪௰௲ ஆக வெள்ளி ௭௰௲க்கு லெட்டர் வாங்கிக்கொண்டு, அடுத்தாள் முத்தையாவுக்குச் சாமர்த்தியக்காக ௲ வெள்ளி கொடுத்து எல்லா ஆசாமிகளிடமும் பயணம் சொல்லிக்கொண்டான், ஒவ்வொரு ஆசாமியும் 100 வெள்ளி 200 வெள்ளியாக இனாம் கொடுத்ததையும் சந்தோஷத்தோடு வாங்கிக்கொண்டு சீனனிடம்போய்ச் சொல்லிக்கொள்ளவே அவனும் வருத்தப்பட்டவனாய்க் கட்டித்தழுவிக்கொண்டு ஆயிர வெள்ளி பெருமதிப்பின் ஒரு வைரமோதிரத்தை விரலில் போட்டுவிட்டு சுமார் 500 வெள்ளிக்கு வேண்டிய சாமான்கள் வாங்கிக்கொடுத்து பின்னோடே வீட்டுக்கு வந்து ராமநாதனைப் பயணஞ்செய்ய வெல்லாரோடும் கப்பல்துறைவந்து பயணஞ்செய்தும் தன்மனது சகிக்காமல் அவனுக்கூட பினாங்குவரை வருவதாகக் கப்பலேறிவிட்டான். ராமநாதன் எவ்வளவு சமாதானஞ் சொல்லியுங் கேட்காமல் கூடவே பினாங்குவரைவந்து இரண்டுநாளிருந்து நாகபட்டணங் கப்பலேற்றிவிட்டு திரும்பியுஞ் சிங்கப்பூர் போய்ச் சேர்ந்தான்.

---



## எட்டாவது அத்தியாயம்.

நமது சுப்பிரமணியஞ் செட்டியார் சிங்கப்பூருக்குப் பதிலெழுதியனுப்பி கல்யாணலெட்டருமெழுதியபின் முன்பார்த்த முகூர்த்தப்படி தையீ ௨௰௰ தாலிக்குப் பொன்னுருக்க ஆரம்பித்து அதற்காக வழக்கம்போல் மாப்பிள்ளைவீடுகளில் செய்கிறபலகாரவகைகளெல்லாம் செய்து பழுவர்க்கங்களுக்கு ஆளனுப்பி வாங்கிவந்தும் தயாராக இருந்தது. தட்டானிடம் நகைக்குக் கொடுக்கவேண்டியதற்காக தங்கம் முதலானதுகளும் தேவகோட்டையிலேயே அகப்படுமானதால் ௨ம விராகனிடை தங்கம்வரை அங்கேயே வாங்கினார். உயிகை தாலியில் ஆரவயலிலிருந்து பெண்ணின் தகப்பனார் பெரியதகப்பனார் சிறியதகப்பனார் மாமன் முதல் இன்னுஞ் சிலரும் நாலுவண்டியில் ஏறிவந்து சேர்ந்தார்கள். உடனே சுப்பிரமணியஞ் செட்டியாரும் அவர்களுக்கு வேண்டிய மரியாதைகளை ஒழுங்காகச் செய்து பலகார முதலானதுகளும் சாப்பிட்டானபின் மத்தியான சாப்பாட்டுக்கும் சமையல் நடந்தது. முகூர்த்தத்துக்கும் டயம் நெருங்கினதால் ஒரு ஆளனுப்பி வேலைத்திறமையும் கெடுநாளைய அனுபோகசாலியும் யோக்கியனுமான சம்பந்த மூர்த்தியாசாரியைக்கூட்டி வரும்படி சொல்ல உடனே மேற்படி ஆசாரியும் அவன் கொண்டுவரவேண்டியசாமான்களான உமியோடு, பித்தளை ஊதுகுழாய், உலைக்கூடு, தங்கம் உருக்கும் குகை, வார்க்கும் செங்கல், கத்தியல்

95 51



பட்டணைக் கட்டை, உரைகல், மாற்றுப்பார்க்கும் ஆணிக்கோர்வை முதலானதும் ஒரு ஆள் எடுத்துவர ஆசாரியுமிடையில் பட்டணங் கட்டிவேஷ்டியும் பட்டு அங்கவஸ்திரமும் கட்டிக்கொண்டு வரவும் பையன் ஒருவனும் கூடச்சென்ற ஆளும் பின்வர நாலு வருமாக வந்து சேர்ந்தார்கள். இவர்கள் வந்தவுடன் எல்லாரும் ஆசாரிவாரும்! வாருமென்று மரியாதைச் செய்து எல்லோரும் சந்தோஷ முகத்தோடிருக்க வள்ளியம்மையாச்சி சங்குதாலி முதலிய சகல நகைகளையும் போட்டுக்கொண்டு வாங்கிவைத்திருக்கும் தங்கங்களை ஒரு வெள்ளித்தாம்பாளத்தில் எடுத்து வைத்து எல்லாருங்கூடி யிருக்குமிடத்தில் கொண்டு வந்து வைத்தார்கள். பெரிய செட்டியாரும் அதை எடுத்து ஆசாரியிடம் கொடுத்து ஒரு கட்டில் தங்கமும் ஒரு கட்டில் ரூபாயும் போட்டு நிறுத்து தங்கத்தை உருக்கினதும் ஓசகல்லில்வார்த்துத் தட்டி ஆறினதும் ஒரு பக்கத்தில் பட்டையில் வைத்து சுத்தியாலடித்து உரைகல்லில் உரைத்து மாற்று ஆணியையும் உரைத்து, அ-மாற்று இருக்குமென்று பார்த்து மிச்சம்வெட்டி எடைபோட்டுத் தூக்கி-படியையும் மிச்சத்தையும் வாங்கி வைத்துக்கொண்டு ஒரு சிட்டில் (இன்னார் இன்ன நகைக்காக இன்ன ஆசாரி வசம் கொடுத்தது தங்கம் விராகனிடை இவ்வளவென்று) எழுதிக் கொண்டார்கள். அதில் ஆசாரியிடம் கையெழுத்து வாங்கி ஆசாரிக்கு ஒன்றும் எழுதிக் கொடுத்தபின் எல்லாருக்கும் வெற்றிலை பாக்கு சந்தனம் முதலானதுகள் பரிமாறி ஆசாரிக்கு அரிசி காய்

9798



கறிகளும் ஒரு ஆள் வசம் அனுப்பி எல்லா முடிந்தபின் ஆசாரியும் வீடுபோய்ச்சேர்ந்தார்.

மற்றெல்லோரும் ஸ்நானஞ்செய்து போஜனமுடித்துக்கொண்டபின் வந்திருந்த ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு பெரிய மாஇலையில் பலகாரம் பழவர்க்கம் மஞ்சள் தடவிய தேங்காய் பழம் புஷ்பம் சந்தனம் சீனி கற்கண்டு முதலானதும் வைத்து உள்ளூரிலுள்ளவர்களின் வீடுகளுக்கு ஆள் வசம் நேரே அனுப்பியும் அயலூராருக்கு ஒரு வண்டியிலும் வைத்துப் பெண் வீட்டாருக்கு பற்பல பலகார வகைகளும் பழவர்க்கங்களும் புஷ்ப முதலானதுகளும் கூடைகளில் அடைத்து ஒரு வண்டியிலும் ஏற்றியனுப்பினார்கள். வந்தவர்களும் அவரவர் வீடுபோய்ச் சேர்ந்தார்கள்.

மற்ற கலியாண வேலைகளும் இரண்டு குடும்பத்திலும் விரைவாய் நடந்துவந்தது. சென்னை தஞ்சாவூர் முதலிய இடங்களில் வேண்டிய சாமான்களுக்கும் ஆர்டர் செய்துவந்துகொண்டிருந்தது. வேலைகளிவ்விதம் துரிதமாய் நடந்துவருமிடையில் கல்யாணத்திற்காக வேண்டிய பலசரக்கு புடைவை முதலாகிய சாமான்களும் மற்ற சில்லறை நகைகளும் செய்ய கும் பவுனும் வாங்கவேண்டியதிருந்ததால் நமது சுப்பிரமணியஞ்செட்டியார் தானே மதுரைக்குப் புறப்பட்டுப் போக நிச்சயித்து, அந்தச் [illegible] வேண்டியதுகளுக்கு விபரந்தெரிந்த [illegible] பெரிய மனுஷாளிருந்து ஜாப்தா [illegible] கொடுக்க [illegible]கள் தயார்செய்து, சாமான்கள் கட்டுவதற்கு வேண்டிய துணி சாக்கு டின் முதலியவைகளும் எடுத்து

வண்டியில் வைத்துக்கொண்டு மாசிமீ ௨௰௨ மதுரைக்குப்புறப்பட்டு ௨௰௪ மதுரைபோய்ச் சேர்ந்து விபர ஜாப்தாப்படி வேண்டிய சாமான்கள் யெல்லாம் வாங்கி மூன்று வண்டிகளில் யேற்றிவிட்டு புடவை பவுன் ரூபாய் முதலிய சுமார் 1500 ரூபாய் சாமான்களை தன் வண்டியில் வைத்துக்கொண்டு ஊருக்குப்புறப்பட்டார்.

இவர் இப்படி சாமான் வாங்கித்திரும்பி வந்துகொண்டிருக்க ஊரிலிருந்து செட்டியார் மதுரைக்கு போகும்போது கள்ளையார் கோவிலுக்கும் தேவகோட்டைக்கும் மத்தியில் காட்டு நெடுங்குளத்தை அடுத்து சீதாரி ஊரணிக்கரையின் வடகரையில் ஆலமரத்தின் கீழ் இரண்டு மூன்று பேராக உட்கார்ந்துகொண்டு யென்னென்னமோ பேசிக்கொண்டிருந்தார்கள். அதில்

வீரன் :—அடேட் பேலே! சாத்தா நம்ப இந்த அம்மாகியிலே சும்மா அலைஞ்சுண்டே திரிஞ்சம் ஒண்ணும் ஆப்பிடலியே யென்னண்டா செயிரது?

சாத்தன் :—ஏண்டா தென..ம் ஆப்பிடுமிண்டா நெனைச்சிண்டே நம்ப இத்தனைபேரும் சுத்திண்டு திரிஞ்சா ஆம்பிடிரது சரி.

வீரன் :—அடேலே முனியா! பயக யெல்லாம் எங்கேடா காணம் வாராளா இல்யாடா?

முனியன்:—வாரமிண்டு சொல்லிட்டு விரைக்கிப்பே தக்கனிப் போட்டிண்டு வரப்போறாங்க.

வீரன் :—அதோவாரபயங்கெல்லாம் நம்ப பயங்கதானே?



முனியன் :—ஆமண்ணே.

யென்று சொல்லிக் கொண்டிருக்கும்போதே காலைந்து தடியர்கள் கள்ளை நன்றாய் சாப்பிட்டு வெறியேறி ஒருவனுக்கொருவன் ஆத்தாளை அக்காளை யென்று சண்டைபோட்டுக்கொண்டு மேற்படி ஆலமரத்தடிக்கு வந்துகொண்டிருந்தார்கள். அதிலொருவன் பாதை மார்க்கத்தில் போய்க்கொண்டிருக்கும் வண்டியைக் கண்டவுடன் வண்டி யோட்டுகிறவனைப் பார்த்து.

குமரன் :—யேண்ணே! யெங்கே போரிங்க?

வண்டிக்காரன் :—மருதைக்கி.

குமரன் :—மருதைக்கிச்சாமி கும்பிடவா?

வண்டிக்காரன் :—இல்லே. சாமா வாங்க.

குமரன்:—சாமா வாங்கமோ, வாத்துக்கு காச் சொல்லுமோ?

வண்டிக்காரன் :—செல்லுமிண்டுதாந் செட்டியாரு சொன்னாங்க.

குமரன் :—சரி போங்க போங்க.

யென்று சொல்லிவிட்டு யெல்லாருமாக முன்னிருந்தவர்களோடுபோய்ச் சேர்ந்தார்கள். சேர்ந்ததும் அதில் பெரியவனை வீரன் ஏண்ட இன்னிநேரம் யெங்கப் போனிங்க?

மூக்காணயன் :—தண்ணிப்போடப் போயிருந்தமின்னு.

வீரன் :—அடே பயகா ! யென்னடா நாளு நாளா நம்ம சாமியெக் கும்பிடலியாம் அந்தப்பய சாமிதாண்டா இப்டி செஞ்சுட்டிருக்கு.

சாப்புடுங்கி :—அந்த முனியாண்டிங்கிற பிசாசை இப்பக்கூட தண்ணிவாங்கிக் கும்பிட்டு, குடிச்சம் அப்பிர யென்ன.

சாத்தான் :—அந்தச் சாமியைக் கும்பிடக் கும்பிடத்தா நமக்கு ஒண்ணும் முண்ணுக்கு வர்லெ யெண்டா கொமர : இப்ப வண்டிக்காரப்பயலெக் கேட்டியே அவங்கயெப்ப வருவாங்கடா ?

குமரன் :—அந்தசாரு நாச் செல்லுமின்னு நெனைக்கிறேண்டா.

வீரன் :—யெங்குருந்திரா போகுது அருராது அவங்க ?

குமரன் :—தேவகோட்டை வண்டியாம் மருதைக்குச் சாமாஞ்வாங்கப் போராங்களாம்.

வீரன் :—அடே! அப்ப நல்லா அம்பிடுமே ?

குமரன் :—இப்பத்தானே வாங்கப்போராங்க.

சாத்தன்:—ஏண்ணே ! நம்மசாமிக்கி பூசை போடாட்டா இப்படித்தாண்ணே நம்ம பொளப்பு.

வீரன் :—நாளைக்கே பூசைப்போட்டு கும்பிட்டாப் போச்சி.

சாத்தான்:—அப்படியே செஞ்சிட்டாத்தா நல்லது மறந்திராமைப் பேட்டுருங்கோ.

வீரன்:—அட சாத்தா! ஒங்களுக்கு அந்த வண்டி அடையாளந் தெரியுமென்னடா நாங்க மிருக்குதா ?



சாத்தான்:—நல்ல வெள்ளைமாடுக மொக்கை வண்டி யெனக்குத்தெரியும். நாங் காலையா கோயிலிலே போயிருந்துக்கிறு தாக்க வந்து செல்லுறேன் நீங்க அப்பிரமாக வரலாம்.

வீரன்:—சரிடா சாத்தா கட்டாயமாவந்து சொல்லுரியா ?

சாத்தன் :—ஆகட்டாகட்டும் யென்று பேசிக்கொண்டு யெல்லாருமாக யெழுந்து போய்விட்டார்கள். சாத்தனும் நாலாநாள்முதல் வண்டிபார்க்க நடுவாடியில் வந்திருந்தான். நமது சுப்பிரமணியஞ்செட்டியாரும் மதுரைபோய் சாமான்வாங்கித் திருப்பினவர் நடுவாடியை அடுத்துவந்தும் சாத்தன் வண்டியை அடையாளங்கண்டு பின்னாலேயே தொடர ஆரம்பித்தான். சுப்பிரமணியஞ் செட்டியாரும வண்டியைக்காளையார் கோவிலில்நிறுத்தி சாப்பிட்டு முன்னேரத்தில் தூங்கிவிட்டு சூரிய உதயத்திற்குமுன் நாலுமணிக்கு வண்டியைக்கட்டி சாமான்வண்டியுந் தன்வண்டியுமாக நாலு வண்டியும் ஓட்டிக்கொண்டு சுமார் 5 மணிக்கெல்லாம் சிதாரிஊரணிக்கரைவந்துசேர்ந்தார்கள். அந்தச்சமயம் சாத்தன் முன்வந்து யெச்சரித்திருக்கிறபடி யெல்லா ஆசாமிகளும் தயாராகவந்து இருந்தார்கள் அதில்,

வீரன்:—(மெதுவாக) அடேபயகா! பத்ரம் ஊம்! பேசாதங்க !

வெடிஞ்சுபோகும் போலேயிருக்கிடா ! அடே வண்டிவருதுங்கடா யொரத்தி வண்டிதாண்டா! நம்ப அடிக்கணும்.

சாத்தான் :—(மெதுவாக) ஆமோ வண்டிக்காரப் பய தூங்கிறான்னெ வண்டியை காட்டுக்குள்ளே மேக்கே திருப்பிவிட்டுரு வென்றுசொல்லிக்கொண்டே சாத்தனும் வீரனுமாக வலதுமாட்டைத்தட்டி மேல்புறமாக காட்டுக்குள் வண்டியைத்திருப்பிவிட்டார்கள். முன்போன சாமான்வண்டி மூன்றும் சுமார் கால்மயில் வடபுறமாக போகவும் செட்டியாரிருந்த ஒரு வண்டி மட்டிலும் மேல்புறமாக காட்டிற்குள் கால்மயிலுமாகப் பிரிந்துபோய்விட்டது.

வீரன் :—(மெதுவாக) அடேமுனியா! மாட்டை அவித்துட்டுட்டு வண்டியைத்தூக்கிவிட்டிருரா.

முனியன்:—யெல்லாரும் வருவதற்காக உதட்டை பிதுக்கி சிட்டி அடித்தான்.

உடனே யெல்லாருமாகவந்து மாடுகள் ரெண்டையும் அவிழ்த்து வண்டியைத் தூக்கி விட்டுவிட்டார்கள். உள்ளிருந்த செட்டியார் அப்போது சீ! யென்று சொல்லிக்கொண்டே திடீரென்று கீழேவிழுந்தார். அவர் மேல் புடவைக்கட்டும் சில சில்லரை மூட்டைகளும் விழுந்தது.

வண்டிக்காரரும் ஆத்தாடி! யென்று விழுந்தான். வண்டியை அப்புறமிழுத்துவிட்டுப் போட்டு வண்டிக்காரனை நன்றாக நாலு அடி அடித்து யிழுத்தெறிந்து விட்டு அவன் கூப்பாடு போடாமல் வாயில் துணி வைத்துத்திணித்துச் சிலர் அவனைப் பிடித்துக்கொண்டார்கள். மூட்டைகளை ஒவ்வொன்றாகத் தூக்கிக் கொண்டு ஒவ்வொருவனும் போக சாத்தனும் வீரனு



மாகச் செட்டியார் மடியைத் தடவிப்பார்க்க அவர் மூட்டைக்குள் அகப்பட்டு மூர்ச்சையானவராக இருந்தாலுங்கூட மடியைப் பத்திரமாக கையால் பிடித்துக்கொண்டிருந்தார். கள்ளர்கள் எவ்வளவு பலவந்தஞ் செய்தும் விடாததால் குமரனென்பவன் ஒரே அடியாகத் தன் கையிலிருந்த கல்மூங்கில் தடியால் நாலடி ஓங்கி ஓங்கி அடிக்கவே செட்டியாருக்கு பிரக்ஞைதப்பி கையை விட்டுவிட்டார். திருடர்களும் மடியிலிருந்தும் இடுப்பில் வேஷ்டிக்குள் கட்டியிருந்த பவுன்களையும் யெடுத்துக்கொண்டு போய்விட்டார்கள். வண்டிக்காரன் மூர்ச்சைதெளிந் தெழுந்து வண்டியைப் பார்த்தான். வண்டியிலொன்றுமில்லை மாடுபோன வழியோ தெரியவில்லை. உடனே குறித்தநேரில் வண்டி மாடுகளோ ஊரைநோக்கி ஓடிவர மற்ற வண்டிக்காரர்கள் மாடுகளை மட்டும் காணவே திகில் கொண்டவர்களாய் வண்டியை நிறுத்தி ஓடின மாட்டைப் பிடித்துக் கொண்டு பாதை வழியாக இருவர் வந்தார்கள். வண்டியைக் காணோம். விபரந் தெரியாது திகைத்து வந்தவர்களிருவரும் மாட்டைப் பிடித்துக்கொண்டு திரும்பி வரவும் காட்டிற்குள் மேல்புறமாக வண்டியொன்று போயிருப்பதைக்கண்டு அந்தத் தடத்தின் வழியாகப் போகவே, வண்டியில் சாமான் ஒன்றுமில்லாது காலியா இருப்பதையும் வண்டிக்காரன் பயித்தியம் கொண்டவன்போல் அழுதுகொண்டு நிற்பதையும் செட்டியார் அடிபட்டு இரத்தங் கக்கிக்கொண்டு குப்புறக் கிடப்பதையுங்கண்டு திகைப்பூண்டில் மிதித்தவர்கள்போல் மதிமயங்கி மாட்டை வண்டியிற் கட்டிவிட்டு வண்டிக்

காரனை ஒன்றுங் கேட்காது செட்டியாரைத் தூக்கிப் பார்த்தார்கள். கனமாய்த் தூக்கமுடியாமல் இருந்தது. நெஞ்சில் கைவைத்துப் பார்த்தும் நாசியில் விரல் வைத்துப்பார்த்தும் சுவாசமே இல்லாததால் பிராணன் போய்விட்டதோ? யென்று சந்தேகப்பட்டு வண்டிக்காரனை நடந்த தென்னவென்று கேட்கவே அவன் எனக்கொன்றுந் தெரியாது யென்னமோ அடிவிழுந்தாப்போ லிருந்தது, அப்புற மெழுந்து பார்க்க சாமான்களில்லாமலும் மாட்டைகாணமலும் செட்டியார் கீழே கிடந்ததையுந்தான் கண்டேனென்று அழுதுகொண்டு உளறினான். செட்டியார் முதுகைப் பார்த்தார்கள்; பெரிய அடிகளால் சட்டைவிட்டிருந்தது. தலையில் விழுந்த மற்றொரு அடியால் மண்டையோடு நொறுங்கிப்போயிருந்தது. இதுகளையெல்லாம் பார்த்துங் கேட்டும் வாடகை வண்டிக்காரர்கள் திகைப்பும் ஆச்சர்யமும் அனுதாபமும் மேலுமெலுங் கொண்டவர்களாய் வண்டிக்காரனையுங்கூட்டிச் சேர்த்து மூவருமாக கீழே கிடந்த வைக்கோல்களை அரித்து வண்டியில்போட்டு ஜமக்காளத்தை விரித்து செட்டியாரைத்தூக்கி வண்டியில்போட்டு மாட்டைப்பூட்டி ஓட்டிக்கொண்டு முன் வண்டிகள் நிறுத்தியிருந்த இடத்துக்குவந்து ஆங்கிருந்த வண்டிக்காரருக்கும் தாக்கல்சொல்ல யெல்லாருமாகச்செட்டியாரிறந்ததைப்பற்றி அடங்காத வருத்தப்பட்டவர்களாய் நாலு வண்டியையும் ஓட்டிக்கொண்டு சுமார் 8–மணிக்குத் தேவகோட்டையில் செட்டியார் வீட்டு கேட்டு வாசலுக்கு முன் வண்டிகளைக் கொண்டுவந்து நிறுத்தினார்கள்.

103-54A



அந்தச்சமையம் செட்டியார் சம்சாரமும் அவர் மைத்துனனுமாகச் செட்டியார் வரவில்லையேயென்று பேசிக்கொண்டிருந்தார்கள். வாசலில் வண்டிகள்வந்து நின்றதும் செட்டியார் வந்துவிட்டாரென்ற சந்தோஷத்தோடு அவர் மைத்துனன் வெளியில் வரவே வண்டிகளெல்லாம் அவிழ்த்து விட்டிருப்பதைப் பார்த்து வண்டிக்காரனை செட்டியாரெங்கே யென்று கேட்டார். அதற்கு வண்டிக்காரன் வண்டியில்தானென்று அழுகைமுகத்துடன் கையால் காட்டினன், அதற்கவர் இதென்ன ஆச்சரியம் வண்டியோ அவிழ்த்துவிட்டிருக்கிறது தலைகீழாகவா தூங்குகிறார்களென்று சொல்லிக்கொண்டு வண்டியை அடுத்துவந்து எட்டிப் பார்த்தார் ஒன்றும் தென்படவில்லை. வண்டிக்காரனைப் பார்த்தார். அவன் கண்களினின்றும் நீர்தாரை தாரையாகவந்து கொண்டிருந்தது. அதைக்காணவே திகில்கொண்டவராய் பிரேதத்தண்டைபோய்ப் பார்த்து அடங்காத துக்கங்கொண்டு வீட்டுக்குட்போய் தன் தமைக்கையாரிடம் ஒன்றுஞ் சொல்லாமல் பெரிய வீட்டில் பாயெடுத்து விரிக்கச்சொல்லிவிட்டு வெளியில் வந்து வண்டிக்காரன்களுந் தானுமாகப் பிணத்தைத் தூக்கிவந்தார்கள். இதை ஆச்சி பார்த்து இதென்ன! வென்று ஒன்றுங்கேளாமலே சங்கதி தெரிந்துகொண்டவர்களாய்க் கோ! வென்று அழ ஆரம்பித்தார்கள். பிணத்தை நடுவீட்டில் கொண்டுபோய் போட்டதும் எல்லாரும் கோ! வென அழ, வண்டிக்காரனைப் பலரும் நடந்ததென்ன வென்று கேட்க அவனும் நடந்ததைச் சொல்லி அழுது தீர்த்து

பெரியணஞ்செட்டியார் தன் வீட்டுக்கு ஆளனுப்பித் தாக்கல் சொல்லிவிட்டு மற்ற பங்காளிகள் மாமன் மைத்துனன் முதலானவர்களுக்குந் தாக்கல் சொல்லி விட்டபின் வண்டியிலுள்ள சாமான்களை யிறக்கி வாடகையைக் கொடுத்து அவர்களை அனுப்பிவிட்டு துர்மரணமாகச்சே போலீசுக்குத் தெரியப்படாதென்று யெல்லாருக்கும் தெருதல் சொல்லித் தாமதிக்காமல் 2-மணிக்குள்ளாகவே அவசியமானவர்களை வைத்துக் கொண்டு இளையவனை லெட்சுமணன் கிரியை முதலானதுகளைச் செய்ய பிரேதத்தைத் தகனஞ்செய்து விட்டு வண்டிக்காரனை இந்தத் தாக்கல்களைப்பற்றி ஒருவரிடமுஞ் சொல்லாதிருக்கும்படி சொல்லி வைத்து விட்டு வாய்வுக்குத்தா இறந்தாரென்று பிரஸ்தாபித்து மேல் நடக்கவேண்டியவைகளை யோசனை செய்துகொண்டிருந்தார்கள்.

அந்தச் சமயம் நமது ராமநாதன் சிங்கப்பூரிலிருந்து அடுத்தவாரம் புறப்பட்டு வருகிறேனென்று எழுதிய லெட்டர் வந்தது. அதைப்பிரித்து வாசித்து எல்லோரும் பெருத்த துக்கத்துடன் மேல் நடக்கவேண்டியக் காரியங்களை ஒன்றும் நடத்தாமல் நிறுத்திவிட்டு துக்கம் விசாரிக்கவந்தவர்களுடன் இவர்களுந் துக்கப்பட்டுக்கொண் டிருந்தார்கள். பின்னிட்டு நாலு நாளைக்கெல்லாம் கப்பலேறிய நமது ராமநாதன் நாகைக்குவந்து சேர்ந்தேன் சாமான்களை யெடுத்துக்கொண்டு இரண்டு தினத்தில் நான் வருகிறேனென்று சொல்லிய தந்திவந்தது. இத்தந்திவந்ததும் அவன் தாய் தன் தம்பியாகிய பெரிய



ணஞ்செட்டியாரைக்கூட்டிக்கொண்டுவரச்செய்துதந்தியை வாசித்துப்பார்த்து ஆராத்துயரங் கொண்டவளாய் தன் தம்பியைப்பார்த்து தம்பி! ராமய்யாவை நீ போய்க்கூட்டிவரவேணுமென்று சொல்லவே அவருஞ் சரியென்றுபுறப்பட்டு தஞ்சாவூர்வந்து சேர்ந்தார். ராமநாதனும் சாமான்களை யெடுத்துக்கொண்டு றெயிலேறி தஞ்சாவூர் வந்துசேர்ந்தான். பெரியணஞ்செட்டியாரும் றெயிலுக்கு ஆளனுப்பி இருந்தார். றெயிலுக்குப் போனஆளும் ராமநாதனைக்கண்டு சாமான்களையும் வண்டியிலேற்றி ராமநாதனையுங் கூட்டிக்கொண்டு வந்தான். பெரியணஞ்செட்டியாரிருந்த ஜாகாவுக்கு ராமநாதன் வரவே பெரியணஞ்செட்டியாரும் வாங்க ; என்று மட்டுஞ்சொல்லி இருக்கச்செய்ததைத் தவிர வேறு யாதொருவிதமான வார்த்தையும் பேசாது மவுனமாய்த் துக்க முகத்தோடிருக்கவே ராமநாதனுக்குஞ் சந்தேகமுண்டாகி சங்கதியென்னவென்று விசாரிக்க அதற்கவர் ஒன்றும் பதில்சொல்லாது தாரைதாரையாகக் கண்ணீர்வடித்துக்கொண்டிருந்தார். விஷயமின்னதென்று அவனுக்கும் புலப்படவில்லை. அச்சமையம் பக்கத்திலிருந்தவர்களால் சங்கதி தெரிந்துகொண்டு அவன்பட்ட துக்கத்துக்கு ஓரளவில்லை. இவ்விதமாக இருவருந் துக்கமடைந்துகொண்டிருக்கையில் பெரியணஞ்செட்டியார் பையனை தேறுதலை சொல்லி சாப்பிடச்செய்து அன்றே புதுக்கோட்டை வந்ததும், மறுநாள் சாயந்திரம் தேவகோட்டை வந்து, வீட்டுக்கு முன்னமே ஆளனுப்பிவிட்டு அவர்களும் வந்தார்கள். ஆச்சியும் வீட்டிலிருந்த மற்ற

வர்களும் அழ ராமநாதனும் அழ அன்னேரம் ராம நாதனும் அக்குடும்பமும் அங்கு வந்திருந்தவர்களும் அடைந்த துன்பத்தையும் பட்ட பரிதாபத்தையும் பெருக்கிய கண்ணீரையும் அழுங்கூக்குரலையும் இன்ன விதந்தானென்று இதை வாசிக்கு மொவ்வொருவரும் தெரிந்துகொள்ளக்கூடியதே. ராமநாதன் ஊர் வந்த தாக்கல் தெரிந்து யெல்லாரும் வந்து இரண்டாந்தா மூந் துக்கம் விசாரித்துப்போனார்கள்.

அப்பால் மற்றவர்களின் தேறுதலையால் ராமநாதனுங் கொஞ்சங் கொஞ்சமாக மனந்தேறி செய்ய வேண்டுங் காரியங்களுக்கும் கருமம் நடத்தவேண்டியதற்கான முயற்சிகளையுஞ் செய்து ஊருக்கு ஓலையெழுதித் தோட்டிவசமனுப்பி வேண்டிய சாமான்களும் தயாரித்து கருமகிரிகைகள் நடத்த ஆரம்பித்து முதலில் செவ்வாய்க்கிழமையன்று பந்தலூன்றி தெர்ப்பைகட்டி மயானத்திற் கொண்டுபோய் தகனஞ் செய்துவிட்டு இரண்டாநாள் காடேத்து முடித்து மூன்றுநாள் வியாழக்கிழமை பந்தல்பிடுங்கி களிப்புக் களித்து யெல்லாமுடிந்ததும் உம்க-வது நாள் சவுண்டி முதலானதுஞ் செய்து கருமகிரிகைகளெல்லாம் முடிந்தபின்னுஞ் சிலநாள்வரை யார் வீட்டுக்கு வந்தாலுங்கூட யென் தகப்பனாரை நான் "பார்க்கக் குடுத்து வைக்கவில்லையே! திருடர்களிடம் அடிபட்டா சாகவேணும் அவர் யென்னைப் பெற்ற கடனுக்காகவாவது நானிருந்து பணிவிடைசெய்து மனதைத் திருப்தி பண்ணவில்லையே அவர் யிறந்ததும் நான் அருகிலிருந்து யென் கையாலுங் கருமஞ்செய்யப் பிராப்தமில்லையே!"



என்று யென்னென்னமோ சொல்லி துக்கப்பட்டுக் கொண்டிருந்தான். அவன் பட்ட துக்கமோ அளவிறந்தது. இப்படி ஒரு மாதஞ் சென்றதும் கல்யாணப் பேச்சு இலேசுலேசாக ஆராவயலார் சொல்லிவிட்டுக் கொண்டிருக்க அந்தப் பெண்ணைச் செய்துகொள்ள அவனுக்குக் கொஞ்சமேனு மிஷ்டமில்லை.

பெரியணஞ் செட்டியார்தான் யெல்லா விஷயங்களையு மேல் பார்த்து வந்தார். சில சமயங்களில் தமைக்கையாரிடத்தில் ஆருதலாக வார்த்தையாடிக் கொண்டிருக்கும்போது மெதுவாய் ராமநாதனுக்குக் கலியாணம் நடக்க வேண்டியதிருக்கிறதே அதைக் கவனியாது துக்கப்பட்டுக்கொண்டேயிருந்தால் இனிமேல் வரப்போகிற தொன்றுமில்லையே யென்று சொல்லுவார். இவ்விதமாக இவர் சொல்லிவரவும் பெண் வீட்டுக்காரர் ஆளனுப்பவும் துக்கங் கொஞ்சமாயி கலியாணத்தில் யெல்லாருக்கும் நினைவுண்டாயிற்று. நமது ராமநாதனும் தனக்குக் கலியாணஞ் செய்து கொள்ளவேணுமென்ற ஆசை கொண்டான் யென்றாலு முந்திய பெண்ணைச் செய்துகொள்ள அவனுக்குப் பூராவாக இஷ்டமில்லை.

ஏனென்றால் கலியாணம் பேசி முடியவுமே தகப்பனிறந்துவிட்டாரென்றால் அந்தப்பெண் வீட்டுக்கு வந்து விட்டாலின்ன யென்னென்ன அபாயங்கள் வருமோ! யென்ற அச்சமேதான். அவன் தாயும் அப்படித்தா னினைத்தார்கள். மற்றவர்க ளொருவருக்கும் அவ்விதமான நினைப்புண்டாகவில்லை. ஒரு நாள் பெரிய-

ணஞ்செட்டியார் மாப்பிள்ளை! முன்பார்த்த நாளெல்லாம் யென்னமோ ஈஸ்வரசம்மதத்தால் தவறி விட்டது. இனியாவது பிரயத்தனஞ் செய்யவேண்டாமா யென்று கேட்டார்.

ராமநாதன் :—செய்யத்தான் வேணும்.

பெரியணஞ் செட்டியார் :—எப்ப?

ராம :—தங்களிஷ்டம்போல்.

பெரிய :—அவுகளுக்குத் தாக்கல் சொல்லவேண்டாமா?

ராம :—எவுகளுக்கு?

பெரிய :—ஆராவயலாருக்குத்தான்.

ராம :—இனிமே அந்தப்பேச்சென்னத்துக்கு?

பெரிய :—முடிந்த பேச்சல்லவா-காரணமென்ன?

ராம :—முடிந்த பேச்சாயிருந்தாலுங் கூட பே[illegible]னவருக்கே சாவு வந்தால் பின்னீடு யென் கெ[illegible] யென்ன ஆகும் அதை நீங்கள் நினைக்கவில்லை?

பெரிய:—செட்டியாருக்கு யென்னமோ பிராம விதி முடிந்து பெறந்து விட்டா அதேகாரணமாக மற்றதையுந்தள்ளி விடலாமா?

ராம :—எம்மனதுக்கு சமாதானமாகலே.

பெரிய :—சமாதானஞ் செய்து கொள்ளத்தான் வேணும்.

ராம:—வேறு யெங்காவது பேசிமுடித்தாலென்ன?

பெரிய :—இந்தப் பேச்சு செட்டியாரிருந்து பேசினது. அவர் மனசுக்கு சமாதானமாய் முடிந்த



பேச்சு. நாம் அதைத்தள்ளிவிடப்படாது. அதுவும் பெரிய குடும்பம். முன் பின் தோதா இருக்கும். யெல்ல விஷயங்களையும்யோசித்து செய்யவேண்டியது அவசிய. அவுகளும் இங்கைதானே செய்ய வேணுமென்று இனம் ஆளனுப்பிக்கொண்டிருக்கிறார்கள்.

ராம : ங்களே இவ்வளவு சொல்லும்போது சிறுவனாகிய நானென்ன சொல்லப்போறேன் தாயாரை கேட்டுக்கிணு ஒங்க நோக்கம்போலே செய்ங்க.

பெரிய :—சரி யென் றெழுந்துக்கொண்டு தன் தமைக்கையாரிடம் போய் ராமநாதனிடம் பேசிக்கொண்டிருந்த விஷயங்களை யெல்லாஞ் சொல்லி அவர்களின் நோக்கத்தைக் கேட்டார்.

வள்ளியம்மை ஆச்சி :—தம்பி! ஒன் நோக்கம் போலே செய் நானென்ன சொல்லப்போறேன்.

பெரிய :—நீங்களும் ராமையாகிட்டச்சொல்லி கூடிய சீக்கிரம் ஆனிமாதத்துக்குள்ளே கலியாண முடிச்சுப்பிட்டா தேவலை யென்று பேசிக்கொண்டிருக்கும்போதே ராமநாதனும் வந்து சேர்ந்தான். அவனிடம் தாங்கள் பேசிக்கொண்ட தாக்கலைச் சொன்னார்கள். அதற்கு ராமநாதனும் மற்றதாக்கல்களெல்லாம் ஒத்துக்கொண்டாலுங்கூட கோவிலிலாவது கேட்டால்தான் தன்மனதுக்கு சமாதானமென்று சொன்னான். அவர்களும் பிராப்தமிருந்தால் முடிகிறது இல்லாவிட்டால் நாம்தா னென்ன செய்யலாமென்று பேசிக்கொண்டவர்களாய் அன்று சாயரக்ஷையே பெருமாள் கோவிலுக்குப்போய் உத்தரவு கேட்டார்

கள். இவர்கள் நினைத்த விடத்தில் தெக்ஷிணை யாரிசத்தில் நல்ல உத்தரவு சொல்லவே சந்தோஷப்பட்டவர்களாய் விடுவந்து சேர்ந்தார்கள். அடுத்த நாள் காலையில் ஆராவயலிலிருந்தும் ஆள்வந்தது. வந்த ஆளிடம் அவர்களை வரச்சொல்லி பெரியன செட்டியார் லெட்டரெழுதிக் கொடுத்து விட்ட வர்களும் மறுநாள் வந்து சேர்ந்தார்கள். எல்லாருமாக செட்டியா ரிருந்து கல்யாணம் நடத்தாததைப் பற்றிக் கொஞ்சம் வருத்தப்பட்டவர்களாய் அதன்மேல் வந்த விஷயங்களைப் பேசி முடிக்க யெத்தனித்து அதற்கான விஷயங்களை யெல்லாம் பேசி விபவ(ஹு) வைகாசி மீ ௴ வெள்ளிக்கிழமை முகூர்த்தம் பார்த்து நிச்சயஞ் செய்து கொண்டு முன் ஆகியிருந்த வேலைகள் தவிர பாக்கி வேலைகளைச் செய்ய ஆரம்பித்து யெங்கெங்கே ஆளனுப்பவேண்டுமோ யெங்கெங்கு லெட்டரெழுத வேண்டுமோ அங்கங்கு எழுதி வேலைகள் நடக்கும்படி செய்து கல்யாண வேலைகளெல்லாம் துரிதமா நடந்து வந்தது. தட்டானிடங் கொடுத்த நகையும் பூராவாய் வந்துவிட்டது. மாப்பிள்ளை வீடு செய்துபோடுவதாய் ஒப்புக்கொண்ட சில்லரை நகைகளாகிய காப்பு-கொலுசு-பச்சைவளவி அட்டிகை - பதக்க முதலாகிய நகைகளெல்லாம் பெண் வீட்டாரே போடுவதா யொப்புக்கொண்டு அந்த நகைகளெல்லாம் அவர்களே தயாராகச் செய்து வைத்திருந்தார்கள். சாமான்களெல்லாம் ஒவ்வொரு ஊரிலுமிருந்து வந்துகொண் டிருந்தது. மாப்பிள்ளை வீட்டார் பெரியமேளம், திருமருதூர்



முத்துச்சாமி, மன்னார்குடி பெரிய பக்கிரி, சின்னமேளம், திண்டுக்கல் ஜானகி திருவாரூர் கமலம், வீணை ராமண்ணா, புல்லாங்குழல் கும்பகோணம் முத்து கிருஷ்ண சாஸ்திரிகள், காலக்ஷேபம் பட்டி கிருஷ்ணய்யர், இன்னுந் தங்களுக்கு வேண்டிய வித்வ ஜனர்களுக்கும் வரும்படி தாக்கல் தெரிவித்து விட்டார்கள். பெண்வீட்டார் கொட்டகை சிங்காரிக்க ஸ்ரீரங்கம் ஸ்ரீநிவாஸனை வரவழைத்தார்கள். இவ்விதமாக கல்யாண நாள் சமீபிக்க சமீபிக்க வேலைகளுந் துரிதமாகவே நடந்து வந்தது.

## ஒன்பதாவது அத்தியாயம்.

மேலே நாம் கூறியபடி வேலைகள் நடந்துவர பெண் வீட்டில் ஓர் நல்ல நாளில் முகூர்த்தக்கால் நட்டார்கள். மாப்பிள்ளை வீட்டிலும் அது போல் நடந்தது. ஆராவயலில் பெண் வீட்டு உள் முற்றத்தில் பக்காவாக கல்யாணக் கொட்டகை போட்டெக்காலமு முள்ளது. அது நீங்கலாக வெளி முற்றத்தில் 64-அடி நீளமும் 30-அடி அகலமும் உள்ள கொட்டகை ஒன்று போடப்பட்டது. அதுவுஞ் சாதாரணமான கொட்டகை யல்ல. ஒவ்வொரு தென்னை மரங்களாக நட்டு ஒவ்வொரு கால்களுக்குஞ் சாய்ந்து போகாது முட்டுக் கட்டித் தேக்கு மரத்தால் கூட்டக்கைகளைவைத்து வேங்கை மரத்தால் குறுக்குச் சட்டம் போட்டு மூங்

இல் பிளாச்சுவரிந்து மட்டை மட்டும் தெரியும்படி இரட்டைக்கோல் கூரை வேய்ந்து இதன் மேல் வைக்கோல்போட்டு கீழ் வசத்திற் பொரசம் பலகை தைத்து வெண் பட்டு ஒட்டி மகமற் பட்டால் தொங்கல்கள் கட்டி தங்கரேக்கு வெள்ளிரேக்குத் தகடுகளாற் சித்தரித்துச் செய்யப்பட்ட வேலைத்திறமான பூக்களை ஒட்டி மாலைகள் கட்டி ஒவ்வொருகால்களிலும் வால் சேட்டுகளும் கால்கள் தெரியாது வில் வெட்டு தைத்துப்போட்டு நான்கு பக்கங்களிலும் கிருஷ்ண லீலைப்படங்களும் சிங்காரமாகிய தஞ்சாவூர் புதுச்சேரிப்படங்களும் கட்டியும் ரவிவர்மாப் படங்களை ஒட்டியும் வெகு உன்னதமாகச் சிங்காரித்திருந்தார்கள். சுமார் இக்கொட்டகை 1000 ரூபாய் கண்டிராக்ட்டுச் செய்திருப்பார்களென்று நினைக்கிறோம்.

மாப்பிள்ளை வீடு வந்திறங்கும் வீட்டிலுஞ் சுமாரான சிங்காரக்கொட்டகை யொன்று போட்டிருந்தது. குளத்தங்கரையிற் பிராமண போஜனக்கொட்டகையும் போட்டார்கள். தேவகோட்டையில் மாப்பிள்ளை வீட்டிலும் சுமாரான சிங்காரக் கொட்டகை தான் போட்டிருந்தது. வேலைகளெல்லாம் ஆடங்கமின்றி நடந்துவர முகூர்த்தநாள் நெருங்கிற்று. தேவகோட்டையார் சொல்லி ஆக்கி உண்ணல் (கல்யாணஞ் சொல்லி) ஆரம்பித்து விட அன்று நமது இராமநாதன் பெரியணஞ் செட்டியார் வீட்டில் சாப்பாடு செய்து கொண்டு தலையில் வேஷ்டி கட்டி வீட்டிற்குள் அவர்கள் போட்டிருந்த தடுக்கில் கிழக்கு முகமாகவிருந்து அவர்கள் சட்டில் வைத்திருந்த



சுமார் பதிருபலப் பாக்கும் மூன்று பல வெத்திலைக்குமேல் ௰௧ ரூபாய் வைத்து வைகாசிமீ ௰௬ உ வெள்ளிக்கிழமை கலியாணம் வாங்க! வென்று சொல்லி சொஞ்சம் வெற்றிலைபாக்கும் ரூபாயையும் வைத்துவிட்டு மற்ற வெற்றிலை பாக்கை யெடுத்துக் கொண்டு கால், கை, தலை தட்டாது சாவதானமாக வெளியில் வந்து வீடுபோய்ச் சேர்ந்து மற்ற பந்துக்களுக்கும் ஊர் முறைக்கிச் சொல்ல வேண்டியதற்குத் தன் தம்பியைப் போய்ச் சொல்லும்படி செய்தான். பெண் வீட்டிலு மவ்விதமே நடந்து மாப்பிள்ளை வீடு பெண் வீட்டிற்கும் பெண் வீடு மாப்பிள்ளை வீட்டிற்குங் கூட கல்யாணஞ் சொல்லிக்கொண்டார்கள்.

அதன்மே லவரவரு மவரவர் கோவிலில் மாலைக்குப் பாக்கு வைத்து வந்தார்கள்.

அப்பால் சுவாமிக்குப் படைக்க (கூடி ஆக்கி உண்ண) விட ஆரம்பித்தார்கள். மாப்பிள்ளை வீட்டில் சுப்பிரமணியஞ் செட்டியார் இறந்து விட்டதால் நமது இராமநாதனுக்கு அளவற்ற துக்கமுண்டாகி இருந்தாலுங் கூட கல்யாண காலத்துக்கு அவரில்லாதுபோய் விட்டாரேயென்ற துக்கத்தைத்தவிர அதனாலொன்றுந் தடைபடவில்லை. வேலைகளுந் துரிதமாகவே நடந்துவந்தது. ஆச்சி துக்கத்தை வெளிக்காட்டாது வேலைகளை நடத்திவந்தாலுங்கூட வெளியில் வருவதில்லை. வீட்டுக்குள் நடக்கவேண்டியதுகளை நடத்திவருவார்கள். ஊரில் கூப்பிடவேண்டியவர்களை இராமநாதன் தங்கை பெண்பிள்ளைகளையும் இளைய சகோதரனாகிய லெட்சுமணன் புருஷர்களையும் போய்க் கூட்டிக்கொண்டுவக்

தார்கள். படைக்கச் சமையலும் நடந்தது. தாயாதிகள் (பங்காளிகள்) மற்றும் நெருங்கிய சொந்தக்காரர்களும் அன்றே வந்து சேர்ந்தார்கள். சூரியனும் அஸ்தமன கிரியை அடைந்தான். வீடெங்கும் மெழுகிக் கோலமிட்டிருந்தது. நமது இராமநாதனும் அன்று காலில்மிஞ்சி, காதில் கடுக்கன், கழுத்தில் கெவுரிசங்கம், கையில் வைரமோதிரமும் போட்டுத் தலையிற் பட்டுலேஞ்சு கட்டிக்கொண்டான். வரவேண்டியவர்களெல்லாம் வந்து சேர்ந்தார்கள். அதன்மேல் பெண்பிள்ளைகளால் கும்பாக்களிலும் வட்டிகளிலுமாக ஏழுபாத்திரங்களில் நடுவீட்டில் வட்டிக்கப்பட்டிருந்தது. தாயாதிக்காரர்களாகிய ஸ்திரீ புருஷர்கள் ஒவ்வொருவராக உள்வீட்டில்வந்து தூபக்காலில் சாம்பிராணி போட்டு நைவேத்தியஞ்செய்து நமஸ்கரித்து முடிந்தபின் தாயாதிகளும், மாப்பிள்ளையுமாக, உட்கார்ந்து, படைப்புச்சோற்றைச் சாப்பிட வெளியில் மற்றெல்லாருக்கும் பந்தி வைத்து அன்று ராத்திரி, சாப்பாடு முடிந்தது.

ஆராவயலில், பெண் வீட்டிலும், பெண்ணைச் சிங்காரித்துவைத்து இவ்விதமே படைப்பு நடந்தது.

மற்றுநாள் மிடுவ காலையில் சமையலாகி மத்தியான சாப்பாடு நடந்தது. அதன்மேல் ஆராவயலுக்கு (பெண்ணிருக்கு மூருக்கு) மாப்பிள்ளை வீடு போக வேண்டியதாகச்செ தாய் மாமனால் நடுவீட்டில் கிழக்கு முகமாக விருந்துகொண்டு மாப்பிள்ளையாகிய இராமநாதனுக்கு மகரிகை கெவுரிசங்காம், மதாணிப்பதக்கம், காப்பு, கொலுசு, கடுக்கன் முதலிய நகைகளும்போட்டு தலையிற் கெண்டைப்பட்டுக் கட்டி ஜரிகை கறைகள்



தெரியும்படி வரிசை வரிசையாக யெடுத்துவிட்டு ஜிகினாத்தகடு வைத்துக்கட்டிய மல்லிகை பிச்சி முதலிய புஷ்ப ஹாரங்கள் போட்டார்கள். இடுப்பில் சுதேசிய (நமது தேசத்தில் நெய்த) வஸ்திரமாகிய கெண்டை வேஷ்டி கட்டி கோயம்புத்தூர் சால்வை ஒன்றை அங்கவஸ்திரமாகத் தரித்து சகலாத்தினும் றைய்த்த வட்டுவப்பையும் கெண்டைக் காசிப் பட்டும் ஒன்றாய்க் கட்டித் தோளிற் போட்டுக்கொண்டு மாப்பிள்ளையும், மாமனும் வெளியில்வந்து முற்றத்தில் நிற்க ஆலாத்தி யெடுத்துமுடிந்தது.

அப்பால் மேளவாத்தியம், பாண்டுவாத்தியம் வாசிப்பவர்கள் முன் செல்ல அதன்பின் இரண்டு சிறு குழந்தைகள் இரட்டைச்சங்கு ஊதிவர மாப்பிள்ளையும் மாமனும் மற்றும் 200 ஜனங்கள் பின்தொடர்ந்துவர ஊரைக்கடந்து ஓர் மரத்தடியில்வந்து சேர்ந்தார்கள்.

இவர்கள் சவாரிக்காக 25 வண்டிவரை வில் வண்டிகளும் பெட்டி வண்டிகளும் திருப்பத்தூர் அரை வண்டிகளுமாகவும் கழுத்தில் ஊமத்தங்காய் மணியும் கொம்பிற் கொப்பியும் தலையிற் கம்பளிக்கயிறும் தார்ப்பிடிகயிறும் போட்ட காக்கிநாடா, புலிக்குளம், திருவண்ணாமலை, தோகைமலை மாடுகள் பூட்டப்பட்டு நின்றது.

மாப்பிள்ளையை ஊர்கடந்து கொண்டுவந்து விட்டவுடன் வாத்தியக்காரர் இரண்டு மூன்று வண்டிகளிலேறிக்கொண்டு ஆராவயல் வந்து சேர்ந்தார்கள்.

அவர்கள் வந்து சேர்ந்ததும் பெண் வீட்டார் மாப்பிள்ளை வீடு வந்திறங்கும் வீட்டில் பெண்ணுக்கு

வைக்குஞ் சாமான்களைக் கொண்டுபோய்வைக்க ஆரம்பித்தார்கள்.

அவ்வீட்டில் எங்கு பார்த்தாலுங் கோலமிடப்பட்டிருந்தது. சுமார் 200 ஆட்கள்வந்து சாமான்களையெடுத்துக்கொண்டுவர வாத்தியக்காரர் முன்னும் சாமான் யெடுத்துவருபவர்கள் பின்னுமாகச்சென்றார்கள். சாமான்களையெல்லா மெழுதுவ தசாத்தியமென்று அங்கூட நம்மாலியன்றவரை யெழுதலானோம்.

ஏழு மாங்கல்யப் பெண்கள் நிறைகுட மெடுத்துவர, அதன்பின் ஒரே வரிசையாக ஒவ்வொரு சாமான் ஒவ்வொரு பாத்திரங்களிலாக உப்பு, மஞ்சள், மிளகாய், மல்லி, கடுகு, ஜீரகம், வெந்தையம், மிளகு, வெள்ளைப் பூண்டு, (வெங்காயம்), இருள்ளி, புளி, உளுந்தம்பருப்பு, பச்சரிசி, கோதுமை, வெல்லம், ஜீனிசர்க்கரை, கருப்பட்டி, கற்கண்டு, தேன், முந்திரிப்பழம், பேரிச்சம்பழம், வாதம்பருப்பு, சாரம்பருப்பு, பாசிப்பருப்பு, கடலைப்பருப்பு, மொச்சைப்பருப்பு, துவரை பாசிப்பயறு, தட்டப்பயறு, வெள்ளைமொச்சை, கருப்புமொச்சை, பீனிசு, தேங்காய், பழம், பட்டுமெத்தை (2), ஜோடு தலையணை (6), பர்மாப்பாய் மட்டம் (21), நயம் (16), அச்சக்கரைப்பாய் (25), ரஜாய் மெத்தை (7), பிறங்கு வர்ணப்பாய் (7), பலதினுசுகளில் தைக்கப்பட்ட தலையணை (95), இரத்தினக்கம்பளம் சிறிது பெரியது (5), சதுர் ஜமுக்காளம் சிறிது பெரிது (3), வெள்ளிபால் செம்பு, குடம், கும்பா, முக்காலி, லோட்டா, சட்டி, கரண்டிகளும், அவ்வைந்து அடங்கிய கூட்டங்களில்



வெண்கலம் பித்தளை தாம்பிர முதலிய பாத்திரங்களில் கூட்டம் (51), மங்கு கிளாஸ் வகையறுவில் கூட்டம் (51), மரத்தட்டு கடசல் சாமான் முதலியதுகளில் கூட்டம் (51), ஓலைப்பெட்டி கொட்டான் தட்டு பிளாதடுக்கு பாய் முதலியதுகளில் (51), கூட்டமும் உரி மூன்று (3), செம்பு (9), அதில் ரூபாய் (51), நிறைநாழி, கெடிகாரம், யெழுத்தாணி, சம்புடம், வீபூதிப் பை, பாக்குக்குரடு, கம்பு, வேஷ்டி, புத்தகம், சந்தனக் கல், ஜோடு கட்டை, சீப்பு, சிறுக்கருக்கி, சருகொலி, கண்ணாடி, ஜோகி, பல்லாங்குழி, கொணாவாளம்பிள்ளை, சொட்டாங்கிக்காய், சேலைதினுசு (32) ல் (64), சம்பங்கித்தைலம், சிறுசங்கு, பாசி, பட்டுக்கயிறு, பவளம், கிலுகிலுப்பை, சிறு ஜோடு, மூக்குக்கண்ணாடி, மெழுகுவத்தி, வால்லேட்டு, கேட்டு, விளக்கு, குத்துவிளக்கு, சரவிளக்கு, பவர்லயிட்டு, தைத்திவெட்டி, நல்லெண்ணெய், விளக்கெண்ணெய், கடலெண்ணெய், தேங்காயெண்ணெய், மண்ணெண்ணெய், பலநெய், பசுநெய், முறுக்கு, தேன்குழல், மனகோலமா, அதிரசம், அப்பளம், ஊறுகாய் வகைகளில், மாங்காய், இலுமிச்சங்காய், நெல்லிக்காய், ஜாதிக்காய், கடுக்காய், மாவடுஞ்சி, பச்சைமிளகாய், கிளாக்காய், கொய்யாக்காய், மாதளங்காய், நாருத்தங்காய், புளியம்பிஞ்சு வாங்கித்தான் முதலிய ஊறுகாய்களும், மாவத்தல், சுண்டைவத்தல், தக்காளிவத்தல், அவளைவத்தல், மிளகாய் வத்தல், வெண்டிவத்தல், அவரைவத்தல், மிதுக்கவத்தல், மிதிபாகைவத்தல், இவ்வத்தல் வகைகளும், சத்துமா, பொறிமா, கோதும்பைமா, மிளகு பொடி, கறிவடகம், அரைத்த

மஞ்சள், சந்தனம், பன்னீர், ஊதுவத்தி, மட்டிப்பால், கூடன் சாம்பிராணி, பன்னீர்செம்பு, சந்தனப்பேலா, தட்டம், பிச்சாங்குழல், பட்டணம் பாக்கு, களிப்பாக்கு, வெட்டுப்பாக்கு, சீவல்பாக்கு, கடசல்பாக்கு, சாயப்பாக்கு, வாசனைப்பாக்கு, தங்கரேக்கு, வெள்ளிரேக்கு, ஏலம், கிராம்பு, ஜாதிக்காய், பத்திரி, வால்மிளகு, வெற்றிலைடப்பா, சுண்ணாம்புடப்பி, பாக்குவெட்டி வெற்றிலைப்பெட்டி, மொனைப்பாறி, மொனை கட்டிய முடிப்பு, சங்கு குத்துவிளக்கில் வைக்கப்பருத்திக்கொட்டை முடிப்பு, பந்திப்பாய், பழையதடுக்கு, பழைய வேஷ்டி, பச்சை நெல்லுமி, பசுவஞ்சாணம், தூபக்கால், அம்மி, திருகை, அரிவாமணை, ஆட்டுரல், உரல், உலக்கை, அளவுபடி, திராசுபடிக்கல், விரைக்கோட்டை, கோலக்கூட்டு, செங்கல் சுண்ணாம்புக்கலயம், நெருப்புப்பெட்டி, சொளகு, வாருவிரகு, கோல் சாணச்சட்டி, காப்பு மரப்பெட்டி, சரப்பலகை, மரப்பெட்டி, கடுதாசி, ஒட்டுத்தாள் பேனா மைக்கூடு, ரவுண் மேஜை, குரிச்சி, நாற்காலி, கட்டில், இன்னுஞ் சில சாமான்களும் மேளவாத்தியத்தோடு இரட்டைச்சங்கு, ஊதிக்கொண்டு சாமானைக் கொண்டுவந்து அவ்விடும் கொள்ளாதுவைத்து ஷை சாமான் விபர மெழுதிய ஜாப்தாவும் கொண்டு வைத்தார்கள், சங்கு எழுத்தாணி சம்படம் சீப்பு கிணுக்கருகி சிறுகொலி பழைய வேஷ்டி இதற்குள் முன்னும் பின்னுமாக மூன்றுகூறி வெள்ளிச் செலவி கூ அதில் கூ கூடிக.

தேவகோட்டையிலிருந்து வாழயிலை, காய், பழம், காய்கறி, பாய், சதுர்சமக்களம், ரெத்தினகம்பளி



மெத்தை, பாய், தலையணைமுதலிய அவசியமான சாமான் யேத்திய வண்டிகளும் வந்து சேர்ந்தது, அதுகளையும் விவரப்படி உக்கிராணக்காரன் ஒப்புக்கொண்டான். எல்லா சாமான்களும் வந்து சேர்ந்ததும் மாப்பிள்ளையும் அவர்களைச்சேர்ந்த ஜனங்களும் வண்டிகளில் வந்திறங்கவே அஸ்தமித்துவிட்டது. வந்தவர்களும் ஊர்மத்தியில் (நடு ஊரில் வந்துசதிர்சமக்காளமுதலானது விரித்து யெல்லா ஆண் பெண்களும் உட்கார்ந்தார்கள். பிள்ளையும் சிங்காரித்துக்கொண்டு, மேற்குமுகமாக உட்கார்ந்தார். உடனே, தீவட்டிகளேற்றப்பட்டது. மாப்பிள்ளையைக் கூட்டிக்கொண்டு போக பெண்வீட்டாரும் வருகிறார்கள்.* அவர்களில் பெண்ணின் தகப்பனார் தலையில் பட்டுக்கட்டிக்கொண்டு ஒருவெள்ளித்தாம்பாளத்தில் மஞ்சள்தடவினதேங்காய் இரண்டும் ஒருசோடி கெண்டைவேஷ்டியும் விபூதிக்கிண்ணமும் கையாலெடுத்துக்கொண்டுவர மற்றவர்களும் தலையில் வேஷ்டி கட்டிக்கொண்டுவர பெண்களும் பின்பற்றி வந்தார்கள். இவர்களுக்கெல்லர்முன் மேளகாரன் தீவட்டிக்காரன் சங்கு ஊதுகிறபையன்களும்வரமற்றவர்களும் பின்னாகவந்தவர்களும் இருந்தவர்களை யெல்லாரும்! வாங்கயென்று கேட்கவும் வந்திருந்தவர்கள் ஆமா யென்று சொல்லவும் இதுவே பெருஞ்சப்தமாகி உடனே ஒடுங்கிவிட்டது. அப்பால் பெண்வீட்டாருக்கெல்லாம் சந்தனம் கொடுத்து பன்னீர்தெளித்து தாம்பூல மருந்தச்செய்து ஒவ்வொரு புள்ளிக்கு பவ்வத்துப் பாக்கும் கொஞ்சம் வெத்திலையும்மாக கொடுத்துமுடிந்ததும் யெல்லாருமாகயெழுந்து மாப்பிள்ளை வீடாகிய

இறங்கக்கூடிய இடம்போய்ச் சேர்ந்தார்கள். போகும்
போது 8 தீவட்டி 8 மேஷட்டு முன்னும்பின்னுமாகவர
வெகு ஆடம்பரத்தோடு வீடுபோய்ச்சேர்ந்தார்கள்.
அங்குபோய்ச் சேர்ந்ததும் அவ்வீட்டு வாசலிலிட்
பட்ட கோலத்தில் மாப்பிள்ளையை நிறுத்தி ஆலாத்தி
யெடுத்து குத்துவிளக்கை வலமாக வீட்டுள்ளழைத்துப்
போய் அங்கு விரித்து வைத்திருந்த மெத்தையின்மேலி
ருக்கச்செய்து தாம்பூலந்தரித்துக்கொண்டபின் எல்
லாரும் பெண்வீட்டுக்குச்சாப்பிட அழைக்கவே அங்கு
போய் போஜனமுதலானதுஞ்செய்து தாம்பூலந்தரித்து
திரும்பினது மாப்பிள்ளையும் அவன் தாய் முதலிய
வெளியில் வரப்படாத சிலருமாக சாப்பிட்டார்கள்.
அன்றிரவுங்கழிந்தது. மெடைக் காலை 8 மணிக்கு பெண்
வீட்டார் சில பெண்களும் புருஷர்களும் மாப்பிள்ளை
அழைய, வருவதென்ற வழக்கப்பிரகாரம் பெண்ணின்
தகப்பனார் ஒரு மரவையில் தேங்காய் 2-ம் சென்டை
வேஷ்டி ஜோடு ஒன்றும் வைத்து பட்டாலதை மூடி
கையில்கொண்டுவர மற்றவர்கள் முன்னும், பின்னு
மாகவர இவர்களுக்குமுன் சங்கூதுகிற பையனும்
மேளக்காரனுமாக வர மாப்பிள்ளையும் சிங்காரித்துக்
கொண்டு நடுவீட்டிலிருக்க கொண்டுவந்ததை யாவும்
நடுவீட்டில்வைத்து யெல்லாரும் தாம்பூலம் வாங்கிக்
கொண்டு திரும்பினார்கள். அப்பால் மாப்பிள்ளை வீட்
டார் பெண்வீட்டுக்கு பெண்ணழைப்ப (நாள்குழிக்கப்)
போவதென்கிற வழக்கப்படி ஆண் பெண்களும் (மாப்
பிள்ளையின் தாயார் தகப்பனுருக்காக அவன் தகப்பனு
ரின் சிறியதகப்பனார் மகன் சிதம்பரஞ் செட்டியாரும்



அவர் சம்சாரமுந்தான் தாய் தகப்பனுக வெல்லாமுன்
னின்று நடத்திவந்தார்கள்) அவர்களுமாக மேள தா
ளத்தோடும் சங்குநாதத்தோடும் பெண்வீடுவந்து நடு
வீட்டிலும் முத்தத்திலுமாக இருந்தார்கள். அவர்களுக்
குந்தாம்பூல முதலானதும் கொடுக்கப்பட்டது. அவர்
களும் வீடு திரும்பினார்கள். அப்பால் இரண்டுவீட்டு
முத்தத்திலும் முன் முகூர்த்தக்கால் நட்டிருக்கும்
காலின் அருகில் குளிகெல்லி கல்லாரளிக்கி முளைக்கம்
பும் பாலைக்கம்பும் நட்டு அதைச்சுற்றி எண்ணைப்
போட்டு மாப்பிள்ளை வீட்டில் அதற்கெதிரில் சுமார்
அரைக்கெஜதூரம் மேல்புறமாக அரைக்கஜம் தன்னைச்
சதுரமாகமணைபோட்டார்கள் பெண்வீட்டில் ஒன்றே
கால் நீளமும் அரைகெஜ அகலமுமாக மணைபோட்டு
நன்றாய்ப்பூசி மெழுகுகோலமிடப்பட்டது. அதன்மேல்
மாப்பிள்ளை தன்னீராடுவதற்கென்று பெண்வீட்டிலிரு
ந்து எண்ணெயும் அரப்பும் கொண்டுவந்தார்கள்.
அவர்கள் கொண்டுவந்ததும் பெண்வீட்டு ஆள் ஒரு
வன் கூட்டிக்கொண்டுமாப்பிள்ளையும் வட்டுவப்பை
யை தோளில் போட்டுக்கொண்டும் வேஷ்டி யெண்ணை
அரப்பு முதலானதுயெடுத்துக்கொண்டும்வர நாவிதன்
வந்திருக்கும் குளத்தங்கரைக்குப்போய் தலைமட்டுஞ்
செய்துகொள்ளாமல்முகக்ஷவர முதலானதுஞ் செய்து
கொண்டு யெண்ணை அரப்புத்தேய்த்து ஸ்நானஞ்செய்து
கட்டியிருந்த வேஷ்டியையும் மீதமிருந்த யெண்ணை
அரப்பு முதலானதுகளையும் க்ஷவரகனிடம் கொடுத்து
விட்டு வீடுவந்து சேர்ந்தபின் அன்று பகல் மாப்
பிள்ளை வீட்டில் நடிக வகை கரிகளோடு சாப்பாடு

நடந்தது. பெண்வீட்டில் பூரங்களிப்பதென்று கிரமப்படி பஞ்சாங்க அய்யர் (குருக்கள்) ஒருவர் வந்து வீட்டின் ஒரு பக்கத்தில் கோலமிட்ட இடத்தில் தடுக்குப்போட்டு உட்கார்ந்தார். பெண்ணை தலைவாரிக்கட்டி சடை சிங்காரம் வைத்துப் பின்னி புஷ்பஞ்சுற்றி நெற்றியில் சந்திரப்பிறை சூரியப்பிறை நெற்றிக்கட்டு முதலியனவும் காதில் ஜவுடியும் மேற்காதில் கொப்பும் கழுத்தில் ஒக்கட்டுமணிபாசி பவன் மாலை அட்டிகை பதக்கமும் முன்கையில் காப்புகைக்கட்டு கொலுசு பட்டணக்காப்பும் பாதசரம் தண்டை கொலுசும் இடையில் புட்டாப்போட்ட 12 - முழமுள்ள காசிப் பீதாம்பரமுங் கட்டி சிங்காரித்து கிழக்குமுகமாக உட்காரவைத்து பூரங்களிப்பவர் எதிரில் இருந்துகொண்டு நிறைநாழியில் வெற்றிலையை காம்புமேல் நோக்கியதாய் ஒரு கதிரில் குத்தி அதை நாழியில் காட்டிப் பெண் கையில் கொடுத்து வேப்பிலை கொண்டுவந்து என்னென்னமோ மந்திரங்கள்சொல்லி பூரங்கழித்து முடிந்ததும் பழம் தேங்காய் பச்சரிசி நெல் வெற்றிலை பாக்கு கால் ரூபாய் தக்ஷிணை இதுகளெல்லாம் அவருக்குக் கொடுத்தார்கள். அய்யரும் ஆசிர்வாதம் செய்து சந்தோஷமாகப் பெற்றுக்கொண்டு வீடுபோய்ச்சேர்ந்தார்.

மாப்பிள்ளை வீட்டார் பூரங்களிக்கவந்து வெற்றிலை பாக்கு வாங்கிக்கொண்டுபோனபின் பெண் வீட்டிலிருந்துவே வெடுக்கிற சாமான்கள் தயாரிக்கப்பட்டு 70 எழுபதுபேர்வரை ஒரே வரிசையாய்த் தூக்கிக்கொண்டுபோக ஆரம்பித்தார்கள். அரிசி 31 கடகம் ஒவ்



வொரு கடகங்களிலும் மூ படி அரிசி, 7 கத்தரிக்காய் 3 முட்டை ஒரு தேங்காய் வைத்திருந்தது. சர்க்கரை ஜீனி வெல்லம் கருப்பட்டி கற்கண்டு வாழைப்பழம் எலுமிச்சம்பழம் மாதளம்பழம் ஆரஞ்சிப்பழம் வங்கிஸ்தாம்பழம் மாம்பழம் பலாப்பழம் முதலாகிய அநேக விதமான பழங்களும் நெய் யிலை வெள்ளிப்பாத்திரம் கெண்டைப்பட்டுப்புடவைகள் ஒரு தாம்பாளத்தில் 501 ரூபாய் கிடாய் கோழி முதலாகிய அநேக சாமான்களை எடுத்துக்கொண்டு புறப்பட்டு மாப்பிள்ளை வீடுவந்து சேர்ந்தார்கள். வந்ததும் மாப்பிள்ளை வீட்டார் வெவுகளை யிறக்கி வந்தவர்களுக்கெல்லாம் பலகாரம் பரிமாறி சர்பத்து காப்பி முதலானதுங்கொடுத்துத் தாம்பூலஞ் சந்தனம் புஷ்பச்செண்டு லவுண்டர்ப்பெட்டி கைக்குட்டை இதுகளும் ஒவ்வொருவருக்குங்கொடுத்து தூக்கிவந்த ஆட்களுக்கும் சந்தன தாம்பூலங்கொடுத்து அனுப்பினபின் அவர்களும் வீடுபோய்ச் சேர்ந்தார்கள். அப்பால் கோவிலிலிருந்து கொண்டுவந்த இரண்டு மாலைகளும் பஞ்சாங்கய்யர் வந்து மாப்பிள்ளை வீட்டில் பகவணைஞ்செய்ய ஆரம்பித்தார்கள். [அந்தச்சமையத்தில் நகை செய்த தட்டானும் கொண்டுவந்துகொடுத்தான்.] அவனுக்கு அரிசி காய் கறி முதலானதும் கொடுத்து அவனையனுப்பிவிட்டு [பகவணைஞ்செய்ய ஆரம்பித்து மாப்பிள்ளையை சிங்காரித்து மணவரையில் கொண்டுவந்து கிழக்குமுகமாக உட்காரவைத்தார்கள். அப்போது நகைகள்போட்டிருந்தோடு கோவில்மாலையும் போட்டிருந்தது. மாப்பிள்ளையை மணவரையில் வந்திருக்க

4 தேங்காய் 16 பழம் பத்துப்பல வெற்றிலை 4 பலப் பாக்கு சந்தனம் புஷ்பம் அரைத்தமஞ்சள் பச்சை நெல்லுமி 2-12-0 ரூபாய் வாங்கிக்கொண்டு இரண்டு செம்பில் தண்ணீர், மாவிலை, தெர்ப்பை, சமித்து வகையரா-5-இலைகள், இரண்டுபடி பச்சரிசி, அரைக்கால் படி பசுவின்நெய் முளைப்பாரி, முளைகட்டிய முடிப்பு, முக்காலி, அருவர்சட்டி, தேங்காய் உடைக்கிற கல், தூபக்காலில் நெருப்பு, சாம்பிராணி, சூடன், கோமயம், பசுவின்பால் முதலிய வேண்டுஞ் சாமான்களெல்லாம் கொண்டுவந்து வைக்கப்பட்டது. ஒரு புஷ்பஹாரத்தை முகூர்த்தக்காலில் கட்டித் தொங்கவிட்டிருந்தது. அப்பால் மாமனால் மாப்பிள்ளைக்கு மஞ்சள்காப்புக்கட்டப்படவே நடக்கவேண்டிய சடங்குகளெல்லா முடிந்தபின் முளைகட்டியதை முளைப்பாரியில் கொஞ்சங்கொஞ்சமாய் மூன்று தரமள்ளிவைத்து 5-பேர் மணமிட்டார்கள். பெண்வீட்டாரும் வந்து மணமிட்டபின் செய்துவைத்திருக்கும் தாலியை மஞ்சள்பட்டுக் கயிற்றில் கோர்த்து பஞ்சாங்கய்யரிடம் கொண்டுவந்து தாம்பாளத்தோடுகொடுக்க அவரும் வாங்கி தூபதீபங்களெல்லாங் கொடுப்பதை மாப்பிள்ளைகையாலேயே நடத்தி மாப்பிள்ளையிடம் அதையுங் காளாஞ்சியுங் கொடுத்து வீட்டுக்குள் கொண்டுபோய் வைக்கும்படி செய்து பஞ்சாங்கய்யர் பெண்வீட்டுக்குப்போய் விட்டார். மாப்பிள்ளையும் வீட்டுக்குள் சதாகாலமும் எரிந்துகொண்டிருக்கும் தூண்டாமணி விளக்கின் முன் மாங்கல்யத்தை கொண்டுபோய்வைத்து தடுக்கிலுட்கார்ந்து எழுந்துவந்தான். மாங்கல்யத்தை



யெடுத்துக்கொண்டுபோய் பெண்வீட்டிலும் பகவணம் நடந்தது. மாமனால் பெண்ணுக்கு மஞ்சள்காப்புக்கட்டி அப்பால் மாங்கல்யந் தரிக்கிற (திருபூட்டுகிற) காலம் நெருங்கவே பெண்வீட்டிலிருக்கும் மாங்கல்யத்தை யெடுத்துவந்து மாப்பிள்ளை வீட்டிலுள்ள யாவரும் திருபூட்டுவதற்காக வந்திருக்கும் ஒரு பெரியசெட்டியாரும் எல்லாருமாக மாங்கல்யம் பீதாம்பரச்சேலை புஷ்பம் முதலானதுகளை யெடுத்துக்கொண்டு மேளதாளங்களோடும் வித்வ கோஷ்டிகளோடும் மங்கல வாழ்த்தோடும் பெண்வீடுபோய்ச் சேர்ந்தார்கள். இவர்கள் வந்ததும் பெண்வீட்டார் வழக்கமாக யெந்தச் சமையமும் வைப்பதுபோலக் குத்துவிளக்கு வைத்து அழைத்துக் கல்யாணக் கொட்டகையில் விரித்திருக்கும் இரத்தினக் கம்பளத்திலிருக்கும்படி செய்தார்கள். மாப்பிள்ளையும் அவன் தாயுந் தன் வீட்டிலிருந்தார்கள். மற்றெல்லோரும் பெண்வீடுவந்து சேரவே பெண்வீட்டு ஜனங்களும் தயாராகவந்திருந்தார்கள். இலக்கினம் வரவே வீட்டுக்குள் இசை குடிமானமெழுத ஆரம்பித்து நாலு ஓலைகள் வாரி அவரவர் பங்காளிகளில் ஒவ்வொருவர் அவர்கள் கை விரலால் 21 விரல் நீளம் நறுக்கி தலைப்பக்கம் தமிழ்ப்போட்டு யெழுத ஆரம்பித்தார்கள்.

## இசை குடிமானம்.

விபவவருஷம் வைகாசிமீ ௨௳ கல்வாசநாட்டில் இளையாற்றக்குடியான குலசேகரபுரத்தில் ஒக்கூருடையான் வெள்ளையப்பசெட்டி சுப்பிரமணியரோ கோள

சிங்கவளநாடாகிய பிரம்பூர்நாட்டில் மாற்றாரான
வீரபாண்டியபுரத்தில் குளத்தூருடையான் லெட்சு
மணஞ்செட்டி குப்பிரத்தாரோ இவர்மகன் ராமநாத
னுக்கு இவர் மகள் சீதையை பாணிக்கிரகணம்
பண்ணிக்கொண்டமைக்கு இவர் பூஷணம் பூட்டும்
பொன் ஒன்பது ஆறு கல்லெடைப்பொன் பதிமூக்க
ழஞ்சு இவர் சீதனங் கொடுக்கும் பொன் இம்மாறு
இவ்வெடை பொன் ஆறுகழஞ்சு வெள்ளி ஆறுகழஞ்சு
வெண்கலந்தாப்பலம் ஆறுபத்தொன்று வெள்ளாட்
டிக்குப் பணம் முப்பது சீராட்டுச்சக்கரம் ஆறுபத்
தொன்று இவ்வகைப்படி செய்வோம் இவர் நன்கொ
டைகொடுக்கும் பொன் ஆயிரம் மோதிரம் விராக
னிடை மூன்று இவர் உகந்துடையார்க் கொடுக்கும்
பொன் வராகன் எழுகளஞ்சு இவ்வகைப்படி செய்வோம்
இந்தநாள் இவரிடம் பொன் இவர் சொற்படி தெரி
சனை பதிமூக்கழஞ்சு இவ்வகைப்படி செய்வோம்,
பெண்ணின் தகப்பன் மாப்பிள்ளையின் தம்பி இருவர்
கையெழுத்தும் இந்த இசைகுடிமான மெழுதினேன்
கல்வாச நாட்டு விளையிற்றக்குடியான குலசேகரபுரத்தில்
ஒக்கூருடையான் முத்தப்பசெட்டி சுப்பிரமணியன்
கையெழுத்து.

இவ்விதமாகப் பெண்வீட்டாரும் அவாள்
கோவில் பெயர்முதலானதை முன்னாக யெழுதி யெழு
தினவருடைய கையெழுத்தும் போடப்பட்டது.

அதன்மேல் திருபூட்டுகிற செட்டியாரும் பெண்
ணுக்குமாமனும் சில மாங்கல்யப் பெண்களும் திருமங்
கல்யத்தை கையாலுந்தொட்டு வாங்கி வீட்டிற்குட்



கொண்டுபோய் கெடியாரத்தைப் பார்த்துக்கொண்டு
லெக்கினம் வந்துவிடவே மங்கல வாழ்த்தொலிக்க
வாழ்த்துவோர் வாழ்த்த சங்கநாதமொலிக்க புதுக்
காசிப்பட்டுப்புடவை தரித்துக்கொள்ளச்செய்து பெண்
ணைக் கிழக்குமுகமாக நிறுத்தி திருமங்கல்யம் பூட்ட
வந்திருக்கும் பெரியசெட்டியார் கையால் மாங்கல்யந்
தரிப்பித்து மாலையோட்டு பெண்ணுக்கும் மங்கல்ய
ஸ்திரீளாகிய மற்றவர்களுக்கும் மஞ்சள் குங்குமம் புஷ்
பங்கள் வைத்துக்கொள்ளச்செய்து மற்றவர்கள் வெளி
யில்வர பெண்ணும் தோழிகளுமாக வீட்டுக்குளிருந்
தார்கள். அப்பால் வந்திருந்த எல்லா ஜனங்களுக்கும்
தாம்பூலம் பரிமாறி முடிந்ததும் மாப்பிள்ளைவீட்டார்
விடுவந்து சேர்ந்தார்கள். பிற்பாடு யெல்லாருக்கும்
பெண்வீட்டில் சாப்பாடு நடந்தது. மாப்பிள்ளை அன்
றைக்கு விரதம். மற்றுநாள் விடிய காலையில் மாப்பிள்ளை
குதிரையேறி ஊர்க்கோலம்வந்து ஆலாத்தியெடுத்து,
கோவிலுக்குப்போய் சுவாமி தெரிசனைசெய்துகொண்டு
பெண்வீட்டுக்குக் குதிரையிலேயேவந்து நிற்கப் பெண்
ணைச் சிங்காரித்துக் கூட்டிவந்து மாப்பிள்ளைக்குமுன்
முகத்தைக்கையால் பிடித்து நிமிர்த்துக்காட்டி வீட்டுக்
குள் கூட்டிக்கொண்டு போனார்கள். ஜனக்கூட்டத்தில்
இரைச்சலும் கைதட்டு ஜாஸ்திப்பட மாப்பிள்ளை ஏறிவந்
திருந்த குதிரை மிரண்டு கிளம்பிவிட்டது மாப்பிள்ளை
பெண்ணைப்பாராது வெட்கத்தோடு தலைகுனிந்து
கொண்டிருந்தாலுங்கூட குதிரை கொஞ்சம் பதட்ட
மானதென்று தெரிந்து உஷாராக இருந்ததால்
குதிரை வெளிக் கிளம்பினாலுங்கூட பயமில்லாமல்

கொஞ்சதூரம் விட்டு அடக்கி மறுபடியுங் கொண்டு வந்து நிறுத்தினான். ஜனங்களெல்லாங் குதிரை கிளம்பிவிடவே பயந்து நின்றவர்கள் திரும்பிவந்ததும் ராமநாதன் தைரியத்திற்கும் புத்திக்கும் மெச்சிக்கொண்டு அப்பால் யாதொரு கூச்சலுமில்லாது நிசப்தமாயிருந்தார்கள். பெண்ணும் குதிரை கிளம்பிவிட்டதென்று கேட்டவுடனே மெய்பத் துக்கப்பட்டு யாதொரு கோளாறுமில்லாது திரும்பி வந்ததைக் கேட்டதும் மிகுந்த சந்தோஷமுடைந்தாள். மாப்பிள்ளைவந்ததும் மைத்துனன்மார்களெல்லாம் கையில் வெற்றிலை பாக்கு புஷ்பம் முதலானதுகளைக் கொண்டு மச்சின உருண்டை (பூ) எறிந்து மச்சினப் பணம் வாங்க அதில் ஒருவன் கடிவாளத்தைப் பிடித்துக்கொண்டு பணம் (சமிக) 41 வாங்கிக்கொண்டு போய்விட்டார்கள். அப்பால் ஆலாத்தியெடுத்தும் மாப்பிள்ளை வீட்டுக்குப்போய், கீழேயிறங்கி வீட்டிற்குட்போய் ஆகாரமுதலானதுஞ் சாப்பிட்டான்.

மணவறை நடக்கவேண்டியதாகச்சே மாப்பிள்ளை மறுபடியும் குதிரையேறிப் பெண்வீடுவந்து தோழனுந்தானுமாக கொட்டகைக்குள்வந்து ஒருநாற்காலியிலிருந்தார்கள். உடனே மனையின்மேல் ரெத்தினக் கம்பிளி விரிக்கப்பட்டது. மாப்பிள்ளையும் பெண்ணும் கிழக்கு முகமாக மாப்பிள்ளைக்கு வலதுபுறம் பெண்ணும் பெண்ணுக்கு இடதுபுறம் மாப்பிள்ளையுமாக வந்துட்காரச் செய்தார்கள். பஞ்சாங்க அய்யரும் வந்தார். வேண்டிய சாமான்களெல்லாம் பகவணுஞ் செய்யும்போது கொண்டுவந்ததுபோல் வைக்கப்ப



ட்டது. அப்பால் ஹோமம் நவக்கிரகபூஜை முதலானதுகள் நடந்ததும் முளைப்பாரிவைத்து மணமிட்டார்கள். அம்மிமித்து அருந்ததிகாட்டி பெண்ணின் தாய் தகப்பன் தாரைவார்க்க மாப்பிள்ளைக்குத் தகப்பனரில்லாததால் பதிலாக அவன் சிறியபாட்டனார் மகனும் அவர் சம்சாரமும் தாரையேற்றுக்கொண்டார்கள். அப்பால் சடங்குசெய்துகொள்ள விரைக்கோட்டை யெடுத்துக்கொண்டு மாப்பிள்ளை வீட்டிலிருந்து வந்ததும் மணவறையிலிருந்தே மாப்பிள்ளைக்குச்சாத முதலானதும் பெண்ணால் பரிமாறச்செய்து முடிந்ததும் அதுகளை வழக்கப்படி சாப்பிடவில்லை. உடனே அப்புறப்படுத்திவிட்டு பஞ்சாங்கய்யரால் காளாஞ்சிமுதலியதும் வாங்கிக்கொண்டவுடன் அய்யரெழுந்துபோய்விட்டார். நிறைநாழி தீபம் குளவி விரைக்கோட்டை மஞ்சள் விபூதி பருத்திவிரை முதலாகியதாலும் சடங்குகள் செய்துமுடிந்தது. வாழ்த்துப்பாடினார்கள். மாப்பிள்ளைக்கும் பெண்ணுக்குந் திரட்டுப்பால் தடவியாயிற்று. இருவரையும் வீட்டுக்குளழைத்துப்போய் பால் பழஞ் சாப்பிடச்செய்து கும்பிட்டுக் கட்டிக்கொண்டதன்பின் அனைவரும் சாப்பிடச் சென்றார்கள். பிராமணபோஜனமும் ஆயிற்று. சாப்பாட்டின்மேல் பிராமணர்களுக்கு ஒன்றும் அரையும் பூரி ரூபாய் கொடுத்தார்கள். மாப்பிள்ளை வீட்டில் பாட்டுக்கச்சேரி வீணைக்கச்சேரி சதுர்க்கச்சேரி புல்லாங்குழல் வாத்தியம் மேளவாத்தியம் பட்டிக்கிருஷ்ணய்யர் கதையெல்லாம் விமரிசையாகவே நடந்தது.

இராச்சாப்பாட்டின்மேல் குடியழைக்க ஆரம்பித்தார்கள். மாப்பிள்ளையையும் பெண்ணையும் சிங்காரித்து பெண்ணை யெல்லாரிடமுஞ்சொல்லிக்கொள்ளச்செய்து மேளதாள ஆடம்பரத்தோடு பெருங்கூட்டமாக மாப்பிள்ளைவீட்டுக்கழைத்துக் கொண்டுபோய்ச் சேரவே பொங்கலிட்டுப் படைப்பு முதலானது போட்டிருந்தார்கள். அங்குபோனதும் சடங்குசெய்துகொண்டு மணையையும் அரசாணியையும் சுத்திவந்துசட்டிக்குள்ளிருந்து மாப்பிள்ளையெடுத்துக்கொடுக்கும் கிணவாளம் பிள்ளையைபெண்வாங்கி மடியில் வைத்துக்கொண்டு வீட்டுக்குள்போய் செய்யவேண்டிய சடங்குகளுஞ் செய்துமுடித்தபின் பெண்ணையும் பிள்ளையையும் ஊஞ்சலில் வைத்து பாட்டுக்கச்சேரி சதுர்க்கச்சேரிக்காக வந்திருக்கும் தாசிகள்பாடி ஊஞ்சலாட்டிக்கொண்டிருக்க ஊஞ்சல் முடிந்ததும் அவரவரும் படுக்கைக்குப்போனார்கள். மாப்பிள்ளையையும் பெண்ணையும் அங்கிருந்த பெரியவர்களால் ஒரு சாம்பிராணிஉள்ள கட்டிலில் படுக்கைக் கனுப்பப்பட்டது. தற்கால மேற்கண்ட விசேஷங்களெல்லாம் ஒரு நாளில்தானே நடந்துவருகிறது. நமது ராமநாதன் கல்யாணத்திலோ கிரமப்பிரகாரம் இரண்டு நாளில்தான் நடந்தது.

மெஅடையன்று பணமெழுதுவதாகச்சே அஸ்தமித்தபின் இரண்டுவீட்டிலும் யெல்லாரும் வரவரப் பணமெழுத ஆரம்பித்து யெழுதிமுடிந்தது. பெண் வீட்டுக்கு மாப்பிள்ளை வீடும் மாப்பிள்ளை வீட்டுக்குப்பெண் வீடுங்



கூட ஒருவருக்கொருவர் பணமெழுதிக்கொண்டார்கள். பெண் வீட்டில் சுருளுக்குயெழுதிய ரூபாயை ஒரு சுருளில்வைத்து யெழுதிய ஓலைச்சுருளையும் மஞ்சள் தடவி ஒரு தாம்பளத்தில் (மரவையில்) வைத்து வீட்டுக்குள் கொண்டுபோய் கும்பிட்டுக்கட்டிக்கொண்டு அதை மாப்பிள்ளை வீட்டுக்குக்கொண்டுபோய் மாப்பிள்ளையிடங்கொடுத்துகும்பிட்டுக்கட்டிக்கொண்டு வெற்றிலைபாக்கு வாங்கிக்கொண்டுபோய் விட்டார்கள். மாப்பிள்ளை வீட்டில் பணமெழுதிய ரூபாயையும் யேட்டையும் முன்னமே கும்பிட்டுக்கட்டியாய்விட்டது. மறுநாள் மெசுவை மஞ்சள் நீராடினார்கள். உடனே காலையில் யெல்லாரும் சாப்பிட்டுவிட்டு தேவகோட்டைக்குப் போக ஆரம்பித்தார்கள். சாமான்களும் ஜாப்தாப்படி சரிபார்த்து வண்டிகளிலேற்றி அனுப்பப்பட்டது. முலைப்பாரிக்கு பொங்கல் முதலானதும்வைத்து முலைப்பாரியை கொண்டுபோய் ஊர் அரசமரத்தடியிலோ (குளக்கிலோ) கொட்டிவிட்டுவந்து பெண்ணுக்குக் கால் மோதிரம்போட்டு அஸ்தமிக்கு முன் பெண்ணை அழைத்துக்கொண்டு தேவகோட்டைக்கு 8 மணிக்கு வந்துசேர்ந்தார்கள். உடனே இருவரையுஞ் சிங்காரஞ் செய்து ஊர்கோலமாக திவட்டி மத்தாப்பு மேள வாத்திய முதலிய ஆடம்பரங்களோடு வீடுவந்து குடியழைப்பு தினத்தில் நடந்ததுபோல் யெல்லாச் சடங்குகளும் நடத்தி முடிந்து யெல்லாருஞ் சாப்பிட்டார்கள். உடனே காலையில் வந்திருந்தவித்வான்கள் சின்ன மேளம் பெரியமேளம் முதலிய யெல்லாருக்குஞ்

சன்மானஞ்செய்தனுப்பப்பட்டது. அப்பால்நற்சோறிடுகிறது ஆக்கி உண்கிறது என்ற யெல்லாவிசேஷங்களும் கூடிவைக்குள் முடிந்து கொட்டகை முதலானதும் பிரிக்கப்பட்டு வேலைகளெல்லா முடிந்தது. பெண்ணாகிய சீதையும் நமது ராமநாதன் விடுவந்து சேர்ந்தாள். இக்கல்யாணத்திற்கு இரண்டு குடும்பத்திலும் 8000 ரூபாய் செலவு.

---

## பத்தாம் அத்தியாயம்.

---

சீதையினுடைய குணமோ ராமநாதன் குணத்தைப்பார்க்கிலும் அதிக அமரிக்கை. புதுப்பெண்ணாயிருந்தாலுங்கூட தற்காலத்துப் பெண்களைப்போல் மூலையிலிருக்காமலும் கெர்வங்கொள்ளாமலும் கோளிக்கொண்டு போகாமலும் மாமியாருக்கு வேலை செய்வதா என்றெண்ணாமலும் சொந்த வேலைகளையுந்தானே யேற்றுச்செய்வாள். மாமியாருக்கு யெந்த வேலையும் பாக்கியாக வைக்கமாட்டாள். யெல்லாருக்கு முன்னமே யெழுந்து கூட்டிப்பெருக்கிச் சாணம் போட்டு பாத்திரங்களைச் சுத்திசெய்து காலா காலத்தில் ஸ்நானஞ்செய்து சமையலுக்கு ஆரம்பித்து முடிப்பாள். வள்ளியம்மை ஆச்சிக்கும் மருமகளிடத்தில் மிகுந்த அன்பு. மருமகள் தானே யென்று நினைப்பதில்லை. தன் பெண்ணைப்போலவே அபிமானம்.



ராமநாதனுக்கு இவளிவ்விதம் நடந்துவருவது திருப்தியாக இருந்தாலுங்கூட இந்தப்பெண்ணைப்பேசினவுடன் தானே தகப்பனாரிறந்தாரென்று மட்டிலும் அவளிடத்திற் கொஞ்சம் அருவெறுப்புண்டு. அதின் விபரமொருத்தருக்குமே தெரியாது. சீதைக்கி மட்டிலுந்தன் புருஷன் யென்ன காரணத்தினாலோ தன்னிடமபிமானமில்லா திருக்கிறார் அவர் மனதே கரைந்து நம்மீது கருணையுண்டாகட்டுமென்று பணிவாய் நடந்துகொண்டுவந்தாள். இதைப்பற்றி இவளொருவரிடத்திலும் சொல்லவில்லை. நம் நாட்டுவழக்கமோ வெனில் தற்காலம் நாலு நாளாறு நாளுக்குள்ளாகவே இவ்விதமுள்ள விடங்களில் கலகங்கள் வந்து விடுகிறது. இவர்களோ வெளியிலொற்றுமையாய்க் காட்டிவந்தார்களே தவிர வெளிப்படையாக ஒரு நாளுங்காட்டிக்கொள்ளவில்லை. இவளும் ருதுவாகி மூன்று மாதங்கள்தானாகிறது. சிறுவயதாக இருந்தாலுங்கூட புத்தி சாமார்த்தியத்தோடு தானடந்துவந்தாள். இவ்விதமாக ஐந்தாறு மாதங்களாகியும் ஒற்றுமையுண்டாகவுமில்லை விரோதமும் உண்டாகவுமில்லை. ராமநாதன் வெளியிற் போய் வந்தால் கால்கை சுத்திசெய்துகொள்ள செம்பில் தண்ணீர் கொண்டுவந்து வைப்பாள். சாதம் போடுவாள். வெளியிற் போனவன் வருவதற்கு காலதாமதமானால் வருகையை யெதிர்பார்த்து நிற்பாள். இவ்விதமநேக நற்குணங்களமைந்திருந்தும் ஒரு நாளாவது தன்னாயகன் வார்த்தையாடக்கூடவில்லையே யென்ற கவலையைத்தவிர வேறு யாதொரு விதமான கவலையு

யில்லை. இவ்விஷயங்களை இவன் தாய் கொஞ்சங்கொஞ்சமாய்த்தெரிந்துகொண்டபின் தன் மகனிடத்தில் அவ்வொரு சமையங்களில் சொல்லுவாள். அதற்கவனும் சரியான ஜவாப்புச்செய்யாது போய்விடுவான். அப்பால் வள்ளியம்மையாச்சிதாயும் ராமநாதன் பாட்டியுமான பெரிய ஆச்சியிடத்தில் மகள் சொல்லவே அந்த ஆச்சிவந்து தன் பேரனிடத்தில் சொன்னாள். அப்போது மவன் ஒத்துக்கொள்ளவில்லை. சிதையினிடத்தில் நடந்ததென்னவென்று கேட்டாள். அதற்கந்தப் பெண்ணும் இதுவரை தானுந்தன் புருஷனும் பேசினதில்லையென்றும் யாதொரு விதமான காரணமுந்தனக்குத் தெரியாதென்றுஞ் சொல்லவே.

கிழவி:—தன் பேரனிடத்திற் போய் யாதொரு விதமான முகாந்திரமுமில்லாது ஏனிவ்விதம் ஒன் சமுசாரத்தை நடத்துறு?

ராமநாதன் செட்டி:—அவமேலே யெனக்குள்ள வெறுப்பாலே தான்.

கிழவி:—யென்ன வெறுப்பு?

ராம:—அவளைப்பேசி முடிக்கவுந்தானே நப்பச்சி செத்துப்போனாக.

கிழவி:—அதுக்கு அவயென்ன செய்வா?

ராம:—மகனுக்கு கலியாணம் பேசினவரே செத்துப்போனா அவளை கட்டிகினவம்பாடு யென்னம் முடியும்.



கிழவி:—இப்ப ஒனக்கென்ன கொரச்ச?

ராம:—நப்பச்சியில்லாதது தான்.

கிழவி:—இவளைச்செய்தது முந்தியா பிந்தியா?

ராம:—பேசி முடிஞ்சம்பொறகு.

கிழவி:—பேசி முடிஞ்சதானே செத்தாக நீயேன் அவளைச் செஞ்சுக்கிறெ?

ராம:—எல்லாருடைய வேண்டுகோளுக்கும் கோயிலே சாமி சொன்ன நல்ல உத்தரவுக்கும்.

கிழவி:—அப்படியாவது ஒரு பொண்ணைக்கட்டிக்கினு கெடுப்பானே?

ராம:—நானப்பிடி ஒன்னுங்கெடுக்கலியே.

கிழவி:—அவளோடே ஒத்திருக்காட்டா கெடுதியில்லியா?

ராம:—சமாதானமில்லியே மனசுக்கு.

கிழவி:—இப்படியிருக்கச் சம்மதமோ?

ராம:—வேறென்ன செய்யிரது.

கிழவி:—நாலுபேரைப்போலே நல்லா ஒத்திருந்து ரெண்டு பிள்ளை குட்டியைப்பெறவேணுமா?

ராம:—இப்ப யென்ன அவசரம்.

கிழவி:—இனிமே யெப்ப காலா காலத்துலே இருந்தாத்தானே நல்லாருக்கும்?

ராம:—வயசாயிக்கலியாணமானு.

கிழவி—ஆகாமையே யிருந்தா ஆரு சொல்லப்போரா.

ராம:—ஆனது காலேதாஞ் சொல்லிரியோ?

கிழவி:—ஆமா.

ராம:—செய்யத்தானே வேணும்.

கிழவி:—ஒன்னேக்கம் போலே செய்யத்தானே வேணும். சரியென்றொப்புக்கொண்டான். அன்றி இராத்திரிச்சாப்பாட்டின் மேல் ராமநாதன் கட்டிலுக்குப் படுக்கச் சென்றான். அதன்பின் கிழவியால் சீதை சாப்பாட்டின்மேல் சீவி முடிந்து நெற்றி நிறைய விபூதி பூசி கழுத்தில் பூ வைத்திருந்ததோடு காதில் பூடியும் கழுத்தில் மாங்கல்யமுந் தவிர வேறு யாதொரு நகைகளும் போட்டுக்கொள்ளவில்லை. இவ்விதமாக வெற்றிலைப்பெட்டியை கையிலெடுத்துக் கொண்டு படுக்கையறைக்கு வந்ததும் வெற்றிலைப் பெட்டியை கட்டிலில் மெள்ள வைத்துவிட்டு தானுங் கட்டிலினுட்கார்ந்து கால் பிடித்துக்கொண்டிருந்தாள். கண்ணயர்ந்திருந்த ராமநாதன் விழித்துப்பார்த்து தன் சம்சாரமென்றறிந்து பேச யெத்தனித்தானெனினும் வெட்கத்தாற் பேச முடியவில்லை. அப்பால் மனதைத் தேற்றி சங்கோசமில்லாது பேசினான். அதற்கவளுந் தாழ்மையான பதில் சொல்லிவந்தாள். ராமநாதனுக்கு அவளது குணத்தாலும் வார்த்தையாலும் அடக்கத்தாலும் தானே பொங்கிய ஆனந்தமேலீட்டால் கட்டிச் சேர்த்துத் தழுவிக்கொண்டான். அச்சமயம் அவனுக்கிருந்த இன்பமளவற்றதே. அதுவரை அவள் பட்ட துன்பங்களெங்கோசொல்லாது போய்விட்டது. அப்பாலிருவரும் மிகுந்த அன்போடிருந்து வருங்காலொருநாள் தன்னாயகனைப்பார்த்து.



சீதை:—நானொரு குத்தமுஞ் செய்யாமையிருக்கயேன் வெறுப்பாயிருந்திய?

ராம:—ஒண்ணுமில்லே சும்மா தான்.

சீதை:—எனக்கதைச் சொல்லப்படாதா?

ராம:—காரணமிருந்தாத்தானே.

சீதை:—இல்லாமையா அப்படியிருந்திய?

ராம:—எங்கப்பச்சி ஒண்ணைப் பேசனதுநாலே தானே யெறந்தாக.

சீதை:—அதுக்கு நானென்ன செய்வே?

ராம:—அதுனாலே தான்.

சீதை:—என்னைப்பேசாட்டா?

ராம:—பேசாட்டாலென்ன.

சீதை:—சாகமாட்டாகளா?

ராம:—அதென்னமோ அது நாலென்னுதா நானினைச்சிருந்தேன் என்றான். சீதையுமேற்கொண்டு பேசப்பயந்து சரிதானென்று பொறுத்துக்கொண்டு பதில் ஒன்றுஞ் சொல்லாதிருந்துவிட்டாள்.

இப்படி இவ்விருவரும் சிநேகமாகவே இருந்தார்கள். இவ்விதஞ் சிலநாட்சென்றதும் ஓர் நாள் தன் மாமனார் வந்திருந்தவரிடம்.

ராம:—நானெங்கையாவது கொண்டு விக்கப் போக வேணுமென்று நினைக்கிறேன்.

குப்பாஞ்செட்டியார்:—எங்கை போகலாமின்னு?

ராம:—ரெங்கோன் புது ஊரா இருக்கிறதுனாலே அங்கை நாம்போக வேணும்.

குப்பா:—ஆருக்கு?

ராம:—நம்ம சொந்தத்துலே கடை வைக்க.

குப்பா:—என்ன யாபாரஞ்செய்ய?

ராம:—வட்டிக்கிக்குடுத்து வாங்க.

குப்பா:—நீங்கதாம் போகவேணுமோ?

ராம:—நாந்தாம்போகவேணும்.

குப்பா:—வேறையாளனுப்பினு?

ராம:—நல்ல ஆளாக வேணுமே.

குப்பா:—பாத்தனுப்புரது. ஆளுக்குப் பாதியாக் கூட்டும் வச்சிக்குவீமே.

ராம:—நாம் போனு யென்ன?

குப்பா:—பிள்ளை குட்டி பொரந்திட்டா ஒண்ணு மில்லை அதுனுலேதாஞ் சொல்லுரது.

ராம:—ஆரை அனுப்பலாம்?

குப்பா:—எங்க அடுத்தவிட்டு, சுப்பய்யா.

ராம:—அபிப்பிராயம்போல செய்யுங்க.

குப்பா:—கெட்டிக்காரந்தானு?

ராம:—கெட்டிக்காரந்தாம் புதுசு.

குப்பா:—வேலை ஒளுங்காச்செய்வானில்ல?

ராம:—அதுலென்ன தடை.

குப்பா:—சோம்பேரி யில்லையே?

ராம:—சுருசுருப்பான ஆள்.

குப்பா:—சம்பளமென்ன கேப்பான்?

ராம:—1000 வராகன் கேப்பான்.

139 - 72



குப்பா:—முதலென்ன வைக்கலாம்?

ராம:—50000 ரூபாயாவது வைக்கலாம்.

குப்பா:—அதுசரி விலாசமென்ன போடலாம்?

ராம:—அது நீங்கதாஞ்சொல்லவேணும்.

குப்பா:—லெ. குப. சு. ராம போடலாமா?

ராம:—நீங்கசொல்லுரது சரி.

குப்பா:—சுப்பய்யாவைக் கூப்பிடச்சொல்லுங்க.

ராம:—சரியென்று ஒப்புக்கொண்டு ஒரு ஆள் விட்டு, சுப்பிரமணியனைக் கூட்டிகொண்டு வரும்படி சொல்ல அவனும் வந்துசேர்ந்தான்.

குப்பா:—தம்பி சுப்பய்யா நீ யெங்கையாவது கொண்டுவிக்கப் பொரப்பிடலாமா?

சுப்பிரமணியன்:—பொரப்பிடத்தான்வேணும்.

குப்பா:—ரெங்கோனுக்குப் பிரப்பிடலாமா?

சுப்பிர:—நல்லாப் பொரப்பிடுறேன்.

குப்பா:—புதூரல்லவா அதுனுலே பாதகமில்லை?

சுப்பிர:—ஊரு புதுசாயிருந்தாலுந் தொழில் நமக்குப் பழசுதானே.

குப்பா:—மாப்பிள்ளைக்கு நமக்குங் கூட்டாக் கடை வைக்கிரதா நெனைக்குரம்.

சுப்பிர:—ரொம்பநல்லது.

குப்பா:—கிராண்டுகளையும் நகை அடவுகளையுந் தாம் வாங்கிக்கினு குடுத்து வாங்கவேணும்.

சுப்பிர:—அதுதாம்பயமில்லை.

குப்ப. :—சம்பளம் நீயே பேசிக்கிறலாமா வேறு ஆளும்வேணுமா.

சுப்பிர :—நானே பேசிக்கொள்ளலாம்.

குப்பா :—கையில் வேஷ்டியைப்போட்டுச் சம்பளங்கேட்டார் சுப்பிரமணியனும் நிதானமாக 1200 வராகனென்று சொன்னவரும் 800 வராகன் சொல்லி 850 சொன்னார் அவனுக் கடோசியாய் 1050 கூடும் சொன்னான் மத்தியாக 950 வராகனென்று ராமநாதன் முடிவுசொல்ல உடனே சம்பளச்சீட்டு மெழுதி வாங்கினார்கள்.

குப்பாஞ்செட்டியார் :—சுப்பய்யா சுருக்காபொரப்பிட்டலாமல்லவா ?

சுப்பிர :—அப்படியே நல்லாப்பொரப்பிடுறேன்.

குப்பா :—அய்யரைக் கூட்டியாந்து நாள்பாக்கலாமா ?

சுப்பிர :—சரி பாக்கிறது யென்றவுடன் ஒரு ஆளனுப்பி ஜோஸ்யரைக் கூட்டிவரும்படிசெய்து ஒருநாள் பார்க்க சொன்னார்கள். அவரும் அதுபோலெல்லாப் பொருத்தங்களும் பார்த்து பிரமோதூதவருஷம் தைமீ மகடயில் நாள்பார்த்து யெழுதிக்கொடுத்தார். சரியென்றெடுத்து ஷை சுப்பிரமணியனையும் பயணஞ்செய்து சகுனம்பார்த்து நமது ராமநாதஞ்செட்டியாருங்கூட ஆராவயலுக்குப்போய் பயணம் சொல்லிக்கொண்டு சுப்பிரமணியன் புறப்பிட்டு தஞ்சாவூர் வந்து றெயிலேறி சென்னப்பட்டணம் வந்து நாடுமாறி கப்பலில் புறப்பட்டு 13-வதுநாள் றெங்கோன் வந்துசேர்ந்தான்.



ஆராவயலிலிருந்து புதுக்கணக்குப்போட ஒரு நாள் பார்த்து யெழுதினார்கள்.

உடனே ரெங்கோனில் டல்லஹெளசிரோட்டில் முகல் ஸ்டிரீட்டுக்கும் 28 நம்பர் கல்லிக்குமத்தியில் வடபுறத்தில் தைமீ 29உ லெ. குப. சு. ராம விலாசத்துக்குப் புதுக்கணக்குப் போட்டு வேலைகளும் வெகுசீராயு மொழுங்காயு நடந்துவந்தது. வேண்டியபணஞ் சிங்கப்பூரிலிருந்தனுப்பும்படி ராமநாதஞ்செட்டியார் ஆர்டர் செய்திருந்தார். சுமார் மூன்றுலெட்ச ரூபாய்வரை (3,00000) வேலை நடந்துவந்தது. ஒருவருஷமாகவே வேலைகள் ஜாஸ்தியாய்ச்செய்ய ஆரம்பித்து அரிசிக்கண்டிராக்கட்டு செல்கண்ராக்கட்டு முதலிய பெரும்வேலைகளை செய்துவிட்டான். ஊரிலிருந்து யெவ்வளவு கண்டிப்பாக லெட்டர்வந்தும் செய்தவேலையை நடக்கமுடியவில்லை. இப்படி நடந்துவரும்போது ஒரு நகை அடவு பிடித்ததில் ஒரு பர்மாக்காரன் களவுநகையைக் கொண்டுவந்துவைத்து அந்தநகை (வயிரமாலை)யின் பெருமதியாகிய ரூபாய் 7000-க்கு அடவாகச்சே ரூபாய் 5000 வாங்கிக்கொண்டு போய்விட்டான். களவுகொடுத்தவன் போலீசிலெழுதிவைத்து விசாரிக்க ஆரம்பித்தான். இன்னகடையிலடவுவைத்து ரூபாய்வாங்கியிருக்கிறதென்று தெரிந்துவிட்டது. உடனே அந்தக்கடைக்கிவந்து நகைவைத்த ஆசாமி ஊருக்குப்போயிருப்பதாயும், வட்டி இவ்வளவென்றுகேட்டுவரச்சொன்னானென்றுஞ் சொன்னான். சுப்பிரமணியஞ்செட்டியார்நம்பி வருஷம் மாதம்தேதி ரூபாய் வட்டிமுதலான துகளையும் ஆசாமியின்

பேரையும் விபரமாகச்சொல்லிவிட்டவே திருட்டுக்கொடுத்தவன் உடனே போலீசில் வாரண்டெடுத்து கணக்கு கணக்குபுஸ்தகம் செட்டியார் முதலியவர்களையும் அரஸ்டுசெய்து கொண்டுபோனான். செட்டியார் உடனே ஜாமீன்கொடுத்து விலகிக்கொண்டு கேசையும் மேல் நடத்த ஆரம்பித்து ஊருக்குத் தன்முதலாளிகளாகிய குப்பாஞ்செட்டியார் ராமநாதஞ்செட்டியாரிவர்களுக்கும் லெட்டரெழுதினார். லெட்டர்கிடைத்ததும் நமது ராமநாதஞ்செட்டியார் இரண்டு மாஸத்தைக்கி முன்னமே புறப்படவினைத்தார். இந்த லெட்டரைப் பார்த்ததும் பதட்டமுண்டாகி ஆராவயனுக்குப்போய் மாமனாரைக்கண் விஷயங்களை விபரமாகச்சொல்லி தான் புறப்பட ண்டிய அவசியமென்றார்.

குப் :—ரெண்டு மாத்தைக்கி முன்னமே பொரப்பிட னுமின்னு சொன்னிய பிள்ளை கெர்ப்பமாகயிருக்கு னுதாம் பொரப்பிட வேண்டாமின்னு சொன்னது. இப்ப அஞ்சமாசங் கெர்ப்பமாயிருக்கே.

ராம:—துக்கெல்லே யென்னதடை யெல்பார்த்துக்கிற நீங்கதா க்கிறியளே.

குப்பா:—இன்ன நித்தங்குடுக்கலே ஏழாமாசந்தாங் குடுக்கவேனும் நீங்க அதுக்குள்ளே ரெங்கோனுக்குப் புரப்பிட்டுட்டா?

ராம:—புண்ணம்போனா அப்பரம் விசேஷ நடத்தி வீட்டிலேயிருக்க யென்னசெய்யிரது? நீங்ககூட பின் காரியத்தை யோசியாமைப் பேசுரியளே.

143-74



குப்பா:—அப்பசரி பொரப்பிடுங்கயென்று சொல்லவே இருவருமாக தேவகோட்டை வந்து சுப்புகுட்டி ஜோஸ்யரிடத்திலேயே நாள்பார்த்து ஸ்ரீமுகவருஷம் சித்திரைமாதம் 7உ புறப்பிடுகிறதென்று தீர்மானித்துக் கொண்டார்கள்.

வள்ளியம்மை ஆச்சி:—ராமய்யா! இன்னம் அஞ்சாறு மாதஞ்சென்னு பிள்ளைபொரந்தப் பொரகுதாஞ் சிங்கப்பூருக்குப் போவாயின்னு நினைச்சிருந்தேன் இப்பத்தானே பொரப்பிடுரேமிங்கிரா அவளுமுளுகாமையிருக்கிற நித்தங்குடுக்கலே அப்பரம் ஒம்மனசு.

ராம:—நீங்கசெல்லுரது சரித்தாம் பணமிருந்தாத்தானே யெல்லா மதிப்பாயிருக்கும் வீட்டிலே நடக்க வேண்டியதுக்கு நீங்கதானிருக்கிறியளே யெல்லாம் பாத்துக்கிருங்க.

வள்ளியமையாச்சி:—நீ சொல்லுரதுஞ் சரியாத்தானிருக்கு. மகாராசனாப் போயித்துவா வேலே ஒளுங்கு பண்ணிப்பிட்டு சுருக்காவந்திரு.

ராம:—சரி ஒங்க நோக்கப்போலச் செய்யிரேனென்று சொன்னான். அன்றிராத்திரி படுக்கையில்.

சீதை:—ஊருக்கு (தொலெக்கி) போரமின்னு அயித்தை கிட்டே சொல்லிக்கிணிருந்தியளே.

ராம:—ஆமா, பொரப்பிடத்தான் வேணும்.

சீதை:—நானிப்புடி யிருக்கயிலேயா.

ராம:—யெப்படி யிருக்கா.

சீதை:—கெர்ப்பமாக யிருக்கிறனே.

ராம :—இருந்தா யென்ன ?

சீதை:—இன்னந் தீத்தங்குடிக்கலே இப்படி விட்டுட்டுப்போனா யெம்மனசுக்கு யென்னமா இருக்கும் ?

ராம :—என்னமாவு மிருக்கமாட்டாது சவுக்கியமாயிருந்து பரசவிப்பாய். பணமிருந்தாத்தானே மதிப்பாவுமிருக்கும் யெல்லாக்காரியமுஞ் சரளமாயு நடக்குமிது எனக்குத்தெரியாதா ?

சீதை:—சரி ஒங்க கோக்கம்போல செய்யுங்க ?

யென்றிருவரும் பேசி முடிந்தபின் நித்திரை செய்து காலையிலெழுந்து நடக்கவேண்டிய காரியங்களை யெல்லாமுடித்துவிட்டு சிங்கப்பூருக்கு லெட்டரெழுதி ரெங்கூனுக்குந்தான் ௸ புறப்பட்டு வருவதாகத் தந்தியுஞ் சொல்லி தன் தம்பியை யெல்லாக்காரியங்களுக்குந் தேறுதல் சொல்லி ௸ யன்று விடியற்காலையில் யாவரிடமும் பிரயாணஞ் சொல்லிப் புறப்பட்டுச் சகுனம் பார்த்துக்கொண்டு ஆராவயல் வந்து சேர்ந்தார் அன்று மத்தியானம் சாப்பாட்டின்மே லெல்லாரிடமுஞ் சொல்லிக்கொண்டு வண்டியேறி அன்றிராத்திரி கானாடுகாத்தானில் வந்து தங்கி ௸ புதுக்கோட்டை வந்து ௸ தஞ்சாவூரில் ரெயிலேறி ௸ சென்னைப் பட்டணம் வந்து சேர்ந்தார். இவர் வீடுவிட்டுப்புறப்பட்டதும் சம்சார மிகுந்த துக்கத்திலாழ்ந்திருந்தாள். தாயுந் துக்கப்பட்டார்களெனினு மருமகளைத்தேற்றி சமாதானஞ் செய்துகொண்டிருந்தார்கள். அந்தப் பெண்ணுங் கொஞ்சந்தேறி இருந்தாள்.

---

105 - 75



## பதினோராம் அத்தியாயம்.

இவ்விதம் நடந்துகொண்டிருக்க ரெங்கோனில் நடந்த கிரிமினல் கேசில், சுப்பிரமணியஞ் செட்டியார் ஜாமீனபேரில்வந்த மேல்கேசு வாயிதாவென்று ஆஜராய் அடவுவைத்தவன் தனக்குத்தெரியுமென்றும் எங்கிருந்தாலுமவனுக்கு வாரண்டுகொடுத்தால் பிடித்துக் கொடுப்பதாயுஞ் சொன்னார். ஆள் நிறங்குறி உயரம் வயது முதலிய அடையாளங்களோடு வாரண்டுகொடுக்கப்பட்டது. வாரண்டை வாங்கி கூட ஒரு சேவகனையுங் கூட்டிக்கொண்டு அவனிருக்குமிடங்களை விசாரித்துக் கொண்டு ஈந்தட்டாவுக்கு கப்பலேறிப்போயங்கிருந்து அவனிருக்கும் நெய்ப்பாவென்ற ஊர்போய்ச் சேர்ந்தார்கள். ௸ ஆசாமி யிவர்களைக் கண்டதும் மறைவாக இருந்தான். இவர்களும் விடாமல் விசாரித்து அதற்கப்பாலவனிருக்கும் ஊருக்கு பத்துமயில் நடந்துபோய் அவனைக்கண்டார்கள். அவ்வூரிலவன் கொஞ்சம் நாட்டமுள்ளவனாகச்சே இவாகளையும்பிடித்து வாரண்டுமுதலானதுகளைக் கிழித்துவிட்டு வாயிதாத்தேதிவரை மறைவா யோரிடத்தில் பந்தோபஸ்துசெய்து வைக்கலாமென்ற யோசனையோடு இரண்டுபேரையும் பக்காவாய் ஓரிடத்தில் பந்தோபஸ்தாய் வைத்துவிட்டு சாப்பாடு முதலானதுங் கொடுத்துவந்தான்.

ரெங்கோனிலோ வாயிதா அன்றுவரை செட்டியார் வருவாரென்று யெதிர்பார்த்தும் வரவில்லை கோர்ட்டில் இ[illegible]வான வாரண்டும் சேவகன் கொண்டுவந் திரிட்டர்ன் செய்யவில்லை. செட்டியாருஞ் சேவக

147 · 76



னும் வாராததால் யென்ன விசேஷமோ தெரியவில்லை யென்று வாயிதா தள்ளிவைக்கப்பட்டது. நாலுநாளாகியும் வாராததால் கடையிலுள்ள அடுத்தாள் முதலியவர்களும் சந்தேகப்பட்டு ஊருராய்த் தந்திசொல்லிக்கேட்டும் யாதொருவிதமான பதிலுங் கிடைக்கவில்லை. அப்பால் ஊருக்குந் தந்திசொல்லிவிட்டான். செட்டியாரோ தன்னினைவுகூட யில்லாது மயங்கியிருந்தார். சேவகன் (பேதா) மனது பயந்து யென்னநடக்குமோ வென்றெதிர் பார்த்திருந்தான். இவர்களிருக்குமிடமோ நாணல்க் காட்டிற்குள் வாழைத்தோட்டமானதால் வேற்றுமனுஷாள் ஒருவரும் சந்திக்கவில்லை. (இவர்களை பந்தோபஸ்தாக வைத்திருந்த) ஆசாமியும் வாயிதாத் தள்ளிப்போட்டிருக்கிறார்களென்ற விஷயந் தெரிந்தவுடனே வாயிதாக்காலமின்னம் ஒருமாதமிருப்பதாய் வெகு கடினமான பந்தோபஸ்தோடு ஆட்களை வைத்திருந்தானுங்கூட அதுவரை யிவர்களை யாதொருவிதமான இம்சையுஞ் செய்யவில்லை. இவ் விஷயத்தை கெவர்மெண்டு பேப்பர் மற்ற இங்கிலீஷ் பேப்பர்களிலும் பிரசுரித்து அவர்களைதேடி ஒப்பிப்பவர்களுக்கு 500 ரூபாய் சம்மானஞ் செய்வதாகவுங் குறிப்பிட்டிருந்தது.

பிடிபட்டிருக்கிற செட்டியார் தன் முதலாளிவருவருவதாயுந் தந்திவந்திருக்க நம்கெதி யிப்படியாய்விட்டதென்று அடங்கா விசனத்தோடிருந்தார்.

சிங்கப்பூர்க் கூட்டாளியோவெனில் மிகுந்தவருத்தத்தோடு லெட்டரெழுதியிருந்தான். இந்தத் தந்தியும் லெட்டரும்வர அதை ராமநாதஞ்செட்டியார் தம்பி



லெக்ஷ்மணன்செட்டி முதலில் தந்தியையும் பின்பு லெட்டரையும் அடியில்கண்டபடி வாசித்தான்.

தந்தி

தேவகோட்டை

கரு. சா. வெ. சுப. ராமநாதஞ்செட்டி
லெ. குப. க. ராம. சிதம்பரசெட்டி

ரெங்கோன்.

நகையைத் திருடி நம்மிட மடவுவைத்த ஆளைப் பிடிக்க வாரண்டுகொண்டுபோன சுப்பிரமணியஞ் செட்டியாருங் கோர்ட்டுச் சேவகனும் இதுவரை பத்துநாளாகியும் திரும்பி வரவில்லை விசாரித்தமட்டில் யேதோ மோசம்போல் தெரிகிறது உடனே வா. அர்ஜண்டு.

உ

சிவமயம்.

சிங்கப்பூர் ஊர்

கரு. சா. வெ. சுப.

சுக்கில௵ வைங்கூனியீ உயிரு உ.

மெய்யப்பனெழுதிக்கொண்ட திப்பவும் இவ்விடமிதுகடதாசியும் முன்மீ உ0உ கடதாசியும் வரத்தெரியவருமே அவ்விடம் நா [illegible] மீ 10உ கடதாசியும் வந்து சேர்ந்தது. யெத்தனை கடதாசிகளெழுதியும் தாங்களொன்றுங்கவனிக்கவில்லை. இந்த லெட்டர் பார்த்தவுடனே தாங்களாவது லெ. னாவது அவசியம்வந்து சேரவேண்டியது. இனிமேலும் ஆள்வராதிருந்தால் நானிருக்க இசையாது. நான்வந்து வருஷ மூணுக்குமேலாய் விட்டது. யேன் கவனிக்கப்படாது வதிலாள்வந்து கணக்கொப்புக் கொள்ளாவிட்டால் ஆடிமாதம் கணக்கைக் கட்டிக்கொண்டு அவ்விடம் வந்துசேருவேன். மற்ற தாக்கல்பின்பு.

வேணும்,
அண்ணாமலையார் துணை.

இவ்விதம் லெட்டரெழுதி ரிஜிஸ்தர் செய்திருந்தது. அந்தலெட்டருந் தந்தியும்வந்ததை வாசித்துப்பார்த்து உடனே அதுகளை சென்னப்பட்டணத்துக்குத் தன் தமையனுக்கனுப்பினான். இவ்விரண்டும் வரவே ராமநாதன் மிகுந்த வருத்தப்பட்டுக்கொண்டுரெங்கோன்போய் விபரமெழுதுகின்றேனென்று ஊருக்குஞ்சிங்கப்பூருக்கும் லெட்டர் ஜவாப்செய்துவிட்டு நாமொழிக் கப்பலில் ரெங்கோனுக்குப்புறப்படுகிற அன்று இன்று கப்பலேறுகிறேனென்று ஊருக்கும் ரெங்கோனுக்குந் தந்திசொல்லிவிட்டு கப்பலேறினார். கப்பலும் நாலைந்து நாள் ஒழுங்காய்த் துறைமுகங்களுக்குவந்து ஏற்றுவதை யேற்றி யிறக்குவதை யிறக்கி காக்கைநாட்டியிலிருந்து ஆறுநாள் ரெங்கோனுக்குப் புறப்பட்டு இரண்டுநாள்வந்ததும் ஒரு புயல்க்காற்றால் கப்பல் திசைமாறி திக்குத்தெரியாம லடித்துக்கொண்டுபோகவே கப்பலிலிருந்த ஜனங்களை கப்பல் வேலைக்காரர்களும் கப்பித்தானும் வந்து கீழ்க்குத்தலில் தள்ளி கதவை யடைத்து பாய்மர முதலானதுகளையுமிறக்கி மிஷின்களும் ஆடாமல் நிறுத்திக் றவ்வாட்டமாகவே கப்பலை விட்டுவிட்டார்கள். பலிலிருந்த ஜனங்களோ நிர்ச்சீவர்களாய் இந்துக்கள் சிவா! மகாதேவா! ஆண்டவனே! காப்பாற்றவேணுமென்று காணிக்கை செலுத்துவதாகவும் காவடியெடுப்பதாகவும் மதுரைமீனாக்ஷி சொக்கலிங்கம் திருப்பரங்குன்றம் குன்றக்குடி பழனி வயித்தீஸ்வரன்கோவில் திருவண்ணாமலை திருப்பதி முதலிய ஸ்தலங்களை நேர்ந்துகொண்டார்கள். மகமதியர்களோ அல்லா! அல்லா! ஆண்டவனே! நாயனே! உன் காவலென்று நாகூர் மக்கம்மதீனா முதலிய பள்ளி



வாசல்களுக்கு. நேர்ந்துகொண்டு நாகூராண்டவனே! மகமதுநபியே காக்கவேண்டுமென்று சத்தமிட்டுத் தொழுதுகொண்டிருந்தார்கள். தெலுங்கர்களோ ராம் ராம் சீதாராமென்றுத் தோத்திரஞ் செய்துகொண்டிருந்தார்கள். நமது ராமநாதஞ்செட்டியாரோ பட்ட துக்கத்துக் களவில்லை. ஒவ்வொரு காரியங்களாக ரெங்கோன்கடை சிங்கப்பூர்கடை தன் சம்சாரங்கெர்ப்பமாக இருப்பது இதுகளை நினைத்து துக்கப்படுவார். என்ன துக்கப்பட்டும் ஆகிறதொன்றுமில்லையேயென்று தேறுவார். இவ்விதங்கப்பலேறி மூ நாளாகியும் 8 நாள் சவுக்கியமாயிருந்து பின்பு 6 நாள்பட்ட கஷ்டத்துக்களவில்லை. கப்பல் ஜோலாயே போய்க்கொண்டிருப்பதால் அவரவர்களே தடுமாடி விழுந்துஞ் சாமான்கள்விழுந்தும் அனேகஜனங்களுக்கு கால் கை முதலிய அவயவங்களில் பெரியகாயங்களுண்டாகி வருத்தப்பட்டுக் கொண்டிருந்தார்கள். இனப்பிரகாரங் காப்டன் (கப்பித்தான்) கீழ்க் குத்துக்கு வந்து தைரியஞ்சொல்லுவான். ஜனங்கள்படுங் கஷ்டத்திற்கோ அளவில்லை. 13-ம்நாள் காலையில்சேருங் கப்பல் 16 நாள் வரையிலும் ஒருதுறைமுகத்தையுங் காணாது தவித்துக்கொண்டிருந்தது. ஜனங்கள் சாப்பாடுகூடயில்லாது மயங்கினார்கள். கப்பல் ஜாஸ்தியான ஆட்டத்தால் மேலேபோய் சமையல்செய்ய முடியவில்லை. ஏக தேசத்தில் சமையல்செய்து கொண்டுவருஞ் சில தைரியசாலிகள் சமைத்து கஞ்சியாய் ஊற்றிவந்தார்கள். 12 நாளைக்கு வாங்கிவந்த சாமான்கள் மேற்கொண்டு யிரண்டு மூன்றுநாள்வரை யிருந்தது. அப்பால் சாமானில்லாது தவிக்க, கப்பல்காரர், தங்களிட

டருக்குஞ் சாமான்களைக் கொடுத்தார்கள். அப்படிக் கொடுத்தாலுஞ்சரியானபடி கொடுக்கமுடியுமா? ஜனங்களுமகப்பட்டவரை சந்தோஷமாகவே வாங்கிச்சமயல் செய்து சாப்பிட்டார்களெனினும் கப்பல் கரைசேரவில்லையே யென்றும் 13ம் நாள்போய்ச் சேருங்கப்பல் 16 நாளாகியுங் கரைகூடக்காணாது ஓடிக்கொண்டிருக்கிறதேயென்றும் ஒவ்வொருவருந் துக்கித்துக்கொண்டிருந்தார்கள். நமது ராமநாதஞ்செட்டியாருந் தாம் பினாங்குக் கப்பலேறியபோதும் அவஸ்தைப்பட்டிருந்தாலுங்கூட இரண்டொருநாள்தானே அவஸ்தையாக இருந்தது. தகப்பனாருங்கூட இருந்து தைரியஞ்சொல்லிவந்தகால்சலனமில்லாதிருந்தோம்தற்போதோவெனில் ஒருவாரமாக கஷ்டப்பட்டும் கரைகாணாதிருக்கிறோமேநம்மால் யாவரும் துன்பந்தானே அடைவார்கள் மாமனார்சொன்னாரே! தாயார்சொன்னார்களே!! சம்சாரந் துக்கப்பட்டாளே! யெல்லாருக்குந்தேருதல் சொல்லிவந்த நம்முடையகெதி அதோகெதியாக இருக்கிறதே! ரெங்கோனிலோ தாறுமாறான வியாபாரம் நடந்துகொண்டிருக்கிறது. கிருமினல்கேசுவேறுநடக்கிறது. ரூபாய் 5000 பிடிபிடித்தது விழுந்துபோயிற்று. கொண்டுவித்த ஆளோ போனவிடந்தெரியவில்லை. சிங்கப்பூர் ஆளோ கணக்கை கட்டிக்கொண்டு வேலையை நிறுத்திவிட்டு ஊர் வந்துசேருவெனென்றெழுதியிருக்கிறான். தாய் சகோதரர் சம்சார முதலியவர்களோ ஊரிலிருக்கிறார்கள். நம்முடைய நிலைமையை யாரறியப்போகிறார்கள். எல்லாம் ஈஸ்பர செயலென்று கலக்கமும் பீதியும் தன்னினைவுமற்றுத் தவித்துக்கொண்டிருந்தார். கப்பலோ யாதொருசேதமு மில்லாது



ஓடிக்கொண்டே இருந்தது. கப்பலிலிருந்த தீவனச்சாமான் சமையல் சாமான் முதலியதும் நெருங்கி விட்டது. ஜனங்களுக்கு கப்பல்காரரால் கொடு[illegible] பட்டுவந்த சாமானுங் கொஞ்சமாகக்குறைந்து [illegible] ாகிவிட்டது. அனேக ஜனங்கள் தன்னினை[illegible]ந்து மயங்கிக்கிடந்தார்கள், காப்டனோவெனில் யாதொன்றுஞ் செய்யவியலாது சுக்கானைமட்டும் காற்றுப்போல் திருப்பிக்கொண்டிருந்தான்.

இவ்விதங் கப்பலோ கடலில் திசைமாறி ஓடிக்கொ[illegible]க்க கம்பெனிக்காரருங் கெவர்மெண்ட[illegible] 13-வது நாள் வரக்கூடிய கப்பல் 16 நாள்வரை வராமலிருக்கிறதே யென்ற பதட்டத்தோடும் [illegible]ரும் [illegible]லும் [illegible]ா, பொம்பாய், காக்கிநாடா, சென்னை, புதுச்[illegible] இடங்களுக்கு தந்திசொல்லி பதில்கேட்டு[illegible] பிரயோஜனப்படவில்லை. யென்ன சமாசாரங் கிடைக்குமென்று ஒவ்வொருதந்தியையு மொவ்வொரு சமையமு மெதிர் பார்த்துக்கொண்டிருந்தார்கள். புதுவை காக்கிநாடு சென்னை முதலிய ஊர்களிலுள்ளவர்களோ ஒவ்வொருவருந் தங்கள் மனுஷாள் கப்பலேறியிருக்[illegible]த முன்னிட்டு அக்கப்பலில் யேறியிருக்கும் மனுஷ[illegible] சொந்தக்காரரெல்லாங் கப்பலுக் கபாய[illegible]டதோ? திசைதப்பிவிட்டதோ? ஒன்றுந் தெரியவி[illegible]? என்ற துக்கத்துடன் எங்குபார்த்தாலும் [illegible]ாருக்கு தந்திசொல்லுவதும் பதில் கேட்பதுமா[illegible]யிருந்தார்கள். தேவகோட்டையில் [illegible]மது ராம[illegible]செட்டியார் வீட்டிலோ 16 நாள் [illegible]ரயிலும் [illegible]ன் தாக்கல் வருமென்றெதிர்

பார்த்தும், யாதொரு விதமான தாக்கலும் கிடைக்காத தால் உடனே வெ. குப்பாருசெட்டியார் சென்னைக் குத் தந்திமூலமாய்ப் பதில்கேட்டார். இன்னும் வரவில்லை பெ[illegible] று பதில் கிடைக்கவே யில்லை. ரும் பெருந்துக் கப்பட்டிருக்க வெளியிலுந் தெ[illegible]டைய அந்தத் துக்கு அளவில்லை. அவள் ஒவ்வொரு சமயமும் தானுந் தன் கணவனுமிருந்த சந்தோஷத்தையும் அனுபவித்த சுகத்தையும் பேசிக்கொண்ட அருமையையும் வாக் கின் சாதுர்யத்தையும் சமைய உசிதமான புத்தி மதி யையும் ஒவ்வொரு உறுப்புக்களின் (அவயவங் களின்) அலங்காரத்தையுஞ் சதாநினைந்துருகு[illegible] தைத் தவிர அன்னமருந்தாள், தலைமுடியாள், எண்[illegible] யாள் பாயிற்படுக்காள், சேலையாற்றாள் [illegible] யாள், ஒருவருடனும் பேசாள், யாரொடு[illegible] காதுகொடாள், எவரையும் பாராள், பூமியைப்பார்த்த வண்ணமே சதாக் கண்ணீராறாய்ப் பெருக்குவதை தவிர வேறொன்றுங் கவனிக்காது பெருந்துன்பக் கடலில்வீழ்ந்து தன் கணவனைப்போலத் தானுங் கரை காணாது தவித்தாள் இப்படித் தவித்துக்கொண்டிருக் கும்போது,

மற்ற விவரங்கள் இரண்டாம்பாகத்தில் தெரி[illegible]ம்.

இரண்டாம்பாகம் சீக்கிரம் வெளி[illegible].

Printed by Thomp[illegible],
at the "Minerva" Press, [illegible], Madras.



அருமையான நாவல்கள் தயாராகிக்கொண்டிருக்கிறது.

## மாங்கல்யப்பிச்சை

அல்லது

## கற்புக்கரசி.

புதுக்கோட்டையில் மங்கம்மாள் அரசாட்சிசெய்த காலத்தில் நடந்த உண்மையான அற்புத கதை உயர்ந்த தமி ழில் எழுதப்பட்டது. விலை ரூ. 1

## காமவல்லி.

காமரசம் நிறைந்ததும் கற்புத்திரத்தக்கதுமான இனிய அரியதமிழ் நாடகம் படிக்கப்படிக்க ருசியாக இருக் கும். விலை ரூ. 1.

மானேஜர்,
சுதேச பரிபாலினி,
59, 29-நம்பர் தெரு,
இரங்கூன்.

## மாஜிக்பாம்.

(கைகண்ட ஓர் திவ்[illegible]ய ஔஷதம்).

பிரபல டாக்டர்களால் பரிசோதித்து அற்புதமான மருந்தாக ஒப்புக்கொள்ளப்பட்டது.

தலைநோய்களை 5-நிமிஷத்தில் கண்டிக்கிறது. இருமல் மார்சளி, கபம் இதுகளை 10-நிமிஷத்தில் கண்டிக்கிறது.

மூன்றுவேளையில் இடுப்புநோய், பாரிசவாய்வு, மூட்டு வீக்கம் இதுகளை அற்புதமாகக் கண்டிக்கிறது. தேள் கொட்டின இடத்தில் தடவி தேய்த்தால் உடனே சொஸ்த மாகிறது.

பல்நோயை உடனே நீக்குகிறது.

[illegible]ல்ல சுகந்தவாசனை யுள்ளது. டப்பி 1-க்கு விலை ரூ. 1.

மற்றமருந்துகளுக்கும் கியாட்லாக்கு தயாராகவிருக் கு. இனமாக அனுப்பப்படும். விலாசம்,

இராமலிங்க முதலியார்,
நெ. 30. சட்டண்ண நாயக்கன் தெரு,
ஜார்ஜ் டௌன் மதராஸ்.

154

# "சுதேச பரிபாலினி"

உயர்தர

வாராந்தரத் தமிழ் பத்திரிகை.

நாட்டுக்கோட்டை நகரத்தாரர்களாலும் மற்ற வர்த்தகர்களாலும் மிகுந்து வாங்கி வாசிக்கப்பட்டு வருகிறது. முக்கியமாக வர்த்தகம், தொழில், வி[illegible]யம், ராஜ தந்திரம் கோர்ட்டு விவகாரங்கள், சட்டங்கள், தீர்மானங்கள், தேச வர்த்தமானங்கள் முதலிய சகலமும் தெளிவாக எழுதப்படுகிறது. இதைவிடத் தமிழ் வாராந்திரப் பத்திரிகை வேறு இல்லை. வருஷ சந்தா ரூ. 5.

[illegible] விகிதம் சகாயமாகப் போடப்படும்.

மானேஜர்,
சுதேச பரிபாலினி,
59, 29 கம்பர் தெரு,
இரங்க[illegible]

9798

---

## காசி! காசி!! காசி!!!

ருத்திராட்சங்கள், வயிரவர் கயிறு, காசிதலைப்பட்டு, சேலைகள், ரவிக்கைகள், துப்பட்டாக்கள், சால்வைகள் முதலிய சகல தினுசுகளும், சகாய விலைக்கு அனுப்பப்படும் கியாட்லாக்கு இனாமாக அனுப்பப்படும்,

விலாசம்,
பட்டு பீதாம்பர கம்பெனி,
கா[illegible]
*Benar[illegible]*

2117

V2119 6W N08